VEMBER 1943 6 Annas

354

காவேரி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 DEC 1943
MADRAS

READ **The Cauveri** -
IDEAL MAGAZINE FOR THE HOME

நறுமணம் வீசும்

கிட்டப்பா மார்க்

ரிஜிஸ்டர் நெ. 61

புகையிலை & சீவல்

உயர்ந்த சிவபுரி புகையிலையின் தயாரிப்பு. செயற்கை வஸ்துக்கள் இல்லாத இயற்கைச் சுவை, மணம், குணம் இவைகளடங்கியது.

ஒருதரம் உபயோகித்தால் அதையே விரும்பி உபயோகிப்பீர்கள். 'கிட்டப்பா' சீவலும் அப்படியே. அப்புகையிலைக்கு இணைபிரியாத நண்பன்.

எப்பொழுதும் இவைகளையே உபயோகியுங்கள்.

சென்னை ஸிட்டிக்கும் பிரநிதிகளில்லாத மற்ற நகரங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

சென்னை பிராஞ்சு:-
16, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

A. D. சுல்தான் & Co.,
கும்பகோணம்.

2 DEC 1943
MADRAS

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

KUMBAKONAM.

தி காமன்வெல்த் பாங்கு லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: பெரியதெரு, கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—கொடவாசல், ஆடுதுரை, ஜயங்கொண்டசோழபுரம், வலங்கைமான், திருவிடமருதூர், அரியலூர்.

கரண்டு அக்கவுண்டுகள், ஸேவிங்ஸ் பாங்க டிபாஸிட்டுகள், பிக்ஸட் டிபாஸிட்டுகள், கால் டிபாஸிட்டுகள் முதலியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அங்கீகரிக்கப்படும் ஸெக்யூரிட்டிகளின்மேல் கடனும் காஷ் கிரெடிட்டும் கொடுக்கப்படும்.

நெல், அரிசி, தானியங்கள், நூல், பீஸ்-குட்ஸ், தங்க நகைகள், வெள்ளிக்கட்டிகள் இவைகளின்மேல் பணம் தரக்கூடும்.

15—9—43 புதன்கிழமை அரியலூரில் ஒரு கிளை ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கும் எல்லாவிதமான பாங்கு அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்.

V. K. ராஜகோபாலன்,
செக்ரடரி,

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில் உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனுரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

★ பொருளடக்கம் ★

சுபானு மலர் 3 — புரட்டாசி இதழ் 2

இத்தாலியில் நேசதேசப்படைகள்	... ...	4
கதம்பம்	... ...	6
அக்கப்போர்	... தி. சே. சௌ. ராஜன்	10
வெற்றியின் அருணோதயம்	... க. சந்தானம்	15
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	... "ராமையா"	17
பாமினியின் கொலு	... எம். எஸ். கமலா	20
ஷஷ்டாஷ்டகம்	... கே. சுந்தரம்மாள்	25
காற்று வாத்தியங்கள்	... அனந்தவைத்தியநாதன்	34
பிராயச்சித்தம்	... எம் எல். சபரிராஜன்	38
முத்திமார்க்கம்	... எஸ். கிருஷ்ணன்	41
ஸுஜாதா	... கமலா பத்மநாபன்	47
ராதையின் தந்திரம்	... சத்தியதாமா	54

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப்பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

யுத்தகாலத்திலும் இடைவிடா முன்னேற்றம்!

நியூ ஏஷியாடிக்

1942-ல்

பூர்த்தியான பாலிஸி துகை	ரூ. 60 லக்ஷத்திற்குமேல்
பிரிமிய வருமானம்	ரூ. 9·5 லக்ஷத்திற்குமேல்
ஜீவிய நிதி	ரூ. 14·5 லக்ஷத்திற்குமேல்

நீங்கள் இன்ஷ்யூர் செய்யவோ, ஏஜன்ஸி எடுக்கவோ ஏற்ற கம்பெனி இதுவே.

ஆயுள், தீ விபத்து, மோட்டார் கார், கப்பலில் சேதம் முதலிய இன்ஷ்யூரன்ஸ்களும் செய்கிறது.

ஆகாய விமானம், கப்பல், ராணுவம் முதலியவைகளில் ஈடுபடாத சாதாரண மக்களுக்கு எதிரிகளினால் ஏற்படும் விமானப்படையெடுப்பு, விமானக்குண்டுவீச்சு முதலான ஆபத்துக்களிலிருந்து எங்களுடைய பாலிசிகள், பாதுகாப்பு அளிக்கின்றன. இதற்காக அதிகப் பிரீமியம் இல்லை.

நியூ ஏஷியாடிக் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: நியூ டெல்லி.

மதராஸ் பிராஞ்சு: 289 லிங்கச்செட்டித்தெரு, சென்னை.

பிராஞ்சு மானேஜர்: அ. சுப்பையா.

காவேரி

சுபானு மலர் 3	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	புரட்டாசி இதழ் 2

இத்தாலியில் நேசதேசப் படைகள்

மத்தியதரைக் கடலில் நேச நாடுகளின் ஜயபேரிகை, பிறகு முஸலீனியின் விழ்ச்சி, அதைத் தொடர்ந்தாற்போல் இத்தாலியின் சரணுகதி—இவை எல்லாம் நேச நாடுகளுக்கு யுத்தத்தில் வெற்றி என்பதைத் தெளிவு படுத்தின. ஜர்மானியர்கள் ரஷ்யாவில் பின்வாங்கும் வேகத்தைப் பார்த்தால் அவர்கள் மிகவும் களைத்துப்போய்விட்டார்கள் என்று கூடத் தோன்றிற்று.

ஆனல் யுத்த தந்திரங்களில் கை தேர்ந்தவர்கள்மட்டும் இவற்றை ஒப்புக்கொள்ளமறுத்தார்கள். ஐரோப்பாவில் காலடிவைத்து ஹிட்லரின் அசுரப்படைகளுடன் சண்டைசெய்து வெற்றியடைவது மிகக் கடினமான காரியம். ஹிட்லர் தன் முழுபலத்தையும் அங்கேதான் உபயோகிப்பான். ரஷ்யாவில் நாட்ஸிபடைகள் பின்வாங்குவதும் நேசநாடுகளின் தாக்குதலை ஐரோப்பாவில் சமாளிக்கவே எனவும் கூறினர்கள். ரஷ்யாவில்தான் ஜர்மானியர்கள் லக்ஷக்கணக்காக மடிந்து பலஹீனமடைந்துவிட்டார்களே என்று நமக்குத் தோற்றலாம். ஆனல் ஹிட்லரின் ராணுவத் தந்திரத்தை அறிந்த பலர், 'நாட்ஸிப்படைகள் பின்வாங்குவதில் அதிக நஷ்டமடைவதில்லை; ஆகையால் ரஷ்யாவிலிருந்து வெளிவரும் அறிக்கைகளை நம்பி நாம் ஹிட்லரின் பலம் குன்றிவிட்டது என்று நினைக்க இடமில்லை' என்கிருர்கள்.

இது உண்மையாக இருக்கலாமெனத் தோன்றுகிறது. இப்பொழுதெல்லாம் ஜர்மன்—ரஷ்யப் போரைப்பற்றிய ஜர்மன் அறிக்கை நம் பத்திரிகைகளில் பிரசுரமாவதில்லை. ரஷ்ய அறிக்கை மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது. இதன்படி பார்த்தால் ரஷ்யர்கள் ஒவ்வொரு ஊரைப் பிடிப்பதற்கும் ஏராளமான படைகளைத் திரட்டிக் கடும்போர் புரிந்து திரும்பப் பெறவேண்டியிருந்தது என அறிகிருேம். அறிக்கையில் கடும்போர் என்று குறிப்பிடப்படுகிறதேயொழிய ரஷ்யர்களுக்கு எவ்வளவு சேதம் என்ற புள்ளி விபரம் ஒன்றும் சொல்லப்படுவதில்லை. ஆனல் ஜர்மானியர்கள் ஆயிரக் கணக்கில் தினந்தோறும் மடிகிருர்களென்றும், அனேக யுத்த தளவாடங்கள் அவர்களுக்கு நாசமென்றும் நமக்கு அறிவிக்கப்படுகிறது. இவ்வறிக்கைகளிலுள்ள புள்ளி விபரங்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் ஜர்மானியர்கள் இன்று வேருடன் அற்றுப்போயிருக்கவேண்டும். ஆனல் இன்று அவர்கள் இத்தாலியில் போடும் சண்டையைப் பார்த்தால் அவர்கள் பலம் அதிகமாகக் குன்றியதாகத் தெரியவில்லை.

ரஷ்யாவில் முதன்முதலாகப் பனிக்காலத்தை உத்தேசித்து ஜர்மானியர்கள் பின்வாங்க நேரிட்டபொழுது ரஷ்யர்கள் நாட்ஸிப்படைகளைத் துரத்தியடித்தனர் அப்பொழுது வந்த அறிக்கைகளிலிருந்து ஜர்மானியர்கள் ஒழிந்தார்கள் என்று நினைத்தோம். ஆனல் நாட்ஸி ராணுவத் தலைவர்கள் ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள். சில குறிப்பிட்டதிருடசாலியான படைகளை முன்னணியில் நிறுத்திச் சண்டை செய்யச் செய்து தங்களது முழுப்படைகளையும் வாபஸ் செய்துவிட்டார்களாம். இதனல் நாட்ஸிப் படைகள் அதிக சேதமடையவில்லையாம். அமெரிக்கப் பத்திரிகைகள் இதைத் தெளிவுபடுத்துகின்றன. ஆகையினல்தான் இன்று யுத்தம் ஆரம்பமாகி நான்குவருடங்கள் ஆயினும், ஹிட்லர் இன்றும் பலசாலியாகவே விற்றிருக்கிருன்.

சமீபத்தில்மட்டும் அதிவேகமாக ஹிட்லரின் படைகள் ரஷ்யாவிலிருந்து பின்னடைந்து வருகின்றன. இதற்குக் காரணம் இத்தாலியின் உள்நாட்டுக் குழப்பமும் நேசப்படைகள் அங்கே புகுந்து ஜர்மானியைத் தாக்கக்கூடும் என்ற பயமும்தான்.

இப்படி அநேகமாக எல்லாப் படைகளையும் ரஷ்யாவிலிருந்து வாபஸ் செய்துவிட்டால் ரஷ்யப்படைகள் தங்கள் தேசம் முழுவதையும் திருப்பிப் பிடித்துக்கொண்ட பிறகு சும்மாவிருக்குமா? ஜர்மானியையும், பால்கன் நாடுகளையும் தாக்க முயற்சிசெய்யலாமல்லவா? இதைச் சமாளிக்க ஹிட்லரால் முடியுமா என்ற பிரச்னை எழுகிறது.

ரஷ்யர்கள் நாட்ஸியர்களை ரஷ்யாவிலிருந்து ஓடச்செய்யக் கணக்கற்ற மக்களையும் தளவா

டங்களையும் பறி கொடுத்திருக்கவேண்டும். நாட்ஸி அசுரப்படைகளை முறியடிப்பதென்றால் இந்நாசம் இருந்தே தீரும். ஆகையினால் ஹிட்லர் ஒருகால் ரஷ்யா சோர்வடைந்துவிட்டது, அதன்பலம் குன்றிப்போய்விட்டது, அதன் பிரதேசங்களை நாம் விட்டுவிட்டால் அது சும்மா இருந்துவிடும், நம்மேல் எதிர்த்து வர அதற்குத் திறனிருக்காது என்று எண்ணி இந்த வாபஸ் திட்டத்தைச்செய்து வருகிறார் எனவும் தோன்றுகிறது. ஆகையினால்தான் அச்சமின்றி, கொஞ்சங் கொஞ்சமாக ரஷ்யாவில் தான் புத்தியின்மையால் வைத்தகாலை விடுவித்துக்கொண்டு வருகிறார் எனத்தோன்றுகிறது.

அப்படியானால், அங்கிருந்து வாபஸ் ஆன படைகளெல்லாம் இத்தாலியில் இறங்கியிருக்கும் நேசதேசப் படைகளைச் சமாளிப்பதிலும், பால்கன்ஸ் பிரதேசத்தில் நேசப்படைகள் தலைகாட்டாமலிருப்பதிலும் முனைந்திருக்கின்றன என்று தோன்றுகிறது.

இத்தாலியில் படாக்ளியோ சரணம் புகுந்ததிலிருந்து ஜர்மானியர்களுக்குச் சைத்தான் பிடித்தது என்று எண்ணினோம். ஆனால் ஹிட்லர் அதைச் சமாளித்துக்கொண்டு இன்று நேசதேசப் படைகளை எதிர்த்து நிற்பதைப்பார்த்தால் நேசதேசத்தார்தான் நிலைமையைச் சரிவர உணராமல் இத்தாலியில் கால் வைத்துவிட்டார்களோ எனச்சந்தேகிக்கும்படியாக இருக்கிறது.

ஜப்பான், சைனாவுடன் நெடு நாளாகச் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறது, ஆகையினால் அது மிகவும் பலஹீனமடைந்திருக்கும் என்று எண்ணி ஏமாந்தார்கள் நேசதேசத்தார்கள். அதேமாதிரி ரஷ்யாவுடன் சண்டையிட்டதினால் ஜர்மானியரின் பலம் குன்றிவிட்டது என எண்ணி இத்தாலியில் புகுந்திருப்பார்களானால் மிகவும்வருந்த நேரிடும். இன்று இத்தாலியில் நடக்கும் யுத்தத்தைப்பார்த்தால் ஜர்மானியர்கள் இப் படையெடுப்பையும், இத்தாலியர்களின் சரணாகதியையும் எதிர்பார்த்துத் தயார் செய்திருக்கிறார்களெனத் தோன்றுகிறது.

அமெரிக்கப்படைகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு நிலைமையைச் சமாளித்துக் கொண்டு வருகின்றன' என்ற செய்தி கவலைக்கிடமாகிறது. ஆனால் நேசதேசத்தாரின் கப்பற் படைக்கு இன்று எங்கும் நிகரில்லை என்று இத்தாலியின் சரணாகதியிலிருந்து ஏற்பட்டுவிட்டது. விமானப்படையில் நேசதேசத்தார் கை ஓங்கிவிட்டது என்பது வெட்டவெளிச்சம். ஆயினும் இத்தாலியில் சண்டையிடுவதில் ஜர்மானியர்களுக்குத்தான் அதிக வசதி. எனினும் நமது நேசதேசத்தார் எதிரியின் பலத்தைக் குறைவாக நினைக்காது போதிய வசதிகளுடனும் பலத்துடனும் இத்தாலியைத்தாக்க ஆரம்பித்திருந்தார்களானால் வெற்றி நிச்சயம். இத்தாலியிலும் ஜர்மானியர்களுக்குத் தோல்வி ஏற்பட்டால் அவர்கள் மனமுடைந்துபோய்விடுவார்கள். யுத்தம் எளிதில் முடிவடைந்துவிடும். வரும் மாதங்கள் மிகவும் கவலைக்கிடமாக இருக்கும். தீவிரமான சண்டை இனிமேல்தான். நல்லெண்ணமும் எளிய நேசநேசத்தினருக்கு நன்மை பயக்க வேண்டுமென்ற ஊக்கமுமிருக்குமாகில், நேசதேசத்தார் இக்கொடும் போரில் வெற்றி பெறுவது திண்ணம். உலக மக்களின் ஆசியைப் பெற அவர்கள் முயலவேண்டும்.

நவீன கர்ணன்

மக்களின் கல்விப் பயிற்சிக்காக நன்கொடையளிப்பது சிறந்த தர்மம். சமீபத்தில் ஐந்து லக்ஷம் ரூபாய் உயர்தர கல்விப் பயிற்சிக்காக அண்ணாமலை சர்வகலாசாலைக்கு நன்கொடை அளித்த மஹான் இவர்தான் புதுக்காடு கொச்சின் டெக்ஸ்டைல்ஸ் முதலாளியான **ஸ்ரீ. ராம. அழகப்ப செட்டியார்.** இம்மாதத்தில் தம் புதல்வியின் திருமணத்தன்று தமிழ் அபிவிருத்திக்காக ஒரு லக்ஷம் ரூபாய் திருவாங்கூர் உயர்தர சர்வகலாசாலைக்கு அளித்துள்ளார்.

தமிழ் மக்கள் இவ்வள்ளலை என்றும் மறவார். இவர் நீடூழி வாழ்ந்து பொது மக்களுக்கும், பாரத நாட்டிற்கும் தொண்டு செய்து பெரும் புகழை அடையவேண்டுமாறு இறைவனை வேண்டுகிறோம்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு" [திருக்குறள்]

கதம்பம்

ஓர் புதிய நாடகம்!

சாம்ராஜ்ய ஸ்தாபக ரக்ஷக சபையாரால் குவிபெக் நாடகக் கொட்டகையில் நடத்தப்பட்ட 'அச்சு-ஸம்ஹாரம்' என்ற நாடகத்தை நமது ஸ்பெஷல் நிருபர் விளக்கியுள்ளார்.

பிரமாதமான விளம்பரம். சர்ச்சில் கோஷ்டியார் நடித்தது. ஸ்டாலின் அயன் ராஜ 'பார்ட்' என்று ஒரு சோப்பேறி, வதந்தியைக் கிளப்பிவிட்டான். அதனால் விசேஷப்பரபரப்பு மக்களிடையே காணப்பட்டது. முடிவில் ஏமாற்றம்தான்.

காட்சி 1

[சூத்திரதாரராய்ச் சர்ச்சில் பாடிக்கொண்டு வருகிறார்.]

(ராகம்-ஹிந்துஸ்தானி பியாக்-தாளம்--ஆதி.)

பல்லவி.

ஸாம்ராஜ்ய--மோகம்—ஜய
ஸாம்ராஜ்ய மோகம்

சரணம்.

உலகத்தை மயக்கி
அச்சை ஒழிப்பேனென்று சொல்லி
சுதிந்திர தாகத்தை அடக்குவேனே—
நான் அடக்குவேனே! (ஸாம்ராஜ்ய-)

(உள்ளேபோ, உள்ளேபோ என்ற கூச்சல்.)

சர்ச்:-நான் இந்த அற்பக்கூச்சலைக் கண்டு அஞ்சமாட்டேன்! நாற்பதுகோடி இந்திய மக்களைக்கண்களில் விரலைக்கொடுத்து ஆட்டிவைக்கும் நான் இதற்காகவா தயங்குவேன்? அயன் ராஜபார்ட் ஸ்டாலின் வரமுடியாததற்கு நானும் வருந்துகிறேன். இருந்தாலும் நாடகக் கதை நான் எழுதியது. முக்ய பாகத்தை எனக்கே நடிக்க உரிமையுண்டு. 'போன்' மூலமாக அடிக்கடி ஸ்டாலின் துரையைக் கலந்துகொண்டு நடிக்கத்தீர்மானித்துள்ளேன். பொறுமையுடன் கவனியுங்கள்.

(மறுபடியும் கூச்சல். திரை விழுகிறது.)

காட்சி 2

[ரூஸ்வெல்ட்பிரபு துயரத்துடன் காணப்படுகிறார்.]

ரூஸ்:-என்ன கஷ்டகாலம்? யுத்தத்தில் மாட்டிக்கொண்டாய்விட்டது. என்னிடமிருந்து எல்லா உதவிகளையும் பெற்று என்னையே ஆட்டிவைக்கிறான் அந்தச்சர்ச்சில். ஜப்பானைத் தொலைக்கவேண்டுமென்றால் 'ஹிட்லர் முதலில்' என்று எனக்கு வாய்ப்பூட்டுப்போடுகிறான்! அட்லாண்டிக் பிரகடனத்தைப்பற்றிக் கேட்டால் அது அந்தக்கடல் நீரில் எழுதியதல்லவா வென்கிறான். ஸர்வாதிகாரம் செலுத்துகிறான். இந்தத்தடவை கொஞ்சம் தைரியமாகச்சொல்லிவிடப்போகிறேன்! இருக்கட்டும். (திரை விழுகிறது.]

காட்சி 3

[சர்ச்சில் தர்பார். சேனாதிபதிகள் பளபள வென மின்னும் உடையில். ரூஸ்வெல்ட் ஒரு கூடை நிறையச் சுருட்டுக்களை வைத்துக்கொண்டிருக்கிறார். ஒரு ஒடிந்த நாற்காலியில் சீனப் பிரதிநிதி கிழிந்த ஆடைகளுடனும், வாடிய முகத்துடனும் உட்கார்ந்துள்ளார்.]

சர்ச்:- அடியார்களே! நான் இதுவரை எனது திறமையினாலும், அபார வலிமையினாலும் உங்கள் தேசங்களை அந்தக் கொலைபாதக ராக்ஷஸன் ஹிட்லரது கொடுமைகளினின்றும் காப்பாற்றியுள்ளேன். அதற்கு நன்றிசெலுத்த வேண்டியது உங்கள் கடமையாகும்! ஆனால் அவனது கொட்டம் முழுவதும் அடங்கினபாடில்லை. முஸ்லோனி விழுந்தான், அச்சு முறியுமென மனக்கோட்டை கட்டி ஏமாந்தேன்! நமக்குள் சில்லறைச் சச்சரவுகள் வேறு! (ரூஸ்வெல்ட் ஒரு சுருட்டைக்கொளுத்தி நீட்டுகிறார். சர்ச்சில் புகைவிடுகிறார்!) நீங்கள்மட்டும் என் சொற்படி இனியும் நடந்தால் அழித்தே தீருவேன் அந்த ஹிட்லரை.

ரூஸ்:- பிரபோ! தாங்கள் சொல்லுவது உண்மைதான். இருந்தாலும் இந்தக்குள்ளன் -ஜப்பானை நாம் இப்பொழுது கொஞ்சம் கவனிக்க வேண்டும். இல்லாவிடில் மோசம்போவோம். ஆஹா! அந்த மாயாவிக்குள்ளன் சொற்ப நாளில் கொள்ளைகொண்டதை நினைக்கப் பயங்கரமாக இருக்கின்றது. எல்லாம் கனவுபோல் தோன்றுகிறது. ஹிட்லரைச் சற்று மறப்போம், குள்ள ஜப்பானைநினைப்போம்.

சர்ச்:- ஹூம்! (பெருமூச்சு விடுகிறார்) ரூஸ்வெல்ட்! இது ஸர்வாதிகாரிகளின் காலம் என்பதை நீ மறந்தது ஆச்சரியமாகவிருக்கின்றது. (தமக்குள்) [என்ன ஆச்சரியம்! நேற்றுவரை என் சொற்படி தவருமல் தலையை யாட்டிவந்த இவன் தைரியமாய்ப் பேசுகிருன் இப்பொழுது. அவன் உதவியோ நமக்கு எப்பொழுதும்வேண்டும். அசட்டை செய்தால் ஆபத்து.] தம்பி! கவலைவேண்டாம். குள்ளனையும் கவனிப்போம்.

சீனப்பிரதிநிதி;- பிரபோ! எங்களை இனியும் மறக்காமலிருக்க மன்ருடுகிறேம்!

சர்ச்:- (கோபமாக) சனியன்! சீனப் பிரேதம்போல் வாயை அடைத்துக்கிட! எல்லாம் எனக்குத்தெரியும்!

(எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கும் பொதுஜனம் திடும்பிரவேசமாக மேடை மீது ஏறுகிருர்!)

பொதுஜனம்;-சபையோர்களே! இது என்ன கூத்து? அயன்ராஜபார்ட் ஸ்டாலினைக் காணேம் இங்கு. அச்சை ஒழிக்க அவனுல்தான் முடியும். அவனன்றி ஓர் அணுவும் அசையாது! ஜப்பானை அடக்கவேண்டுமென்ருல் இந்திய மக்களது பரிபூரண ஒத்துழைப்பு இன்றியமையாதது. இந்திய தேசியத் தலைவர்களை இங்கே காணேம். இதுஎன்ன கேலிக் கூத்து வேண்டிக்கிடக்கிறது? உலகத்தை ஏமாற்றமுடியாது, பசப்பு வார்த்தைகளைக் கண்டு இந்தியர்களும் மயங்கமாட்டார்கள். இனி. இது ஸத்யம்! ஸத்யம்! (பொதுஜனம் மறைகிருர்,)

சர்ச்:-(ஆச்சரியத்தில் ஆழ்ந்துகிடந்தவர் சுய அறிவுபெற்று)

இந்த மடையர் பொது ஜனத்தை யார் இங்கே விட்டது? இருக்கட்டும். இதுவரை உதறித் தள்ளி உதாசீனம்செய்த இவரை இன்னும் என்ன பாடுபடுத்துகிறேன் பார்.

(கோபமாகப் போகிருர். திரை விழுந்தது.)

வயதைப்பற்றிய கவலை!

தம்முடைய வயதைப்பற்றிச் சிந்திப்பவர்கள் சிலர்தான். 'மைனர்', தான் எப்பொழுது 'மேஜரா'கி ஏதேச்சதிகாரம் கைக்கொண்டு திருவிளையாடல்கள் பலபுரிந்து சொத்துக்களை அழித்து இன்புறலாமெனத் தவம் கிடப்பான்! முகத்தில் சுருக்கம்விழுந்து, தலையில் வெள்ளி மயிர் தோன்றி, கிழம்தட்ட ஆரம்பித்து உலக இன்பங்களை அனுபவிக்கச் சக்தியற்றவனுனவன் வயதாகிவிட்டதையெண்ணி வருந்துவான் சபல சித்தத்தை நினைத்து நொந்துகொள்ளுவான்!

ஆனுல் ஒருவருக்கு வயதாகிக்கொண்டு வருவதைப் பிறர் சாதாரணமாக நினைக்கவும் மாட்டார்கள், கவனிக்கவுமாட்டார்கள். இந்த விதிக்கு இருவிலக்குகளுண்டு. ஒன்று, பெற்ரேர்கள் குழந்தைகளின் விவாகத்தைப்பற்றி விவாதிப்பது. மற்ருென்று, சஷ்டியப்தபூர்த்திக் கமிட்டியார்கள் கவனிப்பது!

ஒரு உத்தமர், சுயநலமற்றவர், தேசபக்தர், சிறந்த அறிவாளி, போற்றுதற்குரியவர். இவர்கள் போன்றவர்களுக்கு எப்பொழுது அறுபது வயது நிறையப்போகின்றதெனச் சிலர் ஜனன மரண ரிஜிஸ்தர், ஜாதகம் இவைகளைப் பரிசிலனை செய்து காத்துக்கிடப்பர்! அறுபது ஆண்டுகள் நிறைவதற்குக் கொஞ்ச நாட்கள் முந்தியே ஆர்ப்பாட்டம் செய்யத்தொடங்கி விடுவார்கள். பத்திரிகையைப் பிரித்தால் இவர்களது புகழுரைகளது பரிமளகந்தம் வீசும். இந்த வாசனை நாடெங்கும் பரவும். ஆண்டு நிறைவு அன்றைய தினம்அன்பர்கள் கூடி வாழ்த்துவார்கள். போற்றுவார்கள். தங்களது ஆனந்தத்தை வெளியிடுவார்கள். இந்த உன்னதகைங்கரியங்களுக்குத் தன்னலம் கருதாது உழைப்பவர் சஷ்டியப்தபூர்த்திக் கமிட்டியார்.

சமீபத்தில் இரண்டு உத்தமர்களுக்கு அறுபது ஆண்டுநிறைவு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஒருவர் முதலியார். மற்ருெருவர் அய்யர். ஜாதிமத வித்தியாசங்களின்றி இருவரும் போற்றப்பட்டார்கள்.

கலியாணசுந்தர முதலியார் அவர்கள் சிறந்த அறிவாளி. தமிழ் நூல்களைச் செவ்வனே கற்றுணர்ந்தவர். மதாபிமானி. தேசப் பற்றுடையவர். தன்னடக்கம் மிகுதியுள்ளவர். அன்பே சிவம், பணியெனக் கொண்டவர். ஏழைகளின் அன்பர். 'சுயமரியாதைக்காரர்' அல்லர்!

'அல்லாடி'யை அகில இந்தியா அறியும். சட்ட நிபுணர். கொடையாளி. நாட்டின் நலத்தைக் கருதுபவர், போற்றுதற்குரியவர். மதிப்பைச் சம்பாதித்தவர். எளிய நிலைமையிலிருந்து செம்மை வாழ்வையடைந்து அதை அறிந்து நடப்பவர்.

இருவரும் நம் மாகாணத்தவர். இருவரும் தமிழர்கள்தான். ஆம், அல்லாடி தமிழ் நாட்டில் பிறந்து தெலுங்கு நாட்டில் வளர்ந்தவர்.

அடாடா! நண்பர் ஜி. ஏ. நடேசனை மறக்க முடியுமா? மகாபாக்யசாலி! எழுபது ஆண்டு நிறைவு விழா அவர் நிமித்தம் கொண்டாடப்

பட்டது. மிதவாதியெனச் சிலர் சொல்லுவர். சிறந்த தேசாபிமானிக்கு நடேசன் அவர்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவரல்லர். பத்திரிகையுலகில் புகழைநாட்டியவர். ராஜீய உலகில் மதிப்பைப் பெற்றவர், பொது வாழ்வில் நற்பெயர் பெற்றவர்.

இப்பெரியார்கள் நீடூழிகாலம் வாழ்ந்து தேசத்துக்குப்பணியாற்றஎலலாம்வல்ல இறைவனை வேண்டுவோம்!

'மாமா' வீசும் வலை!

அழகான கன்னிகை. பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும் கன்னிகை. செல்வச்சீமாட்டி. ஒரு பிரபு கன்னிகையை மணக்க இச்சை கொள்ளுகிறான். தனது வாழ்க்கை நிலை சீர்படுமென நினைக்கிறான். மாமாவை நாடுகிறான். 'மாமா' கன்னிகையிடம் சென்று பிரபுவை மணந்துகொள்ள கனிவாய்க் கெஞ்சுகிறான். பயமுறுத்தவும் செய்கிறான். கன்னிகை பலே கைக்காரி! "மாமா, அந்தப் பிரபு ரொம்ப நல்ல குலத்தவர்தான். என்னுடைய பணம் அவரது 'குறி' யென்பதை நான் அறிவேன். கன்னிக்குச் சுதந்திரமுண்டு. மனைவியானால் சுதந்திரத்தை இழக்கநேரிடும். என்னைச் சகோதரியாகப்பாவித்துக்கொள்ளச் சொல்லுங்கள். நமஸ்காரம் போய் வாருங்கள்" இவ்விதமாய்க் கன்னி மொழிகிறாள்.

இது சினிமாக் கதையல்ல; புத்தக விமர்சனமல்ல; இங்கிலாந்து அமெரிக்காவை வசப்படுத்த முயற்சிசெய்வதைக் குறிப்பது.

New york Daily News என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகை எழுதுவதாவது-அதை அப்படியே மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். அந்த அமிர்தத்தைப் பானம் செய்து ருசி பாருங்கள்!

"சர்ச்சில் துரை ஹாவர்ட் என்ற இடத்தில் வெகு அழகாகவும் உருக்கமாகவும் பேசினார். அது எப்படியுள்ளது? வரட்சைப் பிரபு. குலம் மேம்பட்டதுதான். அத்தகைய ஒருவன் ஏராள ஆஸ்தியுள்ள அமெரிக்க மங்கையை மணந்து தன் நிலைமையைச் சீர் செய்துகொள்ள உத்தேசிக்கிறான். இங்கிலாந்துதான் அந்தப் பிரபு, "மாமா" சர்ச்சிலைத் தூது அனுப்புகிறான். "மாமா" முடிச்சுப்போடுவதில் வல்லவன். "மாமா" நைஸாகக் கல்யாணப்பேச்சை ஆரம்பிக்கிறான். பிருட்டன் உலகில் பிரசித்திபெற்ற பிரபுவென்றும், செல்வாக்கு மிகுந்தவனென்றும் மாப்பிள்ளையாகத் தகுந்தவனென்றும் உலகிலேயே பணக்காரியான மிஸ் கொலம்பியாவுக்கு இவனைவிடத் தகுந்த வரன் கிடைக்காதென்றும், முதல்தர 'புள்ளி' யென்றும் உபதேசம்செய்கிறான். ஒரு காலத்தில் இந்த மாமாவும் பிரபுவும் மிஸ் கொலம்பியாவை நாகரிகமற்றவளென (Vulgar) நினைத்தார்கள். இப்பொழுது மிஸ் கொலம்பியாவின் பணம், அவளது பலமும் கட்டுமுள்ள சரீரப்பொலிவு இவைகள் கவர்ந்துவிட்டனபோலும்! ஆனால் மிஸ் கொலம்பியா கன்னிகையாகவே காலந்தள்ள விரும்புகிறாள். கன்னிகைக்குச் சுதந்திரமுண்டு. மனைவிக்குச் சுதந்திரம் கிடையாது. வேண்டுமானால் மிஸ் கொலம்பியாவைப் பிருட்டன்பிரபு சகோதரியாகப் பாவிக்கட்டுமே!"

மனைவியிடம் கொஞ்சம் உரிமைகள் செலுத்தலாம். சகோதரியிடம் முடியுமா? இந்த அற்ப வித்தியாசம் இருக்கலாகாதெனத்தான் சர்ச்சில் 'மாமா' உழைக்கிறார்.

பாப விமோசனம்.

"சோதியாகி எல்லா உலகும் தொழும் எம்பெருமானே,
பக்தர்கள் பித்துண்டு என்னை யழிப்பது தருமோ,
ஏதுமறியேன், உன் திருவடியே சரண்எனப்புகுந்தேன்,
கண்ணனே, வண்ணனே, லாவண்யனே".

நம்மாழ்வார் இப்பொழுது காட்சி யளித்தால் இவ்வாறாகத்தான் கதறுவார்! அலறுவார்.

காஞ்சிபுரத்துக்கருகிலுள்ள கூரமென்ற கிராமத்தில் ஒன்பது தென்கலை ஸ்வாமிகள் எம்பெருமானைக்குறித்து "ஹே பரம்பொருளே, ஸ்ரீமந் நாராயணா, அனாத ரக்ஷகா, ஆபத்பாந்தவா, இதுவரை நாங்கள் அஞ்ஞான இருளினால் சூழப்பட்டு உன் பரம பாகவதனும் உலக குருவுமாகிய ஸ்ரீமகா தேசிகனை உதாசீனம் செய்து பரம அபராதிகளாகிவிட்டோம். பாப விமோசனத்திற்கு வழிகாட்டி, திருவருள் புரியவேண்டும்." இவ்வாறாகக் கடுந்தவம் செய்தார்கள்.

பரம தயாளுவும் கருணாமூர்த்தியுமாகிய பகவான் கிருபை கூர்ந்து பிரஸன்னமாகி, "பக்தச்ரேஷ்டர்களே, கலங்கவேண்டாம்; ஆசாரியனுக்குச் செய்த அபசாரத்திற்கு அபராதம் செலுத்துங்கள், பாபவிமோசனமேற்படும்" என அருளி மறைந்தார். அதன்படி தென்கலை ஸ்வாமிகள் அபராதம் செலுத்தும் வகையை யோசித்தார்கள்.

திருவிளையாடல் பல புரிந்துபக்தர்களைச் சோதிக்கும் பரந்தாமன் வடகலை ஸ்வாமிகளையும் 'கிள்ளிவிட்டான்' ஒரு வடகலை ஸ்வாமி திடீரென்று ஒருநாள் தூக்கத்திலிருந்து துள்ளிக் குதித்தார். தாம் கண்ட கனவை நினைத்தார். வாடிய முகத்துடனும் அழுத கண்ணீருடனும் ஸ்ரீதேசிகன் தோன்றி, தமக்கு மூலவரில்லாக் குறையை முறையிட்டதை அறிந்தார். உடனே ஒரு மூலவரை ஸ்தாபிதம் செய்தார்.

பகவானது கட்டளைப்படி ஆசாரியனுக்கு அபராதத்தை செலுத்தத் துடிதுடித்து நிற்கும் தென்கலை ஸ்வாமிகள் இவ்வரிய சந்தர்பத்தை நழுவ விடாமல் நன்கு உபயோகித்துக்கொண்டார்கள். எப்படி? திடீரென்று வீராவேசத்தோடு ஸ்ரீ தேசிகனது சன்னதிக்குள் பாய்ந்து புகுந்தார்கள். மூலவரை இறுகக்கட்டிக்கொண்டு அபராதத்தை ஏற்றுக்கொள்ள முறையிட்டார்கள். மூலவர் மௌனம் சாதித்துச் சும்மா இருக்கவே தென்கலை ஸ்வாமிகள் இன்னும் பலமாகப் பிடித்தார்கள். இப்படியாகத்தென்கலை ஸ்வாமிகள் ஆழ்ந்த பக்தி பரவசத்தோடு மூலவரைக் கட்டிப்பிடிக்கவே மூலவர் ஸ்தானத்திலிருந்து பெயர்ந்து நகர்ந்து "பக்தர்களே! போதும், போதும், நிறுத்துங்கள்!' என்று கதறினார். தென்கலையார்கள் மெய்மறந்து ஆனந்த பரவசமடைந்து மேலும் மூலவரிடம் லீலைகள் புரியவே மூலவர் உருத்தெரியாமல் சிதைந்துவிட்டார்! மூலவர் முக்தியடைந்ததைக்கண்டு தென்கலை ஸ்வாமிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

இதை மகா பாதகச் செயலென வடகலை ஸ்வாமிகள் கண்ணீர் விட்டுக் கதறியழுது மாஜிஸ்ட்ரேட்டிடம் சென்று முறையிட்டார்கள்.

எம்பெருமானது திருவுள்ளத்தை அறிந்த மாஜிஸ்ட்ரேட் தென்கலைஸ்வர்மிகளைக் குற்றவாளிகளெனத் தீர்மானித்து, தலா ஒன்றுக்கு இருபது ரூபாய் அபராதம் விதித்தார். இதைத் தண்டனையென்று நினையாமல் தென்கலை ஸ்வாமிகள் எம்பெருமானது திருவுள்ளம் போல் நடந்ததென நினைத்தும் பகவத் கைங்கர்யம் நிறைவேறிற்றெனக்கொண்டும் சந்தோஷமாக அபராதத் தொகையைச் செலுத்தினார்கள்.

மதவெறியின் மகிமையைக்கண்டு மகிழுங்கள்!

இறந்தவர் இழைக்கும் இன்னல்கள்!

சாவுடன் சங்கடங்களும் ஒழிகின்றனவென்று ஒரு சிலர் எண்ணலாம். ஆனால் உண்மையில் ஒருவன் இறந்தவுடன் தொல்லைகள் அதிகமாகின்றன. 'இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்று சொல்வது முற்றிலும் பொருந்தும்.

இறந்தவன் காற்று ரூபமாகவோ, அல்லது வேறு கண்களுக்குப் புலப்படாத முறையில் மறைந்துவிட்டால் கவலையில்லை. பிணமென்ற ஒரு கட்டையை வைத்துவிட்டு மறைவது ஒரு பெரிய குற்றம்! ஏன்? அந்தப் பிணம் சில சமயங்களில் விளைவிக்கும் இன்னல்கள் கொடுமையாக உள்ளன. ஜாதி, மத, சமயப் பூசல்கள், விவகாரங்கள், பணவிரயம் இவ்வளவையும் உண்டுபண்ண, கேவலம் ஒரு பிணத்திற்குச்சக்தி உண்டு! ஹிந்து முஸ்லீம்

ஒற்றுமையை உண்டாக்கவும் சில பிணங்களால் முடிகிறது! ஆகையால் பிணங்களிலும் நல்லது கெட்டது உண்டு என்றாகிறது!

கட்டாக் நகரில் மங்கோபிந்துசாஹு என்ற ஒருடாக்டர்எவ்விதசந்ததி, சுற்றத்தாருமின்றி, பிராணனை விட்டுப் பிணமானார். "இறந்தவர் இஸ்லாமியர்'' என்று அல்லா அறைகூவியதாக ஒரு முஸ்லீம் கனவுகண்டான். உடனே ஒரு கூச்சல் போட்டான். ஏராளமான முஸ்லீம்கள் ஆயுதபாணிகளாக ஆயத்தமாயினர். பிணத்தைச்சுற்றிக்கொண்டார்கள்.

ஹிந்துக்களும் சும்மா இருக்கவில்லை! இறந்தவன் இஸ்லாமியனல்லனென்றும் ஹிந்துவேயென்றும் தடிகள்கொண்டு சாதித்தார்கள்.

நெருப்பு மூட்டப்பட்டு எரியவும் ஆரம்பித்துவிட்டது. விஷயத்தைக் கேள்வியுற்ற டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் பரபரப்புடன் ஓடிவந்தார். என்ன செய்வதென்று தெரியாமல் மலைத்து விழித்து நின்றார். ஞானோதயம் பிறந்தது. சப்-கலெக்டருக்கும் முன்சிபல் சேர்மனுக்கும் சொல்லியனுப்பினார். நல்லவேளையாக அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவிடவில்லை!

சப்-கலெக்டர் ஒரு சிறந்த முஸ்லீம் அறிவாளி. சேர்மன் ஒரு ஹிந்து. இருவரும் சமரசம் பேசி நிலைமையைச் சமாளித்து ஒற்றுமை உண்டுபண்ணினார்கள். அதன் விளைவாக "ஹிந்துக்களும் முஸ்லீம்களும் வேற்றுமை மனப்பான்மையை அகற்றிப்பிணத்துக்கு மரியாதை செய்தார்கள். ஹிந்துக்கள் செய்த ஸ்ரீராமநாமாவளி பஜனை எல்லோரையும் பரவசப்படுத்தியது. முஸ்லீம்களது 'அல்லாஹு அக்பர்' முழக்கம் வானத்தைப் பிளந்தது. பிணமானது ஒரு மோட்டார்வாகனத்தில் ஏற்றப்பட்டு இருமதத்தினருடைய சுடுகாடுகளையும் வலம் வந்தது. பிறகு ஒரு தனிப்பொது இடத்தில் இரு மதத்தினரும் மாலைகள் சூட்டி, தேசியகீதம்பாடி பிணத்தைப் புதைத்தார்கள்.''

1. "ஆயிரமுண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர்வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதரரன்றோ?"

2. "ஒன்றுபட்டா லுண்டுவாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்குந் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்?"

இவ்வாறாக வெகு அழகாகப் பாரதியார் பாடியுள்ளார்.

இந்த உண்மையை ஜின்னாபோன்ற ஆசாமிகள் உணராது கூத்தாடுவது நமது நாட்டின் துர்ப்பாக்யமே!

அக்கப்போர்

தி. சே. சௌ. ராஜன்

●

பொழுது போக்குவதற்காகப் பேசுவது மனித வாழ்க்கையில் ஓர் விநோதமென்று யாரும் நினைப்பதில்லை. என் நண்பர் ஒருவர் சுத்த பட்டணத்துப் பெயர்வழி. என்னைப் பார்க்கவேண்டி ஒருநாள் காலையில் நானிருக்கும் கிராமத்திற்குவந்து அன்று என்னுடன் தங்கியிருந்தார். அன்றிரவு படுக்கையில் படுத்தவண்ணமாக விழித்திருந்து என்னை ஒரு கேள்வி கேட்டார். "பொழுதுபோக்கிற்குப் பேசுவதற்குக்கூட சரியான மனிதர் இல்லாத இந்த ஊரில் எப்படி வந்து தங்கி காலம் கழிக்கிறீர்கள்? என்னால் ஒரு நாளைக்குமேல் இங்கே தங்கினால் உயிருடனிருக்க முடியாதுபோலத் தோன்றுகிறது" என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பொழுது போகவேண்டுமானால் அதைப் பிறருடன் பேசித்தான் செலவிடவேண்டுமா என்ற எண்ணம் பிறந்தது. அப்படிப் பேசினாலும் உணர்ச்சியற்ற வெறும் பேச்சு ருசியற்ற சோறுபோலல்லவா? நமது நாட்டில் இம்மாதிரி பேச்சை அக்கப்போர் என்று சொல்வது வழக்கம். அக்கப்போர் என்னும் பதத்திற்கு, (இலக்கண, இலக்கிய, நிகண்டு, அகராதிகள் எனக்குத் தெரியாது.) வெறும் வம்புப்பேச்சு, பொருளற்ற பேச்சு, பயனில்லாத பேச்சு என்று பொருள். இவைகளைத்தான் அக்கப்போர் என்று சொல்லுகிறார்கள். சில அக்கப்போர்களில் பெரும் பகுதி பொய்யாகவேயிருக்கும். பேசுபவர்களுக்கு அதில் சம்பந்தமிராது. எனினும் பேசுவோர்களும், கேட்போர்களும் இதைப் பொழுது போக்கிற்கு இன்றியமையாத சாதனமாகக் கருதுகிறார்கள். இல்லாவிட்டால் ஏன் எனது நண்பர் உயிருடனிருக்கமுடியாதென முறையிட்டார். அவர் மனதில் உண்டான எண்ணம் உண்மைதான். ஆனால் முடிவுமட்டும்—அவ்வளவு நிச்சயமில்லை.

பல வருஷங்களுக்குமுன்பு நான் லண்டனில் டாக்டர் பரீக்ஷைக்குப் படிக்கும்பொழுது என் நண்பர் ஒருவர் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிப்பதற்காக வந்திருந்தார். பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்கத்தினசரி போகவேண்டிய காலேஜ், பள்ளிக்கூடமொன்றும் கிடையாது. சிலநாட்களில் சில சட்ட நிபுணர்கள் சில பாடங்கள் வெகு சில நேரங்கள் சொல்லுவார்கள். அதற்குப் போகவேண்டுமென்கிற கட்டாயம் படிப்பவர்களுக்குக் கிடையாது. ஆனால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒருவாரத்திற்குப் பாரிஸ்டர் நிலையங்களில் நடக்கும் சாப்பாட்டிற்குமட்டும் பிரசன்னமாக இருக்கவேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. அப்பொழுதுதான் அவர்கள் பெயர் குறிப்பிடப்படும். அது தவறினால் பரீக்ஷைக்குப் போகமுடியாது. இந்த ஸுக ஜீவனப் படிப்பிலீடுபட்டவர்களுக்கு லண்டனில் பொழுதுபோவதே வெகு கஷ்டமாகஇருக்கும். என் நண்பர் தமது வாழ்க்கையைத் தினந்தோறும் மணிக்கணக்குப் பிரகாரம் நடத்துபவர். வேலையிருக்குமோ, இராதோ குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையைவிட்டெழுந்து, ஸ்நானம், முகக்ஷவரம், பிறகு காலை வேளைகளில் ஆங்கிலேயர் தரிக்கும் முறையான உடைகளை அணிந்து, காலைச்சிற்றுண்டி அருந்தி, கைப்பிரம்புடன் வெளியே புறப்படுவார். தம் நண்பர்களிருக்கும் ஒவ்வொரு வீடாகச்சென்று அவர்கள் இவர் கையில் சிக்கிக்கொண்டால் ஏதாகிலும் ஒரு அக்கப்போர் சங்கதியைச் சொல்லுவார். தேடிச்சென்ற நண்பர் வீட்டிலில்லாவிட்டால், தாம் வந்தது போனதைத் தெரிவிக்கும் முறையில் தமது பெயரையும் விலாசத்தையும் அச்சிட்ட ஓர் சீட்டை வைத்துவிட்டுப் போவார், இதைத் தாம் செய்யவேண்டிய ஓர் கடமையெனவே நினைத்து, தவறாது செய்துவருவார். ஆனால் இவருடைய "அக்கப்போர்"களில் உண்மைக் கலப்பேயிராதபோதிலும் அதனின்று ஒருவருக்கும் தீமை உண்டாகாது. மிகவும் சாதுவான பொய்யாகத்தானிருக்கும். நானிருக்கும் விடுதிக்கு அவர் வரும்பொழுது அநேகமாய் நான் வீட்டிலிருக்கமாட்டேன். ஆஸ்பத்திரிப் பயிற்சி நம்மூர்களிற்போலவே லண்டனிலும் காலை எட்டுமணிக்குத் தொடங்கிவிடும். அதனால் நான் ஏழு மணிக்கே வீட்டைவிட்டு வெளியேறிவிடுவேன். தவறாது இவருடைய கார்டும் தினசரி நான் இரவு வீடு திரும்பும்பொழுது எனது மேஜையில் வைக்கப்பட்டிருக்கும். இவருடைய சீட்டுக்கள் கட்டுக்கட்டாக எனது அறையில் சேர்ந்துவிடும். நானிருந்த விடுதி எஜமானிகூட இவர் சளைக்காமல் வந்துவிட்டுப் போவதைப்பற்றி உள்ளூர நகைப்பாள். எப்படியிருந்தபோதிலும் ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமையில் காலை நேரத்தில் இவரைச் சந்திக்கும்படி நேர்ந்துவிடும். வழக்கம்போல் இவருடைய புளுகு மூட்டையில் ஒரு பகுதியை என்னிடம் அவிழ்த்துவிட்டுப் போய்விடுவார். ஒருநாள் சலியாது புளுகும் இவரிடம் "ஏன் ஐயா இப்படிப் புளுகித்தள்ளுகிறீர். இதற்காகக் காலையில் உணவு உண்டு, வேஷம்தரித்துப் பணச்செலவுடன் பிரயாணம் செய்து வீடுவீடாக நுழைந்து அக்கப்போர் பண்ணிக்கொண்டு போகிறீர்" என்று பொறுக்கமுடியாமல் கேட்டேன். ஆனால்

அவருக்குக் கோபமே வரவில்லை. அநேகமாய்ப் பொய் பேசுகிறவர்கள் கோபிக்கமாட்டார்களென்பது எனது அபிப்பிராயம். "இந்தப் பாழும் ஊரில் என்னமாகப் பொழுதுபோக்குவதென்று நீர்தான் சொல்லுமே" என்றார். "வீடுவீடாகக்தான் போகிறீர் பொய்யையும் எதற்குச்சொல்லிக்கொண்டு போகவேண்டும்" என்றேன். "என்ன ஐயா. என் பொய்யால் யாருக்கு என்ன கெடுதல்? இஷ்டமிருந்தால் நம்புங்கள், இல்லாவிட்டால் வேண்டாம், ஆனால் என்னை மாத்திரம் பொய் சொல்லிக்கொண்டிருக்காதே யென்று சொல்லாதீர்கள். வேண்டுமானால் நீரும் மற்றவர்களிடத்தில் பொய்யைச் சொல்லிப் பொழுதுபோக்குவதில் எனக்கு ஆட்சேபனையே கிடையாது" என முடித்தார். இந்தப் பேர்வழியினுடைய பேச்சு வினையில்லாத பேச்சு. ஆனால் மற்றெல்லா விதப் பேச்சும் இப்படித்தானா இருக்கிறது?

அநேக சச்சரவுகள் முதலில் பேச்சுடன் ஆரம்பிக்கின்றன; சில சமயங்களில் கொலையிலும், தீராதபகையிலும் போய் முடிவடைகின்றன. ஆகையால் பேச்சும் வெறும் பேச்சு என்று சொல்ல முடியாது. சிலவற்றால் கேடு உண்டாகலாம். பொழுதுபோக்குப்பேச்சு ரெயிலில் பிரயாணம் செய்யும்பொழுது வெகு தாராளமாக நடக்கிறது. எங்கே போகிறீர்களென்று துவக்கி, கலியாணப் பிரச்னையுடன் முடிவடையலாம். இதற்கு எல்லை, பேசுகிறவர்கள் இறங்கவேண்டிய இடம்தான். சில சமயங்களில் இப்பேச்சு பயன் பெறுவதுமுண்டு. அதிக வருமானம் பெறுகிற பெரிய மனிதர்கள் சந்திக்குமிடத்திற்குக் கிளப் என்று சொல்லுகிறவழக்கம். சென்னையில் ஓர் பெரிய கிளப்பில் சத்தம்போட்டு உரக்கப் பேசுவதற்காக ஓர் பெரிய அறையிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பகல் முழுதும் ஓயாது பேசும்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரிய பெரிய வக்கீல்களும் ஓயாது பகல் முழுதும் பேச்சையே கேட்டுச் செவிடுபட்டுப்போகும் நீதிபதிகளும்கூட இந்தக்கூச்சலறையில் கலந்துகொள்வதுண்டு. சமூகப் பேச்சுக்கள், அரசியல் கட்சிகளின் வாதம் தனிப்பட்ட மனிதர்களின் குறைக்கேடு, குணவிசேஷங்கள், இவைகளெல்லாம் பரிமாறப்பட்டு பேச்சு வெகுநேரம் நடப்பது தினசரி நிறைவேறும் ஓர் நடைமுறை. இம்மாதிரி பொழுதுபோக்கு இக்கூட்டத்தாருக்கு அவசியமெனத் தோன்றுகிறதுபோலும். சிலசமயங்களில் இப்பேச்சு கிட்டத்தட்ட அடிதடிக்கு நெருங்கிவிடுவதுமுண்டு.

மனிதன் பேசும் பிராணி. அதற்கென நாவும், நாவிற்கு வன்மையும், அதை ஒழுங்குபடுத்த மூளையும் மனிதனுக்குண்டு. உலகவிவகாரம் முழுதும் பேசியே நடக்கிறது. மனிதனை மனிதன் கொல்லும் யுத்தமெனப்படும் முயற்சியிலும்கூட பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. புராணங்களிலும், இதிகாசங்களிலும் கூறப்பட்டிருக்கும் சண்டைகளில்கூட எதிரிகள் ஒருவரையொருவர் எதிர்த்து ஆரவாரிப்பார்களென எழுதியிருக்கிறார்கள். மனிதவர்க்கமட்டிலுமா? கோழிச்சண்டை முதல் யானைச்சண்டை முடிய எல்லாவகைப் பிராணிகளும் ஆரவாரித்துப்போர்புரிகின்றன. அதிகமாகபருத்த மூளையொன்றைதவிர பெரும்பான்மையாக மனிதன் மிருகத்தைப் போலத்தானிருக்கிறான். போர் என்பது மிருகதர்மம். காட்டுத்தர்மம். மனிதவாழ்வின் உச்ச நிலை அஹிம்ஸை; இயேசுநாதர், புத்தர்பெருமான், மஹாத்மாகாந்தி இவர்களைப்போலுள்ளவர்களால் அடையப்பட்டிருக்கும் உண்மையுணர்ச்சி. உலகம் இந்நிலை எய்துவதற்குப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது, தற்சமயம் நடந்துகொண்டிருக்கும் கோர யுத்தத்தில்கூட பேசவேண்டிய அவசியமிருக்கிறது. போராடிக்கொண்டிருக்கும் இருதிறத்தாரும் உலக மக்களின் செவியை எட்டுவதற்குப்படாதபாடு படுகிறார்கள். பிரசாரம் வெகுதீவிரமாக நடக்கிறது. சண்டைக்குப் போகாதவர்களிடத்து ஒருவர் சொல்லுவதை மற்றொருவர் கேட்கக்கூடாதென முயற்சியும் நடக்கிறது. சென்ற மகா யுத்தத்திலே பிரசாரத்தினால் முக்கியமாக வெற்றியடைந்தார்களென ஆங்கிலேயரைப் பற்றி ஜர்மானியர்கள் புகார் செய்திருக்கிறார்கள் வெடிகுண்டுப் போர், ஆகாயவிமானப் போர், தரைப்போர், டாங்கிகள்போர் இவைகள். எவ்வளவு மும்முரமாக நடக்கின்றனவோ அவ்வளவு பிரசாரப்போரும் நடந்துவருகிறது. இது வீண் பொழுதுபோக்கல்ல. மனிதர்களின் உயிர் அழிவதற்கான ஓர் விபத்து. இதிலும் பேச்சு எவ்வளவு அவசியமாகிவிட்டதென்பதை இப்பொழுது நடக்கும் பிரசாரத்தில் நன்கு காணலாம்.

உணவு நெருக்கடி அதிகரித்து வருகிறது. மக்களுக்குப்போதிய உணவு உண்டாவதில்லை. அப்படி உண்டானாலும் போரில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும், பஞ்சத்தினால் அடிபட்டு உணவு போதர்மல் அவதிப்படுவோர்களுக்கும் போதிய இடங்களிலிருந்தோ அல்லது அதிக உணவு உற்பத்தியாகுமிடத்திலிருந்தோ அனுப்பவேண்டிவருகிறது. தரிசாக இருக்கும் நிலத்தைப் பண்படுத்தவோ, அல்லது பயிரிடும் நிலத்தில் அதிகமாகூல் எடுப்பதற்கோ பிரசாரம் பயன்படாது. பிரசாரம் செய்யும் ஒவ்வொருவனும் தோளில் ஒரு மண்வெட்டியைச் சுமந்து போய் நிலங்களை வெட்டி, கொத்தி, பாடுபட்டால் அதிக உணவை உண்டாக்கலாம். எனினும் உணவை உண்டாக்குவதற்குக்கூட பிரசாரம் தேவையாக இருக்கிறது. சிலநாட்களுக்கு முன்னர் சர்க்காரிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு யுத்தப்பிரசாரம் செய்யும் ஒருவர் பிரசங்கம்செய்தார். ஆனால் உணவுப் பொருள் உற்பத்தியைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. வெறும் நாளில் இவர் பிரசாரத்திற்கு ஊதியம் கிடைக்காது. கேட்பதற்கும் மனிதர்கள் கூடமாட்டார்கள். ஆனால் அரசாங்க

ஆதரவு பெற்று, கிராம அதிகாரிகளால் கூட்டம் கூட்டப்பட்டு இவருக்கு உதவிபுரியும் முறையில் இவர் பிரசாரம் நடத்துகிறார். கை நோட்டுப் புத்தகத்தில் ஓர் குறிப்பு வைத்துக் கொண்டு அதில்கண்டிருந்தபடி அதிக உணவுப் பொருள் உற்பத்தியைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்தப் பேச்சைகேட்ட ஆண், பெண் அனைவரும் பரம்பரையாக நிலங்களோடு பாடுபட்டு உணவு உற்பத்தி செய்து வரும் சிறிய விவசாயிகள். கூட்டத்திலிருந்து திரும்பிய ஓரிருவரை, விஷயமென்னவென்று கேட்டதில், ஏதோ யுத்தத்திற்காக உணவுப் பொருள் அதிகம் உண்டாக்கவேண்டுமெனப் பேசினார், கவைக்குதவாத பேச்சு, ஆயுள் பூராவும் பூமியோடு போராடும் நமக்கு இந்தப் பிரசங்கம் என்ன பயன்தரும் என்று சொன்னார்கள். எனினும் செய்யவேண்டிய செயலுக்கும் பேச்சு வேண்டியிருக்கிறது. இது பொழுது போக்கா?

பொழுது போக்கிற்குப் பாடுவது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் பழைய காலத்து நாடகமேடைகளில் முக்கியமான நடிகர்கள் சுலபமாக முதலிலேயே அரங்கமேடைக்கு வரமாட்டார்கள். அவர்கள், வர வேண்டும், வரவேண்டும், என்று சபையோர் எதிர்பார்த்தவண்ணமிருக்கும்படி செய்து, கடைசியாக அலுத்துப்போகும் சமயத்தில் வெளி வருவார்கள். அவர்கள் வரக் காத்திருக்கும் நேரத்தில் சில சில்லறைப் பேர்வழிகளை விட்டு அரங்கத்தில் பொழுது போக்குவதற்காகப் பாடச்சொல்வதுண்டு. சபையோர்கள் பொறுத்திருக்கும்படி செய்ய இது ஓர் வழி. ஆனால் பாடினால் பொழுது போகுமா என்றொரு கேள்வி ஏற்படலாம். நிச்சயமாகப் பொழுது போகுமென்பது எனது முடிவு. விடியற்கால நேரத்தில் எனது கிராமத்தில் பல பாகங்களிலிருந்து பாட்டுக் கேட்கும். இனிமையான பாட்டுக்கள் என்றுசொல்ல முடியாது. ஒரே ராகம். அதற்கு ராகமென்று ஓர் வரை கூட ஏற்படுத்த முடியாது. சுமார் இரவு இரண்டு மணிக்குத் துவக்கிப்பொழுது விடியும் வரையில் கேட்கும். கேட்போருக்குப் பாட்டில் பொருள் ஏதேனும் இருப்பதாகவும் தோன்றாது. எனினும் ஓயாது மூன்று அல்லது நான்கு மணிநேரம் இந்தச் சத்தம் கேட்கும். மாடுகள் கட்டிக்கவலையேற்றம் இறைப்போன், தென்னமரத்தில் ஏற்றம்போட்டு, சதா ஏறி இறங்கித் தண்ணீர் பாய்ச்சும் உழைப்பாளிகள், இவர்களுடைய பாட்டுத்தான் நான் கேட்பது. உழைப்பினால் மூச்சுவாங்கும் சமயத்திலும்கூட பாட்டு ஓயாது. வேலை செய்யும் மாடுகள்கூட இந்தப் பாட்டின் ஓசையில் ஈடுபட்டிருப்பதாகவே எனது எண்ணம். பாட்டுப் பாடுவதால் வேலையின் கடுமை குறைவுபட வேண்டும். இல்லாவிடில் அவர்கள் பாடமாட்டார்கள். பாடாமல் தண்ணீர் இறைத்தால், வேலை நடந்தமாதிரிகூடத் தோன்றாது. இந்தப் பாட்டுகளுக்கு மூலம், உரை, அகராதி, செய்யுளிலக்கணம் ஒன்றும் கிடையாது. ஒரே ஸ்தாயி எனினும் மணிக்கணக்கில் பாடி வேலையின் சிரமம் தெரியாமலிருப்பதற்கு உபயோகமாகிறது.

பல வருஷங்களுக்கு முன்னால் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு எனது தொழிலை நிறுத்தி விட்டு, கிராமம் கிராமமாக, தமிழ்நாடு பூராவும் அநேக இடங்களுக்குக் கட்டை வண்டியில் இரவில் பிரயாணம் செய்து ஆங்காங்கு, காங்கிரஸ் சபைகள் நிறுவிய காலமுண்டு. திருச்சி ஜில்லா சுற்றுப் பிரயாணத்தில் என் நண்பர்கள் சிலரும் அடிக்கடி கலந்துகொள்வார்கள். அதில் எனது தொழில் நண்பரான டாக்டர் திரு. வி. சுவாமிநாத சாஸ்திரியாரும், ஜம்புலிங்கபடையாச்சியாரும் கட்டைவண்டிப் பிரயாணத்திற்கு மிக்க உதவி செய்தவர்கள். டாக்டர் சாஸ்திரியாரைத் தமிழ் நாட்டினர் அநேகர் தெரிந்துகொண்டிருப்பார்கள். ஆனால் ஜம்புலிங்க படையாச்சியாரைப்பற்றி அநேகருக்குத் தெரிந்திருக்க முடியாது. அவர் வம்சத்தினர் தங்களது ஜாதித்தொழிலாகிய க்ஷத்திரியர் பணி ஆற்றும் முறையில் கர்நாடக சிப்பாய்ப் பட்டாளத்தில் வேலை செய்தவர்கள். ஜம்புலிங்க படையாச்சியாரது தகப்பனார் பட்டாளத்தில் சுபேதார் வேலை பார்த்தவர். ஆனால் விபரீதமாக அத்தொழிலில் ஈடுபட ஜம்புலிங்க படையாச்சியாருக்கு மனமில்லை. வேதாந்த விசாரணையில் புகுந்துவிட்டார். ஒழுக்கம், சிவபக்தி நிறைந்தவர். நெற்றியில் கட்டுக்கட்டாக விபூதி இட்டு, மையத்தில் குங்குமம் வைத்து, பரந்த விழிகளுடன் அவர் மேடையேறிப்பிரசங்கம் செய்யப்புகுந்துவிட்டால் எல்லோருடைய கவனத்தையும் தம்பால் இழுக்கக்கூடிய தோற்றமுடையவர். ஆங்கிலம் தெரியாது. தமிழ் நன்கு பயின்றவர். காங்கிரஸ் இயக்கத்தின் தன்மை, அவசியம், இவைகளைப்பற்றியும் அதிகம் தெரியாது. எப்பொழுதும் கதர் உடை தரிப்பவர். பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டால் ஓயாது மணிக்கணக்காகப் பேசுவார். பேச வேண்டிய விஷயம் காங்கிரஸ், கதர், ஹரிஜன இயக்கம், மற்ற ஏதாயிருந்தாலும் சரி, அவர் பேசுவது ஒன்றே ஒன்றுதான். ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம், ராஜயோகம், இவைகளைப்பற்றிச் சாங்கோபாங்கமாகத் தங்குதடையில்லாமல் சொற்பொழிவாற்றுவார். கேட்பவர்கள் அலுத்துப்போகாவண்ணம் இடைஇடையே விநாயகக்கடவுளின் திருவிளையாடற்கதைகளைச் சொல்லுவார். கடைசியில், எல்லோரும் காங்கிரஸில் சேரவேண்டும் தீண்டாமையை ஒழிக்கவேண்டும், மகாத்மா காந்திக்குஜே என்று தாமே முடித்துவிடுவார். நான் இவரை ஓயாமாரிப் புலவரென்று சொல்வதுண்டு. டாக்டர் சாஸ்திரியார் இவரைத் தொண்டை நோவெடுத்தால் அடக்கிக்கொள்ளும் ஒரு மாத்திரை (throat pastile) என்பார். ஒருநாளைக்கு மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்குக் குறையாது சுற்றுவோம், சாயங்கால

வேளையில் ஏதாகிலும் ஓர் பெரிய கிராமம் போய்ச் சேர்ந்து பொதுக் கூட்டம் போட ஏற்பாடுகள் செய்வது வழக்கம். எவ்வளவு முயன்றபோதிலும் கடைசி நிகழ்ச்சி நடக்க வேண்டிய கிராமத்திற்குக் குறிப்பிட்ட நேரம் போய்ச் சேரமுடியாது நேரமாகிவிட்டால் கூட்டம் கலைந்துபோய்விடும். அதற்காகப் படையாச்சியாரை முன்னதாகவே அனுப்பித்துவிடுவோம். விளம்பரத்தில் கண்டிருக்கும் மணிப்படி கூட்டம் சேர்ந்ததும் படையாச்சியார் பிரசங்கம் ஆரம்பித்துவிடுவார். சில சமயங்களில் நாங்கள் கூட்டத்திற்கு வந்து சேர இரண்டு அல்லது மூன்று மணிநேரம்கூட கழிந்துவிடும். ஆனாலும் படையாச்சியார் நாங்கள்வரும் வரையில் கூட்டம் கலையாமல் பிரசங்கம்செய்துகொண்டிருப்பார். எப்பொழுதும்பேசும் பக்தியோகம், ஞானயோகம், கர்மயோகம், ராஜயோகத்தைப்பற்றித்தான் பேசுவார். கூட்டத்தினர் அவருடைய சொற்பொழிவின் திறத்தில் ஈடுபட்டிருந்தார்களா, காங்கிரஸைப்பற்றி விபரம் தெரிந்துகொண்டார்களா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. தூங்கினவர்களும், விழித்தவர்களுமாகக் கூட்டம் மட்டும் கலையாமலிருந்துகொண்டிருக்கும். இது பொழுதுபோக்குப் பேச்சாக இருக்கமுடியுமா?

இரவில் கட்டை வண்டிப் பிரயாணம் செய்யும்பொழுது வண்டிக்கு முன்புறத்தில் படையாச்சியார் உட்கார்ந்துவிடுவார். இரவு பூராவாக வண்டி நகர்ந்துகொண்டிருக்கும். ஆடும் ஆட்டத்தில் தூக்கம் வருவதற்கு நேரம் பிடிக்கும். "படையாச்சியாரே கொஞ்சம் பாடுங்கள்" என்று சொல்லவேண்டியதுதான்—உடனே ஆரம்பித்துவிடுவார். எல்லாம் முருகக் கடவுளைப்பற்றின பாட்டுக்கள். ராகம், தாளம் ஒன்றுமிராது. ஆனால் முருகன் புகழ் என்பது நன்கு விளங்கும். சுமார் ஒருமணி நேரம் பாடினவுடன் எங்களுக்கு தூக்கம் வந்துவிடும். தூங்கிவிடுவோம். வண்டியோட்டியும் தூங்கிவிடுவான். மாடுகள் நடந்துகொண்டே பாட்டைக் கேட்டுக்கொண்டு தூங்கும். ஏதாகிலும் ஓர் பள்ளத்தில் வண்டியிறங்கி, வெளியேறும்பொழுது எங்கள் தூக்கம் கலைந்து விழித்தால் அப்பொழுதும் படையாச்சியார் நிற்காமல் பாடிக்கொண்டிருப்பார். அவர் பக்தியோகத்தில் ஆழ்ந்தவரென்பதற்கு இதுவே அத்தாட்சி. எங்களிரவும், பிரயாணமும், முருகன் அருளாலும், படையாச்சியார் சொற்பொழிவாலும், பாடல்களாலும் நன்கு கழிந்துவிடும். பாட்டின் வன்மைதானென்ன!

சிலருக்குத் தனிமையாக இருக்கும்பொழுது பாடுவதற்கு உற்சாகம் ஏற்படும். பொழுதுபோக்கிற்காகப் பாடுபவர்களை நான்கண்டிருக்கிறேன். பாட்டின் மாதிரிகள் பலவிதமாக இருக்கும். இரவில் தனிமையாக பாடும் வண்டியோட்டியின் ஒப்பாரி முதல், பாட்டை ஓர் கலையாகப் பயின்றுவரும் இசையாளர்கள் உள்பட எல்லோரும் தங்களது குரலைத் தனிமையாகக் கேட்டும், பண்படுத்தியும் வருவது உலகறிந்த விஷயம். இசை என்பது மனிதன் குரலால் உண்டாக்கும் தொனிமட்டிலுமா, இயற்கையில் அழியாது துலங்கும் நாதத்தை எட்டிப் பிடிக்கும் முயற்சிதான் இசைப்பயிற்சியா என்பதைப்பற்றி எனக்கு சந்தேகமுண்டு. நாதப்பிரம்ம் என்று கேள்விப்பட்டதுண்டு. இசைப்பயிற்சியால் தன்னுடைய நாதம் இயற்கை நாதத்துடன்சேர்ந்து இரண்டும் ஒரே சுருதியில் லயிக்குமானால், யோகப் பயிற்சியினால் மூலாதாரத்திலுள்ள குண்டலினியில் ஏற்படும் மாறுபாடுகளால், நாதப்பிரம்மத்தை உணர்ந்து அனுபவிக்கக்கூடிய ஆனந்தமும், ஞானமும், இதிலும் உண்டாகுமென அறிவாளிகள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்த உச்சநிலை பொழுது போக்கிற்குப் பாடுவதானால் கிடைத்துவிடுமா என்று கேட்கலாம். ஒன்று மற்றொன்றிற்கு வழியாக இருக்கக்கூடுமென நினைக்கத்தான் வேண்டியிருக்கிறது.

சிருஷ்டியில் முதலாகத் தோன்றியது ஒலி. ஒலியினின்றும் சொல், சொல்லினின்றும் உலகம் என்பது சுருதிவாக்கியம். பல தீர்க்கதரிசிகளும் அவ்வாறே பறைசாற்றியிருக்கின்றனர். மனிதஎண்ணம் சொல்மூலம் உலகிற்கு வெளிப்படுகிறது. வெறும் சொல் என்பதற்குப் பொருளே கிடையாது. ஒவ்வொரு சொல்லிற்கும் வினையுண்டு. அப்படியிருக்கப் பொழுதுபோக்கிற்காகப் பேசுவதென்பது மதிமயக்கத்தைத் தவிர வேறில்லை.

ஸ்ரீரங்கத்தில் அக்கப்போர்கள் பரதேசித் தபால்மூலம் விளம்பரம் செய்யப்படும். இதில் இரண்டுவிதமுண்டு; ஒன்றிற்கு, "கருடமண்டபம் சரடு" என்று பெயர். மற்றொன்றிற்குச் 'சந்திரபுஷ்கரணி சரடு' என்று சொல்வார்கள். கோவிலின் உட்பிரகாரத்தில் "ஆரியபட்டாள்" வாசற்படியென்று சொல்லப்படும் வாயிலின் வழியாகத்தான் எல்லோரும் சுவாமி தரிசனத்திற்கு உட்செல்லவேண்டும். இந்த வாசலிற்குள் அன்னியமதத்தினரும், ஹரிஜனங்களும் நுழையக்கூடாது. இந்த வாசல்படிக்கு முன்பாக நல்ல காற்றுள்ள மண்டபம். அதன் நடுவில் வானளாவும் கருடன் உருவம் கைகூப்பியவண்ணம் வீற்றிருக்கும். புதிதாகச் சுவாமி தரிசனம் செய்ய வருபவர்களுக்கு உதவி செய்வதையே தொழிலாகக்கொண்ட "பாண்டாக்களும்," வேலையற்ற கோவிலூழியர்களும் பொழுதுபோக்குமிடம். தெரிந்தது, தெரியாதது, மெய், பொய் எல்லாம் கதம்பமாக வாயில்வந்தபடி பேசிப் பொழுதுபோக்குமிடம் இதுதான். அக்கப்போர் கச்சேரி நடக்கும் பொழுது யாராகிலும் புதிதாக, பசையுள்ளவர்களாகக் கோவிலில் புகுந்தால் இந்தக் கச்சேரி கலைந்துவிடும். பாதியில்விட்ட பேச்சுகள், பத்திரிகைகளில் வந்ததாகசொல்லப்படும் பல செய்திகள், எல்லாம் அரைகுறையாகக் கேட்டவர் பிற்பட்டு தெருவில்போய்ப் பூர்த்திசெய்ய

(16-ஆம் பக்கம் பார்க்க)

நல்லுடை தரித்தவர்களுக்குகந்த நேர்த்தியான வாட்சுகள்!

உடையில் தரிப்பதற்காக அதிக தட்டையான நற்பார்வையுள்ள வாட்சு வேண்டுபவர்களுக்கு ''ஜெண்டில்'' பாகட் வாட்சு மிகச் சிறந்தது. அது இரண்டு ஸ்டைல்களில் கிடைக்கும். 1 இடதுபக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் வசீகரமான எஞ்சின் டர்ன் முதுகுள்ள ஸ்டைல் ''A''. 2 வலது பக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்டைல் ''B''. ஜெண்டில் நம்பத்தகுந்த மணிகாட்டும் கருவி. பூரா ஜுவல்கள் பொருந்தியுள்ளது. அழகான நிக்கல்-கிரோமியம் பிளேட் உள்ள கேஸுடையது. அவ்விலையில் வேறு எந்தவாட்சும் அதற்கு நிகராகாது.



நியூ ஸ்டைல் டயல்



சாதாரண அராபிக் டயல்

ஜெண்டில்
எந்த ஸ்டைலோ-ரகமோ-நிக்கல் ஸில்வர் கிரோமியம் பிளேடட் கேஸுடன்
ரூ. 38.



வெஸ்ட் எண்டு வாட்சு கம்பெனி

பம்பாய் - கல்கத்தா



WEST END WATCH Co

BOMBAY **CALCUTTA**

வெற்றியின் அருணோதயம்

க. சந்தானம்.

நேச தேசத்தார் வெற்றியின் அருணோதயமாகிவிட்டது. நான்கு வருஷங்களாக ஹிட்லரால் நசுக்கப்பட்ட நாடுகள், தங்கள் துர்ப்பாக்கிய இரவு நீங்கி, சுதந்திர சூரியன் சீக்கிரம் உதிக்குமென்று ஆவலுடன் எதிர் பார்க்கின்றன. உலகெங்கும் பாமர மக்கள் ஓர் புதிய யுகம் பிறக்கப்போகிறதென்று நம்புகின்றனர். ஆனால் அறிவாளிகள் மனத்தில் இந்த நம்பிக்கையைப் பாதிக்கக்கூடிய பல சந்தேகங்கள் உதிக்க ஆரம்பித்திருக்கின்றன. கோர யுத்தத்தால் நடுநடுங்கி ஒடுங்கியிருக்கும் பல பேராசைகளும், பழம் பொறாமைகளும் மீண்டும் தலைதூக்குவதைக் கண்டு அவர்கள் ஐயமுறுகின்றனர். இவைகள் ஓங்கிவருமாயின், இந்த யுத்தத்தின் வெற்றியும் சென்ற யுத்தத்தின் வெற்றிபோலப் புதியதோர் சிந்திக்கக்கூடாத மகாயுத்தத்தின் வித்தாகக்கூடும். இது வீண் பிரமையன்று. இந்த யுத்தத்தை ஒப்பற்ற வீரத்துடன் சமாளித்து வரும் தலைவர்களின் பெருமையைக் கண்டு பொறாமையாலுதிக்கும் வீண் அபவாதமன்று. உலகனைத்தும் அசாத்தியமென்ற காரியத்தை அஞ்சாநெஞ்சமுடன் சமாளித்து, தோல்வியை வெற்றியாக மாற்றிய ஸ்ரீ சர்ச்சிலின் சாமர்த்தியத்தையும், தீரத்தையும் கணக்கிடமுடியாது. எந்நிலையிலும் சாந்தசித்தத்துடன், தமது நாட்டின் அபார சக்திகளை விசித்திரமாகத் திரட்டி வெற்றிக்கு நாயகனாக விளங்கும் ஸ்ரீ ரூஸ்வெல்டின் பெருமையைப் போற்றாமலிருக்க முடியாது. ஸ்டாலின் திறமையைக் கூறவும் வேண்டுமோ? இருபத்தைந்துவருஷத்திற்குமுன் இந்தியாவைப்போல் இருளில் மூழ்கிக்கிடந்த மக்களைக்கொண்டு ஓர் ஒப்பற்ற சமுதாயம் சிருஷ்டித்து, யுத்தத் தீயில் பரீக்ஷை செய்து வருங்காலத்திற்கு அதனை ஆதர்சமாகச் செய்துவருகிறாரன்றோ?

ஆனால் ஒன்றைமட்டும் நாம் மறந்துவிடலாகாது. யுத்தத்தில் திறமை காட்டுவதே பெருமைக்கு ஆதாரமாகஇருப்பின் இவர்களுக்கும் ஹிட்லருக்கும், டோஜோவுக்கும் அதிக வித்தியாசமில்லை. கடைசியில் தோற்றாலும், ஹிட்லரின் யுத்தத்திறமையை, டோஜோவின் சாமர்த்தியத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். இவ்விரு கக்ஷித் தலைவர்களுக்குமுள்ள உண்மையான வித்தியாசம் யுத்தத் திறமையைப்பற்றியதன்று, யுத்தத்தின் லக்ஷியங்களையும், வெற்றியின் பலன்களையும் பொறுத்திருக்கின்றது. ஹிட்லர், டோஜோ வெற்றிபெற்றால், பலாத்காரமும், எதேச்சாதிகாரமும், ஜாதி இறுமாப்பும் அடுத்த நூறு வருஷங்களுக்குத் தாண்டவமாடும்; நேசதேசத்தார் ஜயமடைந்தால், ஜனநாயகமும், சுதந்திரமும், சமத்துவமும் வளரும்; என்ற நம்பிக்கையே அச்சு நாடுகளின் வெற்றி இரவு போலும், நேசநாடுகளின் ஜெயம் பகல் போலும் தோற்றுவிக்கின்றது.

தோல்வியில் சோர்வடையாமல், யுத்தத்தை வெற்றிவரையில் நடத்துவோர் வீரரேயாவர். ஆனால் வெற்றியால் மயங்காது அதனைத் தர்மத்திற்கு அர்ப்பணம்செய்வோர் அவரிலும் சிறந்த வீரர். வெற்றியின் அருணோதயத்தைக்கண்டு அறிவாளிகள் முற்றிலும் மகிழாமலிருப்பது இவ்வித தர்ம வீர்யம் சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் இம்மூவரிடம் பூர்ணமாகவிருக்குமோவென்ற கவலையினாலேயே.

வெற்றிக்குப்பின் பழைய உலகம் அப்படியே திரும்பிவரும் என்று நன்மையில் சிறிதும் நம்பிக்கையில்லாதவர் கூறுவர். பழைய வாசனைகளையெல்லாம் முற்றிலும் மறந்து, புதிய யுகம் ஸ்தாபிப்பதொன்றே தமது கடனாகப் பாவித்து இம்மூவரும் முயலுவார்கள் என்று உலக சரித்திரமறியாத சிலர் எண்ணுவர். உண்மையில் மற்ற மனிதர்போல்வே, இத்தலைவர்களும் பெரிய நோக்கங்களும், குறுகிய எண்ணங்களும், தர்மமும், சுயநலமும் கலந்த சுபாவமுள்ளவர்களாவர். விசேஷமாக, ஜனநாயகத் தலைவர்கள் வேறுவிதமாகஇருக்க முடியாது. தமது லக்ஷ்யத்தைத் தவிர வேறு எதனையும் பொருட்படுத்தாதவர்கள் துறவிகளாகவோ அல்லது அரக்கர்களாகவோ இருப்பர்.

தவிர, தலைவர்கள் விரும்புவதாலேயே புதிய தர்மயுகம் ஸ்தாபித்துவிடமுடியாது. யுத்தத்தில் கொடுக்கப்படும் பூரண ஆதரவு வெற்றிக்குப்பின் கிடைக்குமென்பது நிச்சயமன்று. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைத்து அதிலுள்ள நாடுகளுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க ஸ்ரீ சர்ச்சில் விரும்பினாலும், அவருடைய கன்செர்வெடிவ் கட்சியார் அதற்கிணங்கார். பிரிட்டிஷ் தொழிற்கட்சியார்கூடச் சம்மதியார். வெற்றிக்குப் பின் உலகின் மூலைமுடுக்குக்களிலிருக்கும் நாடுகளுக்குச் சுதந்திரமளித்து, அந்தச்சுதந்திரத்தைத் தம்படைகளைக்கொண்டு பாதுகாக்க அமெரிக்க ஜனங்கள் உடன்படுவார்களென்று எதிர்பார்க்க முடியாது. பூர்ண ஜெயம் கிடைத்தாலும், ருஷியாவின் அழிந்த பிரதேசங்களையும், தொழில்களையும் புனருத்தாரணம் செய்யப் பல்லாண்டுகள்

பிடிக்கும். மற்ற நாடுகளின் அரசியல் அல்லது சமூகப் பிரச்னைகளில் ருஷியத் தலைவர்கள் விசேஷ சிரத்தை காட்டுவார்களென்றும் எண்ணமுடியாது.

ஆதலால் புத்தி பூர்வமாக யுத்த லக்ஷியங்களையெல்லாம், தற்போதைய தலைவர்கள் பூர்த்திசெய்து வைப்பார்களென்று நினைப்பது ஏமாற்றத்தில் முடியும். ஆனால் நேசதேசத்தாரின் வெற்றியின் பலனாக ஜனநாயகத்திற்கும் பொதுவுடைமைக்கும் புதிய பெருமையுண்டாகும். பலாத்காரத்தின்பேரில் அருவருப்பு அதிகமாகும். எதேச்சாதிகாரத்தின் செல்வாக்கு மறைந்துவிடும். நேச நாடுகளின் தலைவர்களும் தங்கள் லக்ஷ்யங்களை முற்றிலும் மறந்துவிடமாட்டார்கள். தங்களாலானவரையில், தங்களுக்கு ஆதரவிருக்குமளவில், தங்கள் நாடுகளின் நலம் பாதிக்காதவாறு அவைகளை நிலை நிறுத்த முயலுவார்கள். இந்த முயற்சிக்கு ஆதரவளித்து, அவர்களுடைய நல்லெண்ணங்களைப்பெருக்கி, குறுகிய நோக்கங்களைப்பொறுமையுடன் கண்டித்து வெற்றியின் அருணோதயத்தைச் சுதந்திரச் சூரியோதயமாக்குவது உலகிலுள்ள அறிவாளிகளின் கடமையாகும்.

(13-ஆம் பக்கம் தொடர்ச்சி.)

உதவும். சந்திரபுஷ்கரணியிலோ சாயங்கால வேளைகளில் வைதிகமுறை தவறாது சந்தியாவந்தனம் செய்து ஜபம் செய்யும் ஸ்னாதனிகளின் கோஷ்டிகூடும். ஜபம் செய்யும் மத்தியில்தான் அக்கப்போர் பிரசாரம் தொடங்கும். ஜபம் முடியுமோ முடியாதோ அதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது. தங்கள் மேல் வேஷ்டியை மார்பில்போட்டு அதனுள் கையை மறைத்து வைத்துக்கொண்டு ஜபம் செய்பவர்கள், இந்தப் பேச்சுவேகத்தில் மறந்து கையை வெளியில் எடுத்துக்கொண்டு ஆட்டி மடக்கி உரத்த குரலில் பேசுவதைக் காணலாம். இந்த இடத்தில் உற்பத்தியாகும் "சரடு" சந்திரபுஷ்கரணியைச் சேர்ந்தது. நவீன முறையில் "பேசும் கிளப்புக்கள்" இவர்களுக்கில்லாவிடினும், அவற்றைக்காட்டிலும் சுகாதார முறையில் அதிக வசதியுள்ள இடங்களாகிய கருட மண்டபம், சந்திரபுஷ்கரணி, முதலிய கிளப்புக்களில், சந்தா, சட்டம், இந்த உபத்திரவங்கள் இல்லாதபடி இவைகள் நடக்கும். எல்லாம் ஊருக்கேற்ற முறை. முடிவில் இரண்டொரு பிரச்னை.

(1) பொழுது போகும்படியான நேரம் மனிதனுக்கு உண்டா?

(2) அப்படியிருந்தால் அதை எவ்விதம் உபயோகப்படுத்துகிறது.

(3) நன்மைக்குக்கூட அதை உபயோகிக்க முடியுமா?

(4) அதை எவ்விதம் செய்வது?

இவற்றையெல்லாம் இதைப்படிப்போர் சிந்தனை செய்துகொள்ளவேண்டும்.

NICO FERRIN

Iron and Vitamin B Tonic.

நிக்கோ-பெரின்

அயர்ன் வைடமின் B டானிக்

ரத்த சோகை, பெர்னீஷஸ் அனிமீயா (Anaemias-Primary, Secondary) பலஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்குச் சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஓச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

KERMES INDICA

கர்மஸ் இண்டிகா

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையைச் சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாபக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பைக் குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— **K. P. LIMITED.,**
40, Hunters Road, VEPERY MADRAS.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

"ராமையா"

●

சென்ற மாதம் "அபிப்பிராயங்களில்" மைலாப்பூர் ரசிக ரஞ்சனி சபையைப்பற்றிச் சிறிது நிஷ்டுரமாக எழுதினேனல்லவா? கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது! பலபேர் பலவிதமாக என்னைக் கொத்திவிட்டனர்!

"என்ன ஸார், காவேரி ஒன்று உங்கள் கையில் அகப்பட்டது என்று கருதி, கண்டதையும் பற்றி எழுத ஆரம்பித்துவிட்டீர்களே" என்றார் ஒருவர். "ஸ்வாமி! காவேரி என் கையில் அகப்படவில்லை. காவேரியின் கையில் நான் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன்! எதைப் பற்றி எழுதுவது என்று யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது ரசிக ரஞ்ஜனி சபையில் எனக்கு நேர்ந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது! ஆகவே எழுதினேன்! கண்டதைப்பற்றித்தான் எழுதினேன்! கேட்டதையும் எழுதினேன். எழுதிய விஷயத்துக்குச் சமாதானம் உண்டோ" என்று பதில் அளிக்க,

"சமாதானமா! ஆடிமாதக்காற்றில் அம்மியும் உரலும் ஆகாயத்தில் எழும்ப, இந்த எச்சிலிலை என் கதி என்னவோ என்று கேட்ட மாதிரி" என்று ஆரம்பித்தார், நண்பர்—

"எச்சிலிலை என்பது ராமய்யாதான். ஸ்வாமி! அந்த அம்மியும் உரலும் யாரோ" என்றான் அம்மாஞ்சி.

"இதைக்கேள், அம்மாஞ்சி! நீ விஷயம் தெரிந்தவன்! உனக்குச் சொல்லுகிறேன்! எனக்குத் தெரிந்து எத்தனை ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களும், பெரிய கவர்மெண்டு அதிகாரிகளும் மாதக்கணக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? சபையில் காலியே கிடையாது! ஆயிரத்து நூறு மெம்பர்களுக்குத்தான் உட்கார இடமுண்டு. இப்பொழுது அத்தனை பெயர்கள் இருக்கின்றனர். இனியெப்படி புதிய மெம்பர்கள் எடுப்பது?"

அம்மாஞ்சி; "இந்த 1100 பேர்வழிகளில் யார் யார் சரிவரச் சந்தாவைச் செலுத்தாமலிருக்கிறார்களோ அவர்களை நிர்த்தாக்ஷணியமாக விலக்கிவிட்டு, பதிலுக்கு 'லைப்மெம்பராகவே' சேர்த்துவிடுகிறதுதான் முறை".

நண்பர்—"அப்படி ஒருவருமில்லையே! எல்லோரும் மிகவும் சிரத்தையுடனே சந்தாவைச் செலுத்திவிடுகின்றனரே! தாக்ஷணியத்துக்கே இடங்கொடாமல் அல்லவோ நடந்துகொள்கின்றனர்!"

அம்;-(குதித்தெழுந்து) "அடேயப்பா! அப்பு அழுக்கு இல்லாத 1100 ரசிகர்கள் இருக்கும் இடத்தில், இந்த எச்சிலைபோன்ற மனுஷனுக்கு (என்னைச்சுட்டிக்காட்டி) எங்கே இடம்! ஏண்டாப்பா, ராமய்யா! உனக்கு எவ்வளவு முறை நான் சொல்லியிருக்கிறேன்! அவசரப்பட்டு எழுதிவிடாதே! வாய்கொழுப்பு சீலையாலே வழியும்! மைலாப்பூரில் இருக்கிற பெரியமனுஷாள் எல்லாரும் விஷயம் தெரிந்தவர்கள்! நீஎண்ணிய மாதிரி தெரியாத்தன்மையாக ஒன்றும் செய்யமாட்டார்கள்? மணி அய்யர், பாஷியம் அய்யங்கார், பி. ஆர். சுந்தரய்யர் இவாள் எல்லாம் இருந்த ஊரிலே இருக்கும் சபையிலே, ஒரு ஓரத்திலே நீயும் ஒண்டிக் கொள்ளவேணும் என்று பார்க்கிறாயே! சுண்டைக்காய் பயல்! அதிலும் வத்தல்போட்ட சுண்டைக்காய்! போடா! போ! அசடு" என்று சொல்லிக்கொண்டு என்னை இழுத்துச்சென்றுவிட்டான்!

ஃ ஃ ஃ

இதற்குப்பின் எனக்கு இருந்த கோபத்தைத் தீர்ப்பதற்காக அம்மாஞ்சி;—"பட்டணத்துப் பெரிய மனுஷாளோடே உனக்குப் பழகத் தெரியவில்லை! ஓசைப்படாமல்போய் நுழைந்து விட்டு, அதற்குப் பிறகு அட்டகாசம் பண்ணினால் அவர்கள் பேசாமலிருப்பார்கள். நுழையும் போதே வள்! வள்! என்று குச்சிநாய் குலைப்பதுபோல குலைத்தால்! இனிமேலாவது தெரிந்துகொள்ளு" என்று சொல்லி முடித்துவிட்டான்!

போரிலும் கொள்ளிவைத்து, மாரிலும் அடித்துக்கொள்ளுவான் அம்மாஞ்சி! கிராதகன்!

ஃ ஃ ஃ

அம்: துக்கடா என்றால் என்ன அர்த்தம் ராமய்யா?"

நான்: "சிறியதுண்டு; அற்பமான வஸ்து என்றும் சொல்லலாம்! காபி ஓட்டல்களில், காரா துக்கடா என்ற வஸ்துவும் உண்டு!"

அம்: "சங்கீதக் கச்சேரிகளிலோ?"

நான்: "அவையா? கடைசியாகச் சில்லறை உருப்படிகளுக்குச் சொல்லுவார்கள்! தமிழில் காவடிச்சிந்து, தெம்மாங்கு, நொண்டிச்சிந்து, சின்ன தேசிய கீதங்கள் இவைகளைக்குறிப்பிடும்! ஏன் தெரியாதமாதிரி கேட்கிறாயே?"

அம்:- "தெரியும்! ஆனாலும் புதிய ஒரு இயக்கத்தில், ஒருவித்வான், தமிழில் சொந்த சாஹித்யங்களாகவே பல உருப்படிகளைப் பாடிவிட்டு, கடைசியாக, "இனி துக்கடாக்கள் சில பாடுகின்றேன்", என்று சொல்லிவிட்டு, காம்போதியில் 'மரிமரி நின்னே', சுத்த சாவேரியில் 'தாரினி தெலிசு கொண்டி', தர்பாரில் 'முந்துவெனுக' என்ற கீர்த்தனைகளைப் பாடிக் கச்சேரியைச் சமாப்தி செய்தாராம்."

நான்:- "என்ன என்ன? இது எங்கே, எப்போ, யார்?—

அம்:- "அதெல்லாம் கேட்காதே! விஷயம் தெரிந்த ஒரு நண்பர் இதை எனக்குச் சொன்னார்! ஆனால் அது வாஸ்தவமான சம்பவமா என்று மாத்திரம் கேட்காதே! அவர் நல்ல ரசிகர்! அவர் வாயால் 'இந்தச் சம்பவம் நடந்தது' என்று சொன்னால், அச்சம்பவம் நடந்திராமலிருந்தாலும், பின் ஒரு காலம் கட்டாயம் நடக்கலாம்.—உம்! நடக்கும்!—என்றே நான் சொல்லுவேன்!"

இந்தமாதிரி அஸம்பாவிதமான விஷயங்களுக்கெல்லாம் அம்மாஞ்சி அஃது என்று சொல்லிக்கொண்டிருப்பான்! நிஷ்கண்டகன்!

ஃ ஃ ஃ ஃ

சென்ற மாதம் ஒரு பெரிய மணக்கோலச் சங்கீதக் கச்சேரிக்கு நான் சென்றேன். மகத்தான கூட்டம்! ஆண் மக்களின் உடைகளென்ன! பெண்மக்களின் ஆடையாபரணங்களென்ன! ட்வீட் ஸூட்டுகள் களஞ்சியமாயிருந்தது! டிஷ்யூ ஸாரிகளின் சப்தங்கள் வைக்கோல் போரில் பெருச்சாளிச் சண்டை மாதிரியிருந்தது. நான் ஒருவன் மாத்திரம் காதி வேஷ்டி, வெள்ளை ஜுப்பாவுடன் சென்று நாற்காலியில் அமர்ந்தேன். பக்கத்தில் இருந்த ட்வீட் ஸூட் நண்பர் ஒருவர்-மகத்தான ஸர்க்கார் உத்தியோகஸ்தர்—என்னைப் பார்த்து," என்ன, ஓய், நாட்டுக்கோட்டைச் செட்டியார் கடையில் குமாஸ்தா வேலை எப்பொழுது ஏற்றுக்கொண்டீர்" என்றார்! "ஏன் அப்படிக் கேட்கிறீர்" என்றேன். உம்முடைய உடையைப் பார்த்தால் அப்படியிருக்கிறதே" என்றார்! தமிழ்நாட்டிலுள்ள நவீன நாகரிகத்தில் தமிழ்மக்கள் மணக்கோலத்துக்கு வரும்போது ஆங்கில உடைகளை அணிந்துவருவது நியாயம், சுதேச உடைகளை அணிவது அசந்தர்ப்பம்! பன்னீர் தெளித்தால் ஓடுவது, ஏனென்றால் கஞ்சிபோட்ட காலரும் பட்டு நெக்டையும் கெட்டுப்போமாம்! சந்தனப்பேலாவைக் கண்டால் ஒரு விரலைவிட்டு மோப்பது! உள்ளங்கையில் எடுத்துக்கொண்டால் பூசிக்கொள்ள உடம்பில் இடமில்லையே! சட்டைகளால் மூடப்பட்டிருக்கும் சரீரத்தில் ஸ்தலம் எங்கே? இச்சம்பவத்தை அம்மாஞ்சியிடம் சொன்னேன். அவன் அளித்த பதில் என்ன தெரியுமா?

"நீ எதற்காகச் சாயந்திர வேளையில் 'ரிசெப்ஷன், மியூஸிக்' என்று குறிப்பிட்ட வேளையில் சென்றாய்? 'ரிசெப்ஷன் என்பது வெள்ளையர் உடுப்புக்கே உரியது! அப்பொழுது உள்ள சங்கீதமோ உன் செவிக்கு நாராசம்! ஆகையால் சம்பிரதாயமாக நீ முகூர்த்தத்துக்குப் போயிருக்கவேண்டியது நியாயம்! அப்பொழுது போயிருந்தால் ட்வீட் ஸூட் குடுக்கைகளைப்பார்த்திருக்கமாட்டாய்! பூஜை வேளையில் நுழைந்த கரடிமாதிரி நீ நடந்துகொண்டாய். ஆதலால்தான் உனக்கு நடந்தது பூசை!

ஃ ஃ ஃ ஃ

மதராஸ் ரேடியோவில் காலை $7\frac{1}{2}$ மணிக்கு பூபாளராகம் வாத்திய கோஷ்டியார் வாசிக்கிறார்களாம். இந்த ராகம் சம்பிரதாயப்படி அதிகாலையில், நித்திரையிலிருந்து விழிப்பதற்கு ஆதாரமாகப்பாடுவது ஸகஜம். காலை $7\frac{1}{2}$ மணிக்கு (புது மணியாயிருந்தும்) இந்த ஆதாரம் வேண்டியிருப்பவர்கள் கருப்பு துரைமார்கள்தான்! இதற்குஉபமானம் அம்மாஞ்சி சொல்லக்கேளுங்கள்! மத்தியானம் 12 மணிமுதல் சாயந்திரம் 4 மணி வரையில் ஒருவன் தூங்கிவிட்டுவிழித்தவுடன் தடபுடலாகப் பல்லுக்குச் சியைவாயில் வைத்துத் தேய்க்க ஆரம்பித்தானும்! இயற்கை வாசனை யென்பீரோ? ரேடியோ அதிகாரிகள் இந்தமாதிரி 'வாசனை' விசாரணையில்தான் விவஹாரம் நடத்துகிறார்கள்.

முன் ஒரு முறை ஒரு சங்கீதக்கச்சேரியைக் குறித்து எழுதியபோது, அங்கு வந்திருந்த ரசிகர்களில் சிலர் கோட்டு, தலைப்பாகை, ஸ்டிப் காலர், நெக் டை, பஞ்சகச்சம், ஸாக்ஸ், பூட்ஸ் இந்த வேஷத்தில் வந்ததாக எழுதினேன், ஞாபகமிருக்கும்! இத்தகைய கதம்பகளஞ்சியங்கள் அதிகரித்து வருகின்றன! அம்மாதிரி வேஷதாரிகளைப்பார்த்தவுடனே அம்மாஞ்சி விசிறியை யெடுத்துத் தன்னை விசிறிக்கொள்ளுவான். ஏனென்றால் அந்தக் காட்சியே அவனை உஷ்ணப்படுத்துகிறதாம்! "இது என்ன ஆச்சரியம்" என்பான் அம்மாஞ்சி. "நம் நாட்டில் உள்ள கலப்படங்கள் எல்லையற்றன! உடையில் மட்டுமல்ல! மைக்கல் சுப்பிரமணியன் என்று ஒருவன் பெயர் இருக்கும்! மைக்கல் என்ற பெயரை யெடுத்துக்கொண்டவன் அந்த மயில் வாகனனை விட்டுத் தள்ளக்கூடாதா? ஆர்தர் கிருஷ்ணமாச்சாரி என்று ஒருவர் இருப்

பார்—ஆர்தர் ஆனபிறகு கிருஷ்ணனையும் பந்தோபஸ்து செய்து, கூட ஆச்சாரியையும் இழுத்துச்செல்வது எவ்வளவு நிஷ்கண்டகம்! பெரிய மனுஷர் ஒருவர் பத்துப்பேர் வெள்ளைக்காரரைக்கூப்பிட்டு டீ பார்ட்டி கொடுப்பார். நல்ல வித்வான் ஒருவர் (நம்ம செம்பை வைத்தா பாகவதரைப்போல் ஒருவரைக்)கச்சேரி பண்ணச் செய்வார். பாகவதர் 1½ மணிநேரம் அழகாகப் பாடுவார். வெள்ளைக்காரர் எல்லாம் பெரிய சுருட்டுக்களைப் பிடித்துக்கொண்டு கேட்டுவிட்டு, கடைசியாகப்போகும்பொழுது, அவர்களில் முக்கியமான வெள்ளையன் வந்து, பாகவதர் கையைப்பிடித்துக் குலுக்கிவிட்டு, அவர் கழுத்தில் போட்டிருக்கும் ருத்ராக்ஷத்தைப் பிடித்துப் பார்த்துவிட்டு,'' இதைத்தான் நான் அப்போதுமுதல் பார்த்துமெச்சிக்கொண்டிருந்தேன், எனக்கு இந்த மாதிரி ஒன்று வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப்போய்விடுவான்! எல்லோரும் ''துரை, நன்னு கேட்டான் ஸார்! பாருங்கோ! பாகவதர் ருத்ராக்ஷத்தைக்கூட தொட்டுப் பாத்துட்டான்'' என்று ஆநந்திப்பார்கள்''

ஃ ஃ ஃ

அம்மாஞ்சி சொல்வது ரொம்பவும் சரி—நாம் கையாடும் கலப்படம் உண்டே! அது இவ்வளவு அவ்வளவு என்று சொல்லவே முடியாது!

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து.)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறுர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

பாமினியின் கொலு

எம். எஸ். கமலா

●

தசராவிற்காக ஸரஸ்வதி நிலயத்தின் ஸ்தாபகி சங்கரியம்மாள் விடுமுறைவிட்டாள். சங்கரியம்மாள் நல்ல விவேகி. எவ்விஷயத்தையும் ஆராய்ந்து அர்த்தமுள்ளதாய்ச்செய்வாள். விடுமுறைகளுக்கு முன் பிரார்த்தனை ஹாலில் மாணவிகளைச்சேர்த்து, "குழந்தைகாள்! நாளையிலிருந்து உங்களுக்கு பதினைந்து நாட்கள் தசரா விடுமுறை. நீங்கள் இதை வெறும் பொம்மைக்கொலுவாய் நினைக்காமல் உங்கள் கலா நைபுண்யத்தையும் சாமர்த்தியத்தையும் காண்பிக்கவேண்டும். நம் ஹிந்து குடும்பங்களில் ஒவ்வொரு பண்டிகையும் ஒவ்வொரு நற்பாடத்தைக் கற்பிக்கிறது. நாம் அதையறியாமல் பண்டிகை நாளன்று புது உடைகள் உடுத்துப் பக்ஷயபோஜனங்களுடன் உண்டு, பேசும் படங்களைப் பார்க்கச்சென்று விடுகிறோம்.

'நவராத்திரி என்னும் இத் தசரா கொண்டாட்டம் பெண்ணின் பராக்கிரமத்தையும் பெருமையையும் வெளியிடும் தேவியின் புகழ் பெற்ற மகிஷாசுரவதம். அம்பாள் பராசக்தி மஹாக்ரூரனான எருமை முக அரக்கனை (மகிஷாசுரன்) திரிமூர்த்திகளாலும் அடக்க முடியாமல் போகவே, அருள்ராணி (லக்ஷ்மி) கலைவாணி (ஸரஸ்வதி) இருவர்களையும் சேர்த்துக்கொண்டு நவராத்திரி (ஒன்பது இரவுகள்) கொலுவிருந்து பத்தாம்நாள் தன் சாமர்த்தியத்தை வெளியிட்டாள், அரக்கனைக் கொன்று விஜயநாதத்துடன். அன்றுதான் விஜயதசமி அந்நாள் எப்பேர்ப்பட்டவர்களுக்கும் வித்தியாப்பியாசத்திற்கேற்ற பொன்னாளான நன்னாள் அன்றுதான் சாதாரணமாய் குழந்தைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்கிறார்கள்.

தேவியின் ஒன்பதுநாள் கொலுவு நாம்வைக்கும் பொம்மையைப்போல் அலங்கரித்துக்கொண்டு அசையாமல் அமர்ந்திருந்ததன்று. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாஹனங்களில் திரோகித்து. ஒவ்வொருவித ஆயுதப்பயிற்சியை ஒத்திகை (ரிஹர்சல்) செய்து அவன் எவ்விதமாய்த்தாக்க வந்தாலும் அவனைத் தைரியமாய் எதிர்க்கும் வகையில் தன்னைத் தயார் செய்துகொண்டாள். கடைசிநாள் முச்சகமும் முழித்துப்பார்க்க அசுரனை அனாயாசமாய்க்கொன்று, 'வன்னி' மரத்தைப் பூஜை செய்து தன்னிருக்கைக்கு வந்தாள். பாமரர் ஆயுதபூஜை என்று தம் விருத்தியின் ஆயுதங்களை வைத்து 'விஜயதசமி' யன்று பூஜிக்கிறார்கள். நாம் நம் ஆயுதத்தை கல்வியாய்க் கருதுவதால் புஸ்தகங்களை வைத்துப்பூஜிக்கிறோம்; ஸரஸ்வதீபூஜை என்றும் சொல்கிறோம்

நாம் இவ்வீர பூஜையைச்செய்து 'ராணி துர்க்காவதி ஜான்ஸி லக்ஷ்மீபாய் பத்மினி முதலியவர்களைப்போல் வீர வனிதைகளாகவும், ஜீஜாபாய், ஸ்வர்ணமுகி (ராணா பிரதாபஸிம்மனின் தாய்) இவர்களைப்போல் வீர ஸந்தானங்களின் மாதாக்களாய் பேரும் கீர்த்தியும் பெற வேண்டுமென்று, தேவியைப்போல் தைர்யமாய் நம் ஜீவித எல்லையை வீரமுடன் கடந்துவரும் சந்தானர்களிடையே நம் பேர் சிலாக்ஷரங்களாய் இருக்கவேண்டுமென்பதை நினைத்து, கொலுவை வெறும் விளையாட்டாய்க் கருதாமல், கலை ஞானம் வீரம் இவைகளின் ஊன்றுகோல் என்பதை நினைவு வைத்துக்கொண்டு, தேவியின் கொலுவை உற்சாகமாய்க்கொண்டாடுங்கள். வடக்கே கல்கத்தாவிலிருந்து காசிவரை இத்துர்க்க பூஜையை வெகு பிரபலமாய்க் கொண்டாடுகிறார்கள். ஆந்திர பிரதேசங்களில் விஜயதசமியன்று வித்தியார்த்திகள் ஆசானுடன் சேர்ந்து சமீ விருக்ஷ பூஜை செய்து, கையில் வில்லம்புடன் தங்கள் வீட்டிற்கு வந்து பெற்றோர்களை, பந்துக்களை வணங்கி, குருவிற்குக் குருதக்ஷிணை வாங்கிக்கொடுத்துப் பிராசீன சம்பிரதாயத்தை நினைவுறுத்துவார்கள். அவர்கள் அச்சமயம் சொல்லும் ஹாஸ்யப்பாடல்

"ஆசானுக்குப்போதும் ஐந்து வராஹன்கள் பிள்ளைகளுக்குப் போதும் பருப்புப்பணியாரங்கள்"— அதில்கூட குருவிற்குத் தக்ஷிணையும் பிள்ளைகளுக்குத் தின்பண்டங்களும் ஏழையானாலும் உபாத்தியாயருக்கு நான்கணா வெள்ளிப்பணமும், வெற்றிலைபாக்கும் கொடுத்து, பிள்ளைகளுக்கு உடைத்த கடலையையும் வெல்லத்தையும் கொடுத்தனுப்புவார்கள். ராஜபுத்திரர்கள் விஜயதசமியன்று வேட்டைக்குச்சென்று அதமபக்ஷம் ஓர் முயலையாவது வேட்டையாடி வருவார்கள். இப்பேர்ப்பட்ட உத்கிருஷ்டமான கொண்டாட்டத்தை நாம் எப்படிக்கொண்டாடுகிறோம்? என்று ஓர் கேள்வியுடன் முற்றுப் புள்ளி வைத்தாள்.

சங்கரியம்மாளின் வீரம் நிறைந்த சொற்பொழிவைக்கேட்ட மாணவிகள் தங்களை மறந்து கேட்டதுமன்றி தாங்களும் அம்மாதிரி கொலுவைக்கவேண்டுமென்று நினைத்தனர்

2

ஸரஸ்வதி நிலையத்தில் பாமினி சேர்ந்து இரண்டு வருடமாயிற்று. எட்டாவது வகுப்பு படிக்கிறாள். நல்ல சமர்த்து மூக்கும் முழியும் திருத்திவிட்டாற்போல் இருக்கும். சற்று கருப்பு, "ஆனாலும் அவள் அழகுதான்" என்று எல்லோரும் சொல்வார்கள். தந்தையற்றவள்.

சுப்பிரமணியன் கோயில்தெருவில் ஓர் பெரிய மாடிவீட்டில் தாயும் மகளும் இருக்கிறார்கள். பாமினியின் தாய் 'ருக்மணி'. முப்பது வயதிற்குள்பட்ட ஓர் கைம்பெண். பாமினியைச்சமர்த்தாய் வளர்த்து ஓர் நல்ல வரனுக்குக் கொடுத்துத்தன் ஜன்மத்தைச் சாந்தமாய்க்கடத்த அல்லும்பகலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். பெண்ணை எங்கும் அனுப்பமாட்டாள். தானும் செல்வதில்லை. காலத்தை யனுசரித்துப்பெண்ணிற்குக்கல்வியும் சங்கீதமும் கற்பித்தாள். அதற்காகப்'பாமினி' வீட்டைவிட்டு வெளியில் செல்லவேண்டி இருந்தது.

ருக்மணிக்குத் 'தசரா' என்றாலே உள்ளம் துடிக்கும். அவள் கொலுவைப்பதே இல்லை. ஸரஸ்வதிபூஜை மாத்திரம் பெண்ணின் நலத்தைக் கருதிச்செய்வாள். பாமினியும் விவரமறிந்து தன் வீட்டில் கொலுவைக்காமலிருப்பதைப்பற்றி அவ்வளவு சிரத்தைகொள்ளவில்லை. ஆனால் இன்று தலைமை உபாத்தியாயினி சங்கரியம்மாளின் சொற்களைக்கேட்டதிலிருந்து தங்கள் வீட்டில் அழகுபெறக்கொலு வைத்து அம்பாளை உபாஸிக்கவேண்டுமென்று தோன்றிவிட்டது. வீட்டிற்கு ஓடோடியும் வந்தாள். அவள் தாய் மறுநாள் வரும் தன் கணவரின் திதிக்காக ஏதோ வேலைசெய்துகொண்டிருந்தாள். அவள் கண்கள் நீரைச் சொரிந்துக்கொண்டிருந்தன. காய்கறிகளை அலம்பி எடுத்துவைக்கக் கூடையை எடுத்தாள். அதில் அறுந்த கயிறுகள் துண்டு துண்டான காகிதங்கள் இருந்தன. அறுந்து விழுந்த கயிற்றுத் துண்டுகள் போலும் துண்டித்த காகிதங்கள் போலும் அறுந்த அவள் வாழ்க்கை எங்கோ சிதறிய மனதுமாய் இருந்தாலும் அவள் கைகள்மாத்திரம் இயந்திரம் போல் தங்கள் கடமையைச்செய்து கொண்டிருந்தன.

அச்சமயம் 'பாமினி' "அம்மா!" என்று அதிக ஆனந்தத்துடன் கூவியபடியே குதித்துக் கொண்டு வந்தாள். அவள் சிந்தனை எங்கோ சிதறி அதில் லயித்திருக்கும்போது அதற்கு விக்கினமேற்படவே நீர் சோர்ந்த கண்களில் கோபம் ஜ்வலிக்க "என்னடி! தடிக்கழுதை. என்ன கூத்தாட்டம், குதிரையாட்டம் வளர்ந்திருக்கே! பதவிசாய் லக்ஷணமாயில்லாமல் பச்சைக் குழந்தையாட்டம் குதிக்கிறதும்......

ஆனந்தமும் ஆவலும் துள்ள ஓடிவந்த பாமினி அடிபட்ட வேங்கைபோல் அப்படியே நின்றாள். பிறகு தன்னைச்சமாதானம் செய்துகொண்டு ஆசையை அடக்கக்கூடாதவளாய் மெல்லியக்குரலில் "அம்மா!" என்று அவள் முன் மண்டியிட்டமர்ந்தாள்.

"என்னடீ! என்ன? பஞ்சப்பாட்டு? அம்மாளுக்கென்ன வந்துவிட்டது?" அவள் கண்ணில் நீர் துளிப்பதைப் பார்த்து "என்ன சொல்லித் தொலையேன்." பாமினியின் குரல்தடுமாறிற்று. ஆயினும் ஆசை வெட்கமறியாதல்லவா? "நம் மாத்திலும்...கொ...லு...வைக்கலாம் அம்மா!"

அதைக் கேட்டதும் ருக்மணியின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அவள் சோகத்தை அடக்க முடியவில்லை. சோகத்தின் அனல் கோபத்தில் ஒலிக்க "எங்கிருந்தடீ கொலு வைப்பது? நீ பிறந்த சவரணைக்கு ஒன்றுதான் பாக்கி" என்று சலித்துக்கொண்டே அப்புறம் சென்றாள். அவள் உள்ளம் கொஞ்சம் சாந்தியடைந்தது. ஏன்? தன் வேதனையைச் சொல்லம்புகளால் மகள்மேல் பாய்ச்சியதும் அவள் சாந்தி பெற்றாள். பாமினியின் ஹிருதயம் நிரம்ப நீர் நிறைந்துவிட்டது. கண்களைக் கசக்கிக் கொண்டே "நான் பிறந்த சவரணைக்குக் கொலு வைக்கக்கூடாதா?" என்று யோசித்தபடியே தடதடவென்று மாடிக்கு ஓடினாள். உலகை முழுதும் கவ்விய மாலை இருள் அவள் முகத்திலும் சேர்ந்து கவிழ்ந்ததோ என்னும்படி அவள் கறுத்தமுகம் இன்னும் கறுத்தது. அவள் கருத்துக்கள் எத்தனையோ மனோ ஆகாயத்தில் உதித்தன. ஆகாயத்திலும் எத்தனையோ தாரகைகள் மிளிர்ந்தன. அவள் செய்வதறியாது கனகாம்பரத்தின் இலைகளைப் பிய்த்துப் போட்டுக்கொண்டிருந்தாள். எங்கோ தெருவில் "பொம்மே வாங்கலியோ பொம்மே புதுச்சேரிபொம்மை" என்ற குரல் கேட்டது. இவள் மனம் இத்தனை வேதனையிலும் பொம்மைக்காரனின் குரலின்மேல் தாவிற்று. மனது குரங்குதானே! அவள் யோசனைக்கு முடிவு ஏற்படவில்லை. மனது யோசனையிலிருந்து விடுபட, தன் நேசியான நித்திராதேவியை அழைத்தாள்.

3

மணி ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது இப்படி அடித்துக்கொண்டே காலப்பிரமாணத்தை அறிவித்து, எல்லோரையும் கிரியாதத்பரர்களாய்ச் செய்துகொண்டிருந்தது. ருக்மணி தன் வேலைகளை எல்லாம் முடித்துப் படுக்கையும் போட்டாள். பாமினியைக் காணவில்லை. பெற்றமனம் பொறுக்கவில்லை. "பாமினி! பா...மி...னி!" என்று உள்ளம்துடிக்கக் கூவியபடியே தெருவில் வந்து நின்றாள்.

"மாமி! பாமினி எங்கே? கொலு வைத்துக் கொண்டிருக்கிறாளா?" என்று அவள் நேசி கேட்பதைப் பார்த்து, பதில்சொல்ல இயலாமல் கற்பதுமைப்போல் நின்றாள். அப்பெண் 'தட

தட'வென்று வீட்டிற்குள் ஓடினாள். சூனிய வீட்டைப் பார்த்து சூனியதிருஷ்டியுடன் வெளி வந்து பாமினியைக் காணோமே!" என்று சொல்லிக்கொண்டே போனாள்.

தாயின் மனது சுக்கு நூறாய்ப் பிளந்தது. "பாமினியைக் காணவில்லையா?" மடமட வென்று வாயிற்படிவிட்டிறங்கினாள். இரண்டு வீட்டிற்கப்புறம் இருக்கும் ஓர் வீட்டிற்குள் நுழைந்தாள். "பங்கஜம்! உங்காத்துலே இல்லே பாமினி!"

"ஏன் மாமி! அவள் எங்காத்துக்கு வரல் லியே! எங்கம்மாகூட பாமினியை அழைச் சுண்டுவான்னு அப்போதிருந்து சொல்றா. நான் தான் இந்த பொம்மை பாத்திரத்தை எல்லாம் துடைத்துவிட்டு அப்புரம் போரேன்னு சொன்னேன்". இத்தனை வார்த்தைகள் அந்தம்மாள் காதில் கேட்கவில்லை. 'எங்காத்துக்கு வரல் லியே!" என்பதுதான் ஒலித்தது. அவள் வயிற்றில் என்னவோ செய்தது. "அய்யோ? பாழும் வேதனையே! சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம். குழந்தை எங்கே சென்றாளோ? என் சலிப்பை அவளிடமா காண்பிக்க வேணும். முக்குறுணிப் பிள்ளையாரே! என் பெண்ணை என்னிடம் சேர். உனக்கு ஈடு தேங்காய் போடுகிறேன்" என்று அவள் வாய் முணுமுணுத்தது. ஹிருதயத்தில் கைவைத்துக் கலக்கியதைப்போல் சங்கடம். அவள் நேசிகள் வீட்டிற்கெல்லாம் சென்று பார்த்தாள். உள்ளே வாருங்களேன் என்று பலவந்தமாய் அழைப்பவர்களிடம் "வருகிறேன்" என்று சொல்லியபடியே முன்னோக்கி நடப்பதும் சில இடங்களில் அதையும் காதில் போட்டுக் கொள்ளாமலும் சென்றாள்.

வீட்டிற்குப் போய் கட்டிலருகில் காலை நீட்டிக்கொண்டு கன்னத்தில் கைவைத்தபடி யோசனையிலாழ்ந்தாள். அதே வீட்டில் அதே அறையில் ஆறாண்டுகளுக்குமுன் அதே அமாவாசையன்று இரவு பத்து மணிக்கு அவள் கணவன் அவளை அருகிலழைத்து "ருக்கு! உன் மனம் என்ன சங்கடப்பட்டாலும் குழந்தையை ஒன்றும் சொல்லாதே! உன் வாழ்க்கையின் வழியை செம்மைப்படுத்த இவ்வீடும் அதைப் பிரகாசப்படுத்தப் 'பாமினி'யும்தான். பிற்காலம் உனக்கு உதவக்கூடியவைகள் இவ்விரண்டும்தான். குழந்தைக்குப் போதிய அளவு கல்வி கற்பித்து ஓர் நல்லவனிடம் பிடித்துக் கொடு. இனி, சொல்வதற்கொன்றுமில்லை. நீ தைரியமாய் உன் சகோதரர்களிடமும், என் சகோதரர்களிடமும் அணுகாமல் உன் கஞ்சியை நீ நேர்மையாய்ச் சாப்பிட்டால் 'வா' என்னும் மரியாதைச் சொல்லாகிலும் சொல்வார்கள். ஆனால் நீ யாரையாவது நம்பி வீட்டை அவர்களிடம் ஒப்படைத்தால் வீட்டை ஸ்வாஹா செய்து உன்னையும் பாமினியையும் நடுத்தெருவில் நாராயணா என்று சந்தி சிரிக்க வைத்துவிடுவார்கள். கஷ்டத்தில் மனோதைரியத்துடன் தங்கள் கடமையை அறிந்து நடந்துகொண்டு ஒருவரை நோகச் செய்யாமல் தாங்களும் நோகாமல் இருப்பவர்களே தன்ய ஜீவிகள். ருக்மணீ! இவ்வீட்டின் வாடகையை வைத்துக்கொண்டு குழந்தையும் நீயும் ஜாக்கிரதையாய் இருங்கள். உன் சங்கடத்தையோ சலிப்பையோ குழந்தைமேல் காட்டி வளரும் பயிரை நாசம் செய்துவிடாதே" என்று சொன்னான்.

மறுநாள் விடிந்து எல்லோர் வீட்டிலும் தசரா பண்டிகை ஆரம்ப தினம் ஆனந்தமாய் இருக்க, ருக்மணியின் வீடு எல்லைகடந்த துக்கத்திலாழ்ந்திருந்தது. ருக்மணியின் செவியில் "உன் சங்கடத்தையோ சலிப்பையோ குழந்தை மேல் காட்டி வளரும் பயிரைநாசம்செய்துவிடாதே" என்றதே மறுபடியும் மறுபடியும் ஒலித்தது. அக்காடாந்தகார அமாவாசை இருள் அவள் மனதிலும் ஓர் பீதியை உண்டுபண்ணி விட்டது.

தாயால் சுடப்பட்ட பாமினியோ மேல் மாடியில் நித்திராதேவியால் தழுவப்பட்டு, தான் பிய்த்துப்போட்ட இலைகளும் பூக்களும் கசங்கி வாட அதன்மேல் கன்னத்தில் வழிந்த கண்ணீர் கரைகட்டி உலர்ந்திருக்க தூங்கிக்கொண்டிருந்தாள்.

4

வடக்கு மாடவீதியில் அவ்வீடுதான் சற்றே பெரிய இரண்டடுக்கு மாடிவீடு. அதில் மாடி முழுவதிலும் வித்தியார்த்திகளும் சில உத்தியோகஸ்தர்களும் சில அறைகளில் வசிக்கிறார்கள். கீழே வீட்டின் சொந்தக்காரி ருக்மணியம்மாள் தன் ஏகபுத்திரி 'பாமினி'யுடன் வசிக்கிறாள். அவளுக்கு வயது பதினான்கு. வெகு நன்றாய்ப் பாடுவாள். அவ்வீட்டில் வசிப்பவர்களை எல்லாம் அவள் கானம் இன்ப வாரிதியிலாழ்த்தும். அவள் பாட்டு அன்றைய தினம் யாரும் கேட்க முடியவில்லை. மாடி அறையில் குடியிருக்கும் வித்தியார்த்திகளிடையேயும் 'பாமினி'யைக் காணம் என்ற சொல் ஓர் பரபரப்பை உண்டுபண்ணியது. எல்லோரும் ருக்மணியம்மாளிடம், அவள் எப்பொழுது வீட்டிற்குவந்தாள்? சாதாரணமாய் அவள்செல்லும் இடங்கள் முதலியவைகளைக் கேட்டறிந்து தேடச்சென்றார்கள். எல்லாருக்கும்பின் வந்த 'கிருஷ்ணமூர்த்தி' உடையைக் கழற்றிவிட்டு. புழுக்கமாயிருந்ததால் மாடிக்குச் சென்றான், அவ்விடம் பூந்தொட்டிகளுக்கருகில் படுத்திருக்கும் பாமினியைக் கண்டதும் திடுக்கிட்டான். அவளருகில் சென்று பார்த்தான். அவள் இன்பக் கனவுகண்டு புன்முறுவல் பூத்தபடி இருந்தாள். அவளைப் பார்த்ததும், 'பசுபதியையே பர்த்தாவாய் அடைவேனென்ற இமவானின் மகள் கடுந்தவமியற்றிச் சோர்ந்து இக்காரிருளில் கண்ணயர்ந்து, பாரினில் நடக்கும் பாப

கிருத்தியங்களைப் பார்த்துக் கண்மூடி நகைக்கிருளோ?" என்னும்படி இருந்தது. ஆனால் அவள் அமைதியுடன் விடும் ஒரேமாதிரி மூச்சு அவள் நித்திரையை அறிவித்தது.

"பாமினி!" என்றெழுப்பக் குரல் கொடுத்தான், அவள் எழுந்திருக்கவில்லை.

மறுபடியும் "பாமினி! பாமினி!" என்றெழுப்பினான். பாமினியின் மனமோ தாயின் சொல்லால் நொந்திருந்ததால் 'அம்மா! கொலு வைக்கவேண்டாம். கேட்டது தப்புத்தான், நீ கோபித்துக்கொள்ளாதே!' என்று சொல்லித் திரும்பிப்படுத்தாள். கண்களைத் திறக்கவில்லை. கிருஷ்ணமூர்த்திக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"புரட்டாசி பேய்ந்தால் பேயும், காய்ந்தால் காயும்" என்பதைப்போல் சிறு தூறலும் வந்தது. "பாமினி பாமினி! எழுந்திரு, மழை வருகிறது" என்று தட்டி எழுப்பினான். அவள் கண்களைத்திறக்கும்போதே நீர் துளித்து நின்றது. "போ அம்மா! எழுந்துபோய் படுக்கையில் படுத்துக்கோ" என்றான். அவள் உடம்பு சிறு நடுக்கம் கொண்டது. மாலை அவள் எண்ணிய எண்ணமும் மொட்டை. அவளால் பிய்த்து எறியப்பட்ட கனகாம்பரச் செடிகளும் மொட்டை. நடுங்கும் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். நீரால் நிரம்பப்பெற்ற பாமினியின் கண்கள் இருளிலும் மின்னிற்று. மாடிப்படியருகில் இருவரும் வந்தனர். "ஏன் பாமினி! கொலுவைக்கவேண்டாமென்றாய்?" அவள் உள்ளத்துள் 'நீ பிறந்த சவரணைக்கு ஒன்றென்றுதான் பாக்கி' என்னும் கூரிய அம்புகள் தைக்க ஆரம்பித்தன. அதே சமயம் கீழே இவள் தாய் "சாயந்திரத்திலிருந்து காணோம். நாளைக்கு அவள் அப்பாவுக்குச் சிராதம். ஏதோ வேலையாயிருந்தேன். கொலு வைக்கவேணுமென்று வந்து கூத்தாடினாள். எனக்கு என்னவோ வேலை ஒருபக்கம், வேதனை ஒரு பக்கம், எறிந்து விழுந்தேன். கண்ணீர் வடிய ஓடினாள் எங்கேபோனாளோ? அவ அப்பா செத்தநாள்தொட்டு நான் கொலுவைப்பதையே விட்டுவிட்டேன். கொலுவென்றாலே என்னை என்னவோ செய்யறது. குழந்தை அவள் கண்டாளா? ஆசையாய்க் கேட்டாள். என் சலிப்பு எறிந்து விழுந்தேன்" என்று கலங்கியபடி துக்கம் தொண்டையை அடைக்க அடுத்த வீட்டம்மாளிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் கிருஷ்ணமூர்த்தி பாமினியை கையைப்பிடித்தழைத்துவந்து, "மாடியில் தூங்கி விட்டாள், படுக்கையில் படுக்கவையுங்கள் ஜ்வரம் வந்திருக்கிறதுபோல் இருக்கிறது" என்றான். பாமினியின் கைகளைப்பிடித்துக்கொண்டு நிற்கும் கிருஷ்ணமூர்த்தியைக் கண்டதும் ருக்மணியின் மனம் எங்கோ சஞ்சரித்தது.

5

இரவு அமைதியுடன் தூங்கினாள் பாமினி. ருக்மணியின் மனதிலோ 'குழந்தையை திருப்தியாய் நடத்து' என்னும் கணவன் சொற்கள்.

ஆறாண்டுகளாய் மூடிக்கிடந்த பெட்டிகளைத் திறந்தாள். எவ்வளவு அழகியபொம்மைகள். நல்ல கலையுணர்ச்சியுள்ள பொம்மைகள். அவள் கணவன் கைகளால் செய்த எத்தனையே "ப்ளைஉட்" சித்திரங்கள். அவைகளை எல்லாம் எடுத்தாள். அவள் மனது கணவன் பாலும் கைகள் கடமையின்பாலும் சென்றுலயித்தன. விடியவிடியக் கண்விழித்து வேலை செய்தாள். அதியற்புதக் "கொலு" வைத்துவிட்டாள். மகளை ஆச்சரியத்திலாழ்த்த அறையை இழுத்துப் பூட்டி இருந்தாள்.

காலை எழுந்த பாமினி ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். ஹோட்டலுக்குச் சாப்பிடச் சென்ற கிருஷ்ணமூர்த்தியின் மனத்தில் தான் குடி இருக்கும் வீட்டில் முதல்நாள் நடந்த சம்பவத்தின் மேலேயே யோசனை சென்றது. யோசனை செய்தவாறே சாப்பிட்டெழுந்தான். வீட்டிற்குவரும்போதுவழியில் "பொம்மேவாங்கலியோ பொம்மே புதுச்சேரி பொம்மே" என்னும் பொம்மைக்காரனின் குரல்கேட்டது. தனக்குப் பின் வந்துகொண்டிருந்தஅவன் அங்கொருவீட்டில் பொம்மைகளை இறக்கியதை திரும்பிப் பார்த்தான். அவ்விடம்போய்ச் சேர்ந்தான். சிறுபெண்கள் கூட்டம். தெருவில் நின்றபடியே பார்த்துக்கொண்டிருந்தான், பொம்மைக்காரன் நாயைக் குதிரை விலை. யானையை நாய் விலை, கடவுள்பொம்மைகளைத் தாழ்ந்தவிலை. சினிமாநடிகர்களின் பொம்மைகளை ரூபாய்கள் கணக்கில் விலை சொல்வதையும். சிலர் பேரம் செய்தனர். விருப்பமுள்ளவர்கள் அவன் கேட்டதைக் கொடுத்துவாங்கினர்.

அதற்குள் ஓர் பெண் "ரமா! நேத்து பாமினி கொலுவைக்கமாட்டேன்னத்துக்கு கோவிச்சுண்டு எங்கையோ ஒளிஞ்சுண்டு அவ அம்மாளை அழவைச்சாளாண்டி" என்று சொல்லிக் கொண்டே வந்தாள். "பங்கஜம்! நேக்குத் தெரியாது. அவ அம்மா கொலுவைக்காமெயே இருந்தா அவளுக்குமாத்திரம் எப்படி இருக்குண்டீ."

இவர்கள் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்த ரமாவின் பாட்டி "கொலுவுன்னு, செத்தானே பாமினியோடே அப்பா, அவன் வைக்கணும், கொலு இன்னிக்கெல்லாம் பார்க்கணும். அப்பேர்ப்பட்ட ஆம்படையான் செத்தப்புறம் ருக்மணி கொலு வைப்பதையே விட்டுட்டாள், அவன் செத்ததும் அந்த நவராத்திரி ஆரம்பத்தன்னிக்குத்தான். இதுக்காகக் கோவிச்சிப்பாளோ? நன்னாஇருக்கு. பச்சைக் குழந்தையா!" என்றாள்.

எல்லோரும் பொம்மைகளை வாங்கியபின் "கிருஷ்ணமூர்த்தி" பொம்மைக்காரனையணுகினான். அவனிடம் இருந்த பொம்மைகள் நன்றாயில்லை. எல்லோரும் எடுத்தது போக மீதி, சூள் கொட்டிக்கொண்டே இரண்டடி நடந்தான். "சாமி! கொஞ்சம் நில்லுங்க, நல்ல பொம்மைதரேன்" என்று ஓடோடியும் அருகிலிருந்த சந்துக்குச் சென்று ஒரு கூடையை எடுத்து வந்தான். அதில் துணியைப்போட்டுச் சுற்றியிருந்த ஒன்றை எடுத்துக் கீழே வைத்து மீதி பொம்மைகளைக் காட்டினான். தனக்கு வேண்டிய 'லக்ஷ்மீ' முதலிய பொம்மைகளை எடுத்துக்கொண்டு "அத்துணியில் இருப்பதென்ன?" என்றான். அது கொடுக்கறதில்லே சாமி" என்றான் பொம்மைக்காரன்.

"கொடுக்காதே போனா போறே, காண்பிடா!" என்றான். அவன் சற்றுநேரம் பிணக்காடினான். பிறகு துணியைப் பிரித்தான், அதில் மூன்றடி உயரம் உள்ள அழகிய மஹிஷாசுரமர்த்தனியின் பிரதிமை வெகு நேர்த்தியாய் இருந்தது. கிருஷ்ணமூர்த்தியின் மனம் அதன்பால் சென்றது. "என்னடா அதன் விலை?"

"அப்பவே அது கொடுக்கிறதில்லேன்னு சொன்னேனே சாமி!"

விலையைக்கூடவா சொல்லமாட்டே"

'என்னாத்துக்குச் சாமி! நான் கொடுக்கறதா இருக்கணும் வெலெ சொல்லணும்' என்று விலையைக்கூடச்சொல்லாமல் சென்றான். கிருஷ்ணமூர்த்தி கடைக்குச்சென்று சிற்சில விநோத வஸ்துக்களையும் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்து "பாமினீ!" என்றழைத்தான். சிரித்துக்கொண்டேவரும் பாமினியைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தப்படி "இந்தா தசரா ப்ரஸன்டேஷன்" என்று அவள் கையில் பொம்மைகளைக்கொடுத்தான்.

"உள்ளே வாருங்கள் எங்காத்துக்கொலுவைப்பாருங்கள்" என்று அழைத்துச் சென்றாள். அழகுபெற அமைந்திருக்கும் அக்கொலுவைப்பார்த்து, "ஏ, ஒன் பாமினி!" என்றான்.

அன்று விஜயதசமி. பாமினி ஒவ்வொருவரையும் பிரத்தியேகமாய் வரும்படி அழைத்து வந்தாள். ஒன்பது படிகளிலும் அம்பாளின் ஒன்பது வாஹனங்களில் அற்புத விக்ரஹங்கள். பத்தாவது படியில் 'மஹிஷாசுரமர்த்தனி' பதினோராவது படியில் தசாவதார விஷ்ணு. ராணா பிரதாபஸிம்மன், சிவாஜி, முதல் காந்தி, ஜவாஹர்வரை வீரர்கள். அதற்கு முன் பாமினி அமர்ந்து, "கல்யாணியை" ஆலாபனம் செய்து "சுந்தரி திவ்ய ரூபமு" என்னும் கீர்த்தனையை அதியற்புதமாய்ப் பாடிக்கொண்டிருந்தாள். கிருஷ்ணமூர்த்தியின் நண்பன் கையிலிருந்த கேமரா "க்ளிக்" என்றது. அம்மாதத்திய ஒவ்வொரு பத்திரிகையிலும் "பாமினியின் கொலு" புகழ்பெறப்பிரசுரித்திருந்தது.

மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு:—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

ஷஷ்டாஷ்டகம்

கே. சுந்தரம்மாள்.

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

4

கோபாலனுக்குத் தகப்பனார் சண்டை போட்ட விபரம் தெரியாது. அதனால் மாமா விடம் படிப்பு முடியுமட்டும் பொறுத்துக் கொண்டிருக்கும்படி கேட்டுக்கொண்டால், பிறகு தகப்பனார் இஷ்டப்படாவிட்டாலும் கல்யாணம் செய்துகொள்ளலாம், பிறகு தகப் பனார் தயவு வேண்டாம், நாட்கள் செல்லச் செல்ல மனஸ்தாபங்களும் மறைந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் செங்கற்பட்டிலிருந்து வரும் வண்டியை எதிர்பார்த்துக்கொண்டிருந் தான். அந்த வாரம் வண்டி வரவில்லை. ஏதோ அஸௌகரியமென்று நினைத்தான் தானாகப் போகலாமென்று நினைத்தான். ஆனால், பள்ளி மாணவர்கள் "உல்லாஸப் பிரயாணம்" போனதால், செங்கற்பட்டுப் பிரயாணத்தை நிறுத் திக்கொண்டான். அடுத்த வாரம் இவனுக்கு ஜ்வரம் வந்துவிட்டது. போகமுடியவில்லை. அவ் விடமிருந்தும் ஒருவரும் வரவில்லை. அதன் பிறகுதான் அவனுக்குத் தகப்பனார் ஏதாகிலும் சண்டை போட்டிருப்பாரோ என்ற எண் ணம் தோன்றலாயிற்று. அதனால் அடுத்த வாரம் தானாகவே சென்று விஷயங்களை அறிந்து வரலாமென்ற முடிவிற்கு வந்தான். அதற்கடுத்த வெள்ளிக்கிழமை விடுமுறையான படியினால், அன்று காலையிலேயே செங்கற்பட் டிற்குச் சென்றான்.

அவ்விடம் போகும்பொழுது மணி பத்து அடித்துவிட்டது. வாசலில் பெரிய கோல மிட்டிருந்தது. 'என்ன விசேஷம்' என்று நினைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். முன் ஹாலில் இவனுக்கு அறிமுகமில்லாத நாலைந்து மனிதர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அதில் ஒருவர் சுமார் இருபத்துஐந்து வய துடையவராயும் நல்லசிவந்த நிறமும் கம்பீரத் தோற்றமும் உடையவராயும் உயர்ந்த நாகரீக தோரணையில் உடுத்துக்கொண்டிருந்தார். இவன் ஒன்றும் அறியமுடியாமல் திறு திறென்று விழித்துக்கொண்டே அவ்விடம் சென்றான்.

"வா அப்பா! கோபால்" என்றார் மாமா. கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தான் ஒன்றும் விளங்கவில்லை. அவனையுமறியாமல் அவன் மனம் எதையோ பறிகொடுத்துவிட்டதுபோல் வேதனையுற்றது. மாமா "வா" என்று சொன் னாரே தவிர ஒன்றுமே பேசவில்லை. மெள்ள அவ்விடத்தைவிட்டு உள்ளே சென்றான். பரி மளாவின் கடைசி தம்பி, பன்னிரண்டு வய துள்ள பாலு, இவனிடம் ஓடிவந்து, "அத்தான்! அக்கா உன்னை ஏமாற்றிவிட்டாள்" என்றான். "என்னடா! இன்று உங்கள் வீட்டிலே என்ன விசேஷம்?" என்றான்.

"உனக்குத் தெரியாதா? பரிமளாவிற்கு இன்று நிச்சயதாம்பூலம். முன் ஹாலில் அழ காக அமெரிக்கன் கிராப்பு வாரிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே அவர்தான் மாப்பிள்ளை. இவ்வளவுநாழி மாடி அறையில் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவருக்கும் தெரியாது, நான் பார்த்துவிட்டேன். ஒருவ ரிடமும் சொல்லாதே என்று பக்ஷணம் வாங் கிக்கொள்ள ஒரு ரூபாய் கொடுத்தாள். உன் னிடம்மாத்திரம்தான் சொன்னேன்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான்.

இதைக் கேட்டதும் அவன் தேகத்தில் அக்னி ஜ்வாலை வீசுவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவன் கண்முன் தோன்றும் பொருள்களெல்லாம் ஒரே சுற்றாகச் சுற்றுவது போலிருந்தது. அப்படியே கீழே சாயும் நிலை மைக்கு வந்துவிட்டான். பக்கத்திலிருந்த சுவ ரைப் பிடித்துக்கொண்டான். 'என்ன செய் வது' என்பது அவனுக்குத் தோன்றவில்லை. அப்படியே திரும்பிவிடலாமா என்று நினைத் தான். ஆனால், உயிர் நீங்கும் தருணத்தில் யாராவது டாக்டர் தற்செயலாக வந்தால், ஒரு சமயம் அவர் கைராசி, உயிர் பிழைக்கலா காதா என்ற எண்ணம் தோன்றுவதுபோல் அந்நிலைமையிலும் பரிமளாவைப் பார்த்தோ மானால் நிச்சயம் அவள் இக்கல்யாணத்திற்குச் சம்மதித்திருக்கமாட்டாளென்பது தெரியும். 'இருவரும் எங்கேனும் தூரதேசம் சென்று ஜீவிக்கலாம்' என்று கேட்டால் அவள் உடன் படுவாள் என்ற நம்பிக்கையுடன் பரிமளா இருக்கும் அறைக்குள் சென்றான்.

அவள் நிலைக்கண்ணாடியின் முன்னின்று ஏதோ ஒரு பாட்டை வாய்க்குள் முணுமுணுத் துக்கொண்டிருந்தாள். அவன் பின்னால்போய்

நின்றான். கண்ணாடியில் இவனது வெளிறின முகத்தைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பூர்ண சந்திரன்போல் பிரகாசித்த அவள் முகபத்மம் கிரஹணத்தினால் பிடிக்கப்பட்ட சந்திரனது நிலைமையை அடைந்தது. அவனை நிமிர்ந்து நோக்கச் சக்தியின்றி, தலைகுனிந்து நின்றாள். இருவரும் சற்றுநேரம் பேசவில்லை. “பரிமளா! இக்கல்யாணம் உனது பூரண சம்மதத்தின்பேரில்தான் நிச்சயமா?” என்று கேட்கும்பொழுதே துக்கம் தொண்டையை அடைத்தது. பதில் பேசவில்லை. அவளுக்கு இன்னது சொல்வதென்று தெரியவில்லை. “நீ, நிச்சயமாகச் சம்மதித்திருக்கமாட்டாயென்று எனக்குத் தெரியும். நான் மாமாவிடம் இதைப்பற்றிக் கேட்கிறேன். சரியானபடி பதில் சொல்லாமல் போனால் நாம் இருவரும் எங்கேனும் சென்று கல்யாணம் செய்துகொள்வோம்” என்று அவள் கையைப் பிடிக்கப்போனான்.

சற்றுப் பின்னால் நகர்ந்து நின்றுகொண்டு “என்னைத் தொடாதேயுங்கள். நான் வேறொருவருக்கென்று நிச்சயிக்கப்பட்டாய்விட்டது. இனி மாற்ற முடியாது. அப்பாவிடம் கேட்டு வீண் மனஸ்தாபம் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம்” என்றாள்.

“என்ன? நீ எப்படிச் சம்மதித்தாய்? நம்முடைய காதல் என்னவாயிற்று? என் மனம் என்ன பாடுபடுகிறது? நீ என்னிடம் சொன்னதெல்லாம் வீண் வார்த்தைகள்தானா? நான் உன்னை மறக்கமுடியுமா? உன் காதல் என்னவாயிற்று?”

“மன்னிக்கவேண்டும். ‘காதல்’ என்பது அர்த்தமற்ற பேச்சு. எனக்கென்னவோ அவைகளெல்லாம் உண்மையெனத் தோன்றவில்லை. ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகுவதாலுண்டாகும் ஓர் பிரேமை அது; அவ்வளவே உண்மை. “தெய்வீகம்” என்றால், அத்தெய்வம், ஜாதகத்தைப் பொருந்தச்செய்து, பெற்றோர் மனத்திலும் இவ்வெண்ணத்தை ஏன் தோன்றச் செய்யக்கூடாது? என் அனுபவத்தில் தங்களுடன் நெருங்கிப் பழகும்பொழுது உங்களிடத்தில் பிரியமே தோன்றிற்று. அன்று உங்கள் அப்பா வந்து சண்டையிட்டுப்போன பிறகு, என் அம்மாவும் அப்பாவும் நீங்கள் வந்தால் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். எனக்கு வருத்தமாக இருந்தது. நல்லவேளையாக நீங்கள் வராமலிருந்துவிட்டீர்கள். போனவாரத்தில் இவர் என்னைப் பார்க்க வந்தார். சிம்லாவில் நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் உத்யோகம் பார்த்துக்கொண்டிருக்கிறார். கல்யாணஞ் செய்துகொள்வதற்காக ஒருமாத லீவில் வந்திருக்கிறார். அதனால் இங்கே வந்ததிலிருந்து தினம் சாயங்காலம் வந்து என்னை வெளியில் உலாவ அழைத்துச் செல்லுகிறார். அவரது பேச்சின் வன்மையோ, விதியின் வன்மையோ எனக்கு உங்களிடம் எந்த உணர்ச்சி ஏற்பட்டதோ, அதேபோல் அவரிடமும் ஏற்பட்டது. இதில் ‘காதல்” என்று எதைச் சொல்லுவது என்பது தெரியவில்லை. அதனால் வெறும் மனப்பிராந்திக்காக நமது வாழ்க்கைச் சக்கரத்தைக் கரடுமுரடான பாதையில் செலுத்த நான் விரும்பவில்லை. பெற்றவர்களை மீறி வெளியில் சென்றோமானால் உங்கள் படிப்பு என்னவாகும்? நாம் எந்தவிதத்தில் சுகமான வாழ்க்கை நடத்த முடியும்? வீண் கஷ்டம்தான் நமது வாழ்க்கையில் கண்டபலனாகும். அத்தைக்கும் அத்திம்பேருக்கும் சம்மதமில்லை. அன்று, “இக்கல்யாணம் என்னைமீறி நடக்குமானால், ஸ்னானப்பிராப்திகூடக் கிடையாது” என்று சொல்லிவிட்டார். இரண்டு வருஷம் காத்திருந்து, உங்கள் பிடிவாதத்தினால் கல்யாணம் நடந்தாலும், அத்தையிடம் நான் நல்ல முகம் காண முடியாது. ஏன் இவ்விதத் தொல்லை? நீங்கள் வேறு அழகான பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால் காதல் உண்டாகாமலா போகும்? உங்கள் நன்மையை உத்தேசித்தே நான் இக்கல்யாணத்திற்குச் சம்மதித்தேன்.”

இதுவரையில் பதுமைபோல் அவள் சொல்லுவதையெல்லாம் கேட்டுக்கொண்டே அவளை வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். பேசி முடிந்ததும் “என் நன்மைக்காகவா? இதைவிட என் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டாயானால் எவ்வளவு நன்மையாக இருக்கும்? நான் உன்னை எவ்வளவு நேசித்தேன்? என் ஹ்ருதயம் என்ன பாடுபடுகிறது? ‘பெண்கள் சஞ்சலபுத்தியுள்ளவர்கள்’ என்பது உண்மையாயிற்று. இப்படிப் பயந்து தங்கள் மனத்தைத் தளரவிடுவதினாலேதான் பெண்கள் சமூகமே முன்னேறமாட்டேனென்கிறது. ‘நான் வேறொருவரையும் விரும்பமாட்டேன்’ என்று உறுதியாகச் சொன்னால் நம் எண்ணம் நிறைவேறாமலா போகும்? பரிமளா, என் வாழ்க்கையை அடியுடன் குலைத்துவிட்டாய்”

“இல்லவே இல்லை. சரத்கால பௌர்ணமியின் சந்திரோதயத்தில் அழகிய புஷ்பத்தோட்டத்தின் மத்தியில் நின்றுகொண்டு, சுற்றிலும் பலவித வர்ணங்களில் மலர்ந்திருக்கும் மலர்களைப் பார்த்துக்கொண்டே நல்லஜாதி மல்லிகையை எடுத்து முகர்ந்தால், எவ்வித ஆனந்தமும் சுகமும் உணர்ச்சியும் உண்டாகுமோ அவ்விதம் உங்கள் வாழ்க்கையின் இன்பம் மலர்ந்து பரவவே நான் இவ்விதம் செய்தேன். நான் கல்யாணமான மறுதினமே அவருடன் சிம்லா செல்வேன். மறுபடி உங்களைச் சந்திக்கும்பொழுது நீங்கள் ஆனந்த சாகரத்தில் மிதந்துசெல்லும் காட்சியை நிச்சயம் பார்ப்பேன். நானும் மன நிம்மதியாகவே வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டுவேன். குழந்தைகள் விளையாடுவதில்லையா? அது உண்மை

யாடுவோம்? அதுபோல் நாமும் அத்தை மகனும் மாமன் மகளும் என்ற முறையில் விளையாடினோம். அவ்வளவே" என்று சற்றும் பதட்டமில்லாமலே சொன்னாள்.

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, "பரிமளா, நீ எவ்வளவு சமாதானம் சொன்னாலும் என் மனம் ஒப்பவில்லையே. இன்னும் சுய மரியாதையை விட்டுக்கொடுத்தே கேட்கிறேன். நீ என்னிடம் எவ்வளவு அன்புவைத்திருந்தாய்? எவ்வளவு காதற்சொற்களை அள்ளி வீசினாய்?"

"மன்னிக்கவேண்டும். காதல்! சொற்கள்! இவையெல்லாம் ஏதோ நீங்கள் சொல்லும் பொழுது நானும் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொன்னேனே தவிர, அவை என் ஹ்ருதய பூர்வமான உணர்ச்சியுடன் கூறப்பட்டன அல்ல. இவரும் உங்களைப் போல் ஏதேதோ சொல்லுகிறார். நானும் சொல்லுகிறேன், அவ்வளவே. இன்னும் என் ஹ்ருதய பூர்வமான புதிய உணர்ச்சி ஒன்றும் தோன்றவில்லை. ஒருவேளை இனிமேல் ஏற்படலாம். நீங்கள் வீணாக வருத்தப்படாமல் சாப்பிட்டுவிட்டுப் போங்கள்." அவனால் அதற்குமேல் அங்கே நிற்கமுடியவில்லை. கோபமிகுதியால் அவன் கண் முகமெல்லாம் அக்னி ஜ்வாலையாக வீசிற்று. பல்லைக் கடித்துக்கொண்டே, "பெண்கள் பேய்களே. தெரியாமலா 'ஆலகால விஷத்தையும் நம்பலாம்' என்று தொடங்கும் பாட்டைப் பாடியிருக்கிறார்கள்? ஆடம்பரம், அழகு, பணம், இவைகளே முக்யம் போலும்? தற்சமயம் இவன் உத்யோகத்திலிருக்கிறான். ஆள் வாட்டசாட்டமாகவும் அழகாகவும் இருக்கிறான். நானோ பிறர் கையை எதிர் பார்க்கும் நிலைமையிலிருக்கிறேன். அதனால் தற்பொழுது வேண்டாதவனாகிவிட்டேன். 'அடி துரோகி! என்னிடம் எவ்வளவு ப்ரேமை வைத்திருப்பதாகப் பாசாங்கு பண்ணினாய்! இன்னும்போன் இடத்தில் இவனுக்கு மேல் உயர்ந்தவனாக யாராவது கிடைத்தால் இவன் பாடும் என் ஸ்திதிக்கு வந்துவிடும்" என்று சொல்லி முடிக்குமுன்னர் 'சிவசிவ' என்று இரண்டு கைகளினாலும் இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டு, "என்ன வார்த்தை பேசுகிறீர்கள்! பெண்களின் ஹ்ருதயத்தை அறியும் சக்தி இன்னும் உங்களுக்கு ஏற்படவில்லை. ஏற்பட்டிருந்தால் இப்படிப்பட்ட சொற்கள் உங்கள் வாயில் வந்திருக்கமாட்டா. ஆனால் நான் இயற்கைக்கு விரோதமாகச்சற்றுத்தவறித் தங்களிடம் நடந்துகொண்டதற்கு இது ஏற்ற தண்டனையே. அர்த்தமில்லாமல், காதல், காதல் என்று சொல்லிப் பெற்றோர்களையும் வருத்தி, நாமும் கஷ்டத்திற்குள்ளாகி வருந்துவதைவிட்டு எல்லாவித ஸௌகரியங்களும் பொருந்தும்படி பெரியவர்கள் பார்த்துச் செய்யும் முறையே சிறந்ததென என் அனுபவத்தில் தெரிந்துகொண்டேன். இப்பொழுது உங்கள் இருவரிடத்தும் ஒரேவிதமான அன்புதான் தோன்றுகிறது. இதனுடைய முடிவை இல்லற நிகழ்ச்சியின் ஆராய்ச்சியில்தான் கண்டுபிடிக்கமுடியும் என்று நினைக்கிறேன். இரண்டாம் முறையாகச் சொல்லுகிறேன். உங்களுடைய நன்மைக்காக, உங்கள் குடும்பத்தில் மனஸ்தாபம் உண்டாகாமலிருக்க, பெற்றோர், பிள்ளைகடமைகள் தவறாமலிருக்க நான் இக்கல்யாணத்திற்குச் சம்மதித்துவிட்டேன். தயவுசெய்து என் பிழையைப் பொறுத்து ஆறுதலடையுங்கள். என் ஹ்ருதயத்தை இறைவனே அறிவார். அவர் காட்டும் வழியில் நிம்மதியாகச் செல்வேன்."

"நீயும் உன் வேதாந்தமும் நாசமாய்ப்போக. இனி உறுதியற்ற இந்தப் பெண்களின் சகவாசமே வேண்டாம்" என்று சொல்லிவிட்டு வெளியிற்செல்ல இரண்டடி வைத்தவன், மறுபடியும் திரும்பிவந்து, "பரிமளா! நான் யார் உன்னை இவ்வளவு கடுமையாகப் பேசுவதற்கு? என் பிழையை எண்ணாதே; மன்னிக்கவேண்டுகிறேன். ஈசன் உன் வாழ்க்கையைச் சந்தோஷம் நிரம்பியிருக்கச் செய்யட்டும்" என்று சொல்லிவிட்டு விர் என வெளியிற் சென்றுவிட்டான்.

பரிமளா அவன் சென்ற திக்கையே வெறிக்கப் பார்த்தவண்ணம் சற்றுநேரம் நின்றுகொண்டிருந்தாள். கண்ணிலிருந்து ஒரு நீர் முத்து கன்னத்திலுருண்டது. அதைப் புடைவைத் தலைப்பால் ஒற்றிவிட்டு, ஜன்னலருகிற் சென்று வெறும் வெளியையும், பாஸ்கரனின் தீக்ஷண்யத்தையும் பார்த்தவண்ணம் சுய உணர்வின்றி நின்றுகொண்டிருந்தாள். இப்படியாக அரைமணி நேரம் சென்றது. இரு கரங்கள் கண்களைப் பொத்தின. தன் இரு கைகளினாலும் அவற்றைப் பிடித்துக்கொண்டு நிமிர்ந்துபார்த்தாள். முகத்தருகில் குனிந்து, "சென்று வரட்டுமா?" என்றார் சிம்லா மனிதர். பாஸ்கரனைக் கண்ட பங்கஜமென மலர்ந்தது அவள் முகம். ஹ்ருதயசம்புடத்தில் கோபாலனின் அன்புக்கனி மூடிவைக்கப்பட்டது.

5

எவனொருவன் எதிர்பார்த்தவிஷயத்தில் ஏமாற்றத்தையடைந்தானோ, அவன் ஹ்ருதயம் சின்னா பின்னமாக அலைக்கப்படுவது இயற்கையில் வெற்றியாகிறது. கோபாலன் தன்கால் போன வழியே அலைந்து கடைசியில் பஸ் நிற்குமிடத்திற்குவந்து சேர்ந்தான். கண்டக்டர் "டிக்கட் ஸார், "என்று அவன் தோளைப்பிடித்துக் குலுக்கினபொழுதுதான், அவனுக்கு உணர்வு தோன்றிற்று. அவனுக்குப் பக்கத்திலிருந்தவர், "உனக்கு என்ன உடம்பு அப்பா?" என்று கேட்டபொழுதுதான் தன் நிலைமை கேலிக்கிடமாகும் என்று நினைத்துக் கொஞ்சம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான். பஸ்ஸை விட்டிறங்கினதும், ஒரு ஹோட்டலில் நுழைந்தான்

" ஸார் என்ன வேண்டும்? "

"ஏதாவது கொண்டுவா" என்றுன் வெறுப்பாக.

"ஆசாமி ஒரு மாதிரிபோலிருக்கிறது" என்று வாய்க்குள் சொல்லிச் சிரித்துக்கொண்டே சென்றுன். தோசை, வடை, ஜிலேபி, காப்பி, இவைகளைக் கொண்டுவந்து வைத்தான். "பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்பதற்கிணங்க அவைகளைச் சாப்பிட்டான். பில் எட்டணு ஆயிற்று. ஒரு ரூபாயை வீசி எறிந்துவிட்டுத் திரும்பிப்பாராமல் சென்று விட்டான்.

பக்கத்தில் வெஸ்ட்டெண்ட்டாக்கியில்மாட்னி ஆரம்பமாகும் ஸமயமாக இருந்தது. டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே சென்றுன். அன்று ஒரு ஹிந்திப்படம். ஸினிமா முடிந்து வெளியே வந்ததும், "எங்குச் செல்வது?" என்று சற்றுச் சிந்தித்தான். பிறகு நுங்கம்பாக்கம் செல்லவேண்டுமென்ற எண்ணமானது அவனையறியாமலே பஸ்ஸில் ஏறும்படி செய்தது. இவன் வீட்டிற்குள் சென்றபொழுது, சுகந்தா தனியே உட்கார்ந்து பிடில் வாசித்துக்கொண்டிருந்தாள். அவளிருக்குமிடம்சென்று எதிரிலிருந்த சாய்மான நாற்காலியில், "அப்பாடா" என்று சாய்ந்துகொண்டு தலையைக் கையால் பிடித்துக்கொண்டான். பிடிலைக் கீழேவைத்துவிட்டு எழுந்து நின்றுள் சுகந்தா. அச்சமயம் அவ்விடம் வந்த சமையற்காரனுகிய சுப்பையா, "ஏன்ஸார்! சினிமா அப்பொழுதே முடிந்துவிட்டதே. நான் வந்து அரை மணியாய்விட்டது. உங்களுக்கு ஏன் இவ்வளவு நாழிகை?" என்றுன்.

"என்ன! அம்மாஞ்சி! என்ன சினிமா? எப்படியிருந்தது?"

"என்ன சினிமா வேண்டியிருக்கிறது? வாழ்க்கையின் ஏமாற்றமே அங்கும். என்னைப்போல் ஏமாந்தவன் கதை" என்றுன் சலிப்பாக.

"ஏன் என்ன விஷயம் அம்மாஞ்சி?" என்றுள் அமைதியாக.

" சுகந்தா! எல்லாம் பிறகு சொல்லுகிறேன். தலைவலி தாங்கமுடியவில்லை. செரடான் இருந்தால் ஒன்று கொடுப்பாயா?" என்று கெஞ்சிக் கேட்டான்.

அவன் சொல்லும் தோற்றமும் அவள் மனத்தைக் கலங்கச் செய்து விட்டன. அவன் மீதிருந்த வருத்தம் சென்ற இடம் தெரியவில்லை. அவனிடம் கேலியாகப் பேசவேண்டுமென்ற எண்ணமானது பகல் எதிரில் இருட்டைப்போல மறைந்துவிட்டது. செரடான் மாத்திரையும் சூடாக ஒரு கப் காப்பியும் கொண்டுவந்து கொடுத்தாள்.

"காப்பி எதற்கு? வேண்டாம்."

"இல்லை சாப்பிடுங்கள். தலைவலி நின்றுவிடும்."

சாப்பிட்டு விட்டுக் கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கொண்டிருந்தான். அவன் நிம்மதியாக இருக்கட்டுமென்று நினைத்து, அவன் தலைக்கு மேலிருந்த மின்சார விசிறியைப் போட்டுவிட்டு அப்புறம் சென்றுவிட்டாள். ஆனால் அச்செய்கை, அவனுக்கு நிம்மதியா? துன்பமா? என்பதை அவன் மனம்தான் அறிய வேண்டும். சுகந்தாவின் பெற்றேர்கள் வரும் பொழுது கோபாலன் அசைவற்றுக்கிடந்தான். அவர்கள் சுகந்தாவிடம் விஷயத்தைக் கேட்டுக்கொண்டு, அவனைத் தொட்டுப்பார்த்தார்கள். அபரிமிதமாக ஜ்வரம் காய்ந்தது. அவர்கள் மனம்பதறி டாக்டரை அழைத்துக் காட்டினுர்கள். நான்கு நாட்கள் நினைவு இல்லாமற் கிடந்தான். டாக்டர்கள் இன்ன ஜ்வரமென்று கண்டு பிடிக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். ஐந்தாம்நாள் ஜ்வரம் குறைந்து சுயஉணர்வும் உண்டாயிற்று. அவன் "பரிமளா! மோசம் செய்துவிட்டாயே" என்று வாய் பிதற்றினதிலிருந்து விஷயத்தை ஒருவாறு ஊஹித்துக்கொண்டார்கள். பிறகு பரிமளாவின் கல்யாணப் பத்திரிகை கிடைத்தது. இதனுல், கோபாலனின் மனம் உடைந்து போகாவண்ணம், அவன் இஷ்டப்படியே நடந்துவந்தார்கள்.

கோபாலனுக்கு உடம்பு குணமாகிக்கொண்டு வந்தது. மறுநாள் அவன் காலேஜுக்குப் போய்வரலாமென்று டாக்டர் சொல்லிவிட்டார். புயலடித்து ஓய்ந்த கடல்போல அமைதியை அடைந்தது அவன் மனம். மத்தியானம் மூன்றுமணி. கோபாலன் கட்டிலில் இரண்டு தலையணைகளை அடுக்கிவைத்து அதன் மீது சாய்ந்துகொண்டிருந்தான். கையில் ஏதோ புஸ்தகம் வைத்துக்கொண்டிருந்தான். மனம் அதில் ஓடவில்லை. ரோஸ்டு செய்த ரொட்டி ஒரு தட்டிலும், ஒரு லோட்டாவில் காப்பியும் கொண்டுவந்து, அவன் முன்னுல் ஒரு ஸ்டூலைப் போட்டு அதில் அவைகளை வைத்தாள் சுகந்தா. பிறகு அங்கே கிடந்த நாற்காலியின் சாய்மானத்தைப் பிடித்தவண்ணம் அதன்பின்னே நின்றுகொண்டு புன்சிரிப்புடன், "இன்று உங்களுக்குப் பூரண சுகமல்லவா?" என்றுள்.

இதுவரை அவளை எவ்வளவோ தடவைகள் தனிமையில் பார்த்தும், பேசியும் இருக்கிறுன். அவன்.

அப்பொழுதெல்லாம், அவள் தோற்றத்தைப்பற்றி அவன் மனதில் யாதொரு சலனமும் தோன்றினதில்லை. இன்று இருந்த மனநிலையில் அவள் ஓர் ஸௌந்தர்ய தேவதை எனத் தோன்றினுள். ஹ்ருதயத்தின் இயற்கை மலர் மலர்ந்தது. மெல்லிய வாஸனையின் சுகமென உண்டான உணர்ச்சியினுல் மெய் சிலிர்த்தது. அவள் கேட்ட கேள்வியினுல், புயல் காற்றிலகப்பட்ட மரக்கலம் விதிவலியால் கரையைக் கிட்டினபோது அதன் மாலுமியின் உள்ளம் எவ்வாறு களிப்புறுமோ அவ்வாறு அவன் மனம் களிப்புற்றது.

"ஆம். பூரண சுகந்தான். டாக்டர் காலேஜுக்குக்கூடப் போகலாமென்று சொன்னார். ஆனால் ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரித்திருக்கிறார். நான் நாளையதினம் ஹாஸ்டலுக்குச் செல்லலாமென்று நினைக்கிறேன்."

"காலேஜுக்கு வேண்டுமானால் போய்வாருங்கள். ஹாஸ்டலுக்கு அடுத்தவாரம்தான் போகலாம். தினம் இவ்விடமிருந்து வண்டியில் காலேஜுக்குச் செல்லலாம். ஒருவாரம் நீங்கள் நல்ல மருந்துகள், ஆஹாரங்கள் சாப்பிடவேண்டியது அவசியம்" என்று டாக்டர் சொன்னார்.

"டாக்டரின் உத்தரவா? தேவியின் உத்தரவா?" என்றான் புன்சிரிப்புடன்.

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது இவைகள் ஆறிப்போகுமுன் சாப்பிடுங்கள்" என்று அவளும் சிரித்தவாறே கூறினாள். "சுகந்தா நானும் ஒருவாரமாகக் கவனித்துவருகிறேன், எனக்குப் பசியெடுப்பது நான் சொல்லாமலே உனக்குத் தெரிந்துவிடுகிறதே, உனக்கு 'யக்ஷிணி' என்று சொல்லுவார்களே, அது சொல்லுகிறதா என்ன? என்று சொல்லிக்கொண்டே அவைகளைச் சாப்பிட்டான்.

"யக்ஷிணி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. நோயுற்றவர்களுக்குமணிக்கணக்காய் ஆகாரம் கொடுப்பது இயற்கைதானே? இதில் வியக்கத்தக்க விஷயம் ஒன்றுமில்லையே?"

'சுகந்தா' என்று கூப்பிட்டுவிட்டுச் சற்றுத் தயங்கினான்.

"ஏன்? என்ன விஷயம், தயங்காமல் சொல்லுங்கள்."

"ஒரு விஷயம் உன்னிடம் சொல்லவேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால், நீ 'என்ன நினைப்பாயோ?' என்று மனம் அஞ்சுகிறது. நான் எப்போதும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவனல்லன் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. சொன்னால் நீ கோபித்துக்கொள்ளமாட்டாயே?"

"என்னவோ பீடிகை எல்லாம் பலமாக இருக்கிறதே! அஞ்சவே வேண்டாம், தாராளமாக விஷயத்தைச்" சொல்லுங்கள் என்று சிரித்துக்கொண்டே கூறினாள்.

"நீ மிகவும் கர்வம் படைத்தவளென்றும் பெருஞ் செல்வம் படைத்த வாழ்விலிருப்பதால், என்னை மிகவும் அலக்ஷியம் செய்வாயென்றும் நினைத்தேன். அன்றொருநாள் உனக்கு நினைவிருக்கலாமே? என்னுடைய ஆவலான நிலைமையில், நீ நடந்துகொண்ட விதம். அதிலிருந்து அவ்வெண்ணத்தை உறுதிப்படுத்திக்கொண்டேன். இந்த ஒரு வாரமாக உன்னிடம் பழகியதிலிருந்தும், நீ என்னிடம் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்தும், ஹ்ருதயபூர்வமான அன்பின்முன் எத்தகைய குற்றமோ, கர்வமோ, செல்வமோ, எதுவும் எதிராகமாட்டாதென்று அறிந்துகொண்டேன். உன் முகத்தின் முன்பே உன்னை விரும்பவில்லை என்று சொல்லிய என்னை, எவ்வளவு மேன்மையான உள்ளத்தோடு போற்றுகிறாய். உன் மாசற்ற ஹ்ருதயத்தின் தன்மையை, இப்பொழுதுதான் அறியும் ஆற்றல் பெற்றேன். அன்று உன்மனம் வருந்த நான் சொன்னதற்கு, கைமேல் பலன், அதே வருத்தத்தை யடைந்துவிட்டேன், யாவும் தெரிந்துகொண்ட நீ என்னை மன்னிப்பாய் என்று நினைக்கிறேன்."

"இதென்ன? அர்த்தமற்ற பேச்சு. நான் எதற்காக உங்களை மன்னிக்கவேண்டும்? பரிமளா உங்கள் ஜீவாதாரமாக இருந்தாள். அவள் பிராரப்தம் வேறாகிவிட்டதால் ஜீவநாசினியாகிவிட்டாள். உங்கள் மனத்தில் முதலில் அவளுக்குத்தான் இடமிருந்தது. விதியின் விளையாட்டு வேறாக முடியவே எனக்குச்சற்று இடமுண்டாயிருக்கிறது. என் வாழ்க்கைப் படகும் வேறு துறையில் சென்றுவிட்டால், இன்னும் யாருக்காவது இடமேற்பட்டுவிடும். இதனால் வருத்தப்படக் காரணமே இல்லை" என்று சிரித்துக்கொண்டே கூறினாள்.

"உன் பிராரப்தம் வேறாக முடியாது சுகந்தா!" என்று சொல்லிவிட்டு, 'உம்' என்று நீண்ட பெருமூச்சுடன், "பரிமளா இவ்விதம் மாறுவாளென்று கனவிலும் நினைக்கவில்லை. இன்னமும் அவள் தன்மை இன்னதென அறிய முடியவில்லை. 'பெண்களின் ஹ்ருதயத்தின் ஆழத்தைக் காணமுடியாது' என்ற சொல்லையும் நம்ப மனம் இடந்தரவில்லை. பரிமளத்தின் தன்மை அளவுகடந்து விகஸித்தது. சுகந்தத்தின் தன்மை ஹ்ருதயானந்த அமைதியாக விகஸிக்கிறது. 'இது நீடிக்கக்கூடியது' என்ற நம்பிக்கையும் தோன்றுகிறது. பாஸ்கரனை வெறுக்கும் பங்கஜமும் உண்டா? சொல்லு."

"இல்லை. ஆனால் காலத்தின் தன்மையில் பாஸ்கரனின் பராமுக தீக்ஷண்யம் பங்கஜத்தை வாடும்படி செய்துவிடுமல்லவா?"

"அதனால் காலத்தை நோகவேண்டுமேதவிர கதிரோனை நொந்துகொள்வது தவறல்லவா? கிரஹணத்தினால் பீடையுற்று விடுபட்ட கதிரோன் கமலக்கன்னியின் ஹ்ருதயானந்த முகத்தைப் பார்க்க விரும்புவது இயற்கைதானே, நீயே சொல்லு."

"இருக்கலாம்" என்று சொல்லிவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினாள்.

"நான் எதிர்பார்க்கும் விஷயம், எவ்வித முடிவுக்கு வரலாம்?"

பதிலில்லை. ஒரு நீண்ட மூச்சு, ஜன்னல் பக்கமாய் வெறும் வெளியைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"சுகந்தா!" என்று மெதுவாக அழைத்தான்.

"ஏன்?"

"எனக்கு மன்னிப்பு இல்லையா? நீயும் என்னை......" என்று சொல்லி முடிக்குமுன்.

"இல்லை" என்று தலையை அசைத்தவண்ணம், படிப்பு முடியுமட்டும் ஓர் நிபந்தனை."

"அது என்ன?"

"மூன்று வருஷத்திற்குப் பின்னும் பாஸ்கரனின் பார்வையானது நீலோத்பலம் முதலிய மலர்க்கன்னிகளின் மீது விழாதிருக்குமானல் கமலக்கன்னியின் பார்வை கிடைக்கும். இல்லையேல் கமலக்கன்னி, என்றும் கன்னிகையாகவே இருப்பாள். இவ்விஷயம் இனி மாறவேமாருது" என்று அமைதியாகச் சொன்னுள்.

"இனி மனம் ஒரு விதத்திலும் மாருது" என்பதை ஆணையிட்டுக் கூறுவேன். இன்னும் எவ்விதமான உறுதிசெய்தால் உன் மனம் திருப்தியடையுமோ அவ்விதம் செய்து தருகிறேன். சுகந்தா ஒரு விஷயம் நினைத்துப்பார்! ஒரே செடியில் இரு அழகான புஷ்பங்களைக் கண்டு பறிப்பதற்கு எண்ணும் பொழுது கைக்கு எட்டியதை முதலில் பறிக்கஎண்ணுவது இயற்கையல்லவா? அப்படிப் பறிக்கும்பொழுது சட்டென ஒருவர் பிடுங்கிக்கொண்டுவிட்டால், அது கையினல் கசங்கிவிட்டதென்று தெரிந்தபிறகு, இன்னெரு புஷ்பத்தை எட்டிப்பறித்து ஜாக்கிரதையாகக் காப்பது இயற்கையின் முக்ய தத்வமல்லவா? எந்தச் சோதனையிலும் வெற்றி பெறுவேன். சுகந்தா! ஏன் வார்த்தையை வளர்த்தவேண்டும்? என்னை மன்னித்து, கரை காணுத் துக்க சாகரத்தில் அமிழ்ந்து தவிக்கும் ஜீவனுக்கு நம்பிக்கை என்னும் ஆதரவு கொடுத்துக் கரையேற்றமாட்டாயா?" என்ருன்.

அவனுடைய இரக்கம் நிறைந்த சொற்கள் அவளுக்கு வேதனையை அளித்தன. ஹ்ருதயத்திலே ஆழ்ந்திருந்த அன்பு மொட்டு மலரத் தொடங்கிற்று. அவளையறியாது சொற்கள் வெளிவந்தன. "அம்மாஞ்சி ஏன் வீண்பிரமை; என்னை அடையும் உரிமை, உங்களைத்தவிர வேறு எவருக்கு உண்டு?" என்று சொல்லிவிட்டு, அவனைப்பார்த்துக்கொண்டே சட்டென வெளியில், ஓடிவிட்டாள். அச்சமயம் 'கண்ணேடு கண்நோக்கின' கோபால் சிரித்துக்கொண்டான்.

6

"என்ன கோபால்! உடம்பு நல்ல நிலையிலிருக்கிறதா? இங்கே ஏன் நின்றுகொண்டிருக்கிருய்? நம் அறைக்குப்போகலாம் வா" என்ருன் ரகு.

"அவன் தோளில் கைபோட்டுக்கொண்டு, நுங்கம்பாக்கத்திலிருந்து கார் வரும்; அங்கே போகவேண்டும்; இன்னும் ஒரு வாரத்துக்கு வீட்டிலிருந்து ஆகாரம் மருந்து சாப்பிடவேண்டும் என்பது டாக்டரின் உத்தரவு."

"ஓஹோ!" என்று சிரித்துக்கொண்டான். "சரிதான், அதிருக்கட்டும். அன்று காலை சுகமாகத்தானே செங்கற்பட்டிற்குச் சென்ருய். அன்று இரவே ஜ்வரம் வந்திருக்கக்காரணம் என்ன? நான் வந்து பார்க்கும்பொழுது உன் நினைவே இல்லாமலிருந்தாய். என்ன நடந்தது?"

"நீ என்னுடன் இன்று அவ்விடம் வந்து தங்கினுல் இரவு எல்லாம் சொல்லுகிறேன்,"

"நன்ருக இருக்கிறது. ஏற்கனவே உன்மீது அவர்களுக்கு ஒரு மாதிரியான அபிப்பிராயம். ஏதோ வியாதியாய்ப் படுத்துவிட்டாய் என்று இரத்தபாசம் விடாமல் உனக்கு இவ்வித அன்பு காண்பித்திருக்கிருர்கள். நான் வேறுவந்தால் என்ன நினைப்பார்கள்?"

"அப்படியொன்றும் நினைக்கமாட்டார்கள். விருந்தினர்களை ஆதரிப்பதில் மிக்க விருப்பமுள்ளவர்கள் என் அத்தையும் அத்திம்பேரும். நீ சுகந்தாவைப் பார்க்கவேண்டாமா?"

"ஓஹோ" என்று சிரித்துக்கொண்டே பாக்கெட்டுக்குள்ளிருந்து, பத்திரிகையில் கத்தரித்தெடுத்த ஒரு விவாக தம்பதிகளின் படத்தை எடுத்துக்காட்டிக் "கோபால்! ஏன் இப்படி? எனக்கு நம்பிக்கையே இல்லை. உன் மாமாவின் பெயரைப் பார்த்ததும் ஒரு சமயம் இவளுக்கு முந்தின பெண்ணே என்று நினைத்தேன். உன் காதல் என்னவாயிற்று? ஆனல் இந்த ஆள் மிகவும் அழகாக இருக்கிருன். அதனுல் மயங்கிவிட்டாள்போலிருக்கிறது."

"ரகு! நீ என்னவேண்டுமானுலும் சொல்லு. இன்னமும் அவளிடத்தில் எனக்கு வருத்தமே தோன்றவில்லை. அவள் ஏதோ விவகாரத்தினுல்தான், இதற்கு இசைந்திருக்கிருள். இனி அவள் எனக்கு அன்னியமானவள்தான். ஆனுலும், அவள் நன்மைக்காக, வாழ்க்கையில் எந்தத் தியாகத்தையும் செய்ய நான் பின்வாங்கமாட்டேன். என்மனம் அவளிடம் அளவுக்கு மிஞ்சி அடிமை புகுந்துவிட்டது. என்மனம் தான் மீளமுடியாத ஏமாற்றத்தை அடைந்துவிட்டது. என்னைப்போல் ஏமாற்றமடைந்த சுகந்தாவின் மனமானது, காதலின் ஜோதியைக்காணட்டும் என்றே அவளிடம் என்னை ஏற்றுக்கொள்ளும்படி வாக்குறுதிபெற்றுப்புயலடித்த என்மனத்தை ஆற்றிக்கொண்டேன்."

"என்ன விஷயம்? விபரமாகச்சொல்லு. கார் வரும்வரையில் அதோ, அந்தக்கல்லின்மீது உட்கார்ந்து பேசுவோம்" என்று கையைப்பிடித்து அழைத்துச்சென்று உட்கார்ந்துகொண்டான்.

தனக்கும் சுகந்தாவிற்கும் நடந்த விஷயங்களைச் சொல்லிமுடித்தான்.

"என்னவோ காதல் காதல் என்றாயே? பரிசுத்த அன்பின் தன்மையை அறிந்துகொண்டாயா? அவள் அடக்கம், அன்பு எப்படிப்பட்டவை?"

"ரகு! ஒரு விஷயம். பெண்கள் மனம்வைத்தால் எக்காரியமும் செய்யச் சாத்தியமாகும். சுகந்தா மனமறிய நான் கேட்டபின்பு அத்தைக்குத் தெரியாமல் நான் இருக்குமிடம் அடிக்கடி வந்தாள். சாயங்காலம் இருட்டும் சமயம் என் அறைக்கு வந்தாள். வேண்டுமென்றே குடிக்கஜலம் வேண்டும் என்றேன். கொண்டுவந்தாள். எப்பொழுதும் கீழேவைப்பவள், அச்சமயம் என்கையில் கொடுத்தாள். இடதுகையால் ஜலத்தை வாங்கிக்கொண்டு, வலது கையைப்பிடித்தேன். மனத்திற்குள் பயந்தான். 'முன்போல் எச்சரிக்கை கொடுத்துவிட்டால், மன்னிப்புக்கேட்கவேண்டியதுதான்' என்று நினைத்தேன். ஆனால் ஆச்சரியம்! ஒன்றுமே சொல்லவில்லை. சிரித்துக்கொண்டே நின்றாள். நான் ஒரு கையினால் ஜலபாத்திரத்தையும் மற்றொரு கையினால் அவள் கையையும் பிடித்துக்கொண்டு அவளைப் பார்த்தவண்ணம் சிரித்தேன். சட்டென என்கையிலிருக்கும் ஜலபாத்திரத்தை வாங்கிக் கீழேவைத்துவிட்டு, உங்களுக்குத் தாகமெடுக்கவில்லை என்றாள் சிரித்துக்கொண்டே."

"தாகமெடுத்தது உண்மை. ஆனால் ஜலம் குடிப்பதற்கன்று, என்று சொல்லிக்கொண்டே என் பக்கத்தில் உட்காரும்படி இழுத்தேன். இழுக்கவே அவள் திமிராமல், 'இப்பொழுது யாராவது வந்துவிடுவார்கள், அம்மா கோவிலுக்குச் சென்றுவிடுவாள், பிறகு வருகிறேன். இப்படிச் செய்யாவிட்டால் இழிவு நேரும்' என்றாள். விட்டுவிட்டேன். பிறகு ஒருவருமில்லாத சமயம் கிடைக்கும்பொழுதெல்லாம் என்னிடம் வந்துவிடுவாள். என் அத்தைக்குத் தெரியாது. என்னிடம் வரக்காரணம் ஏற்படுத்திக்கொண்டு வருவாள். இவ்வளவு ஆனாலும், அவளைப்போல் அச்சம்விட்டுப் பழக இடந்தருவதில்லை. நான் விளையாட்டாகவே, அன்று ஏன்? என்னைக் கடிந்துகொண்டாய்?" என்று கேட்டேன். "அன்று நீங்கள் அவளையடையப் பிரயத்தனம் செய்யும் விஷயம் என் மனத்திற்குத் தெளிவாய்த் தெரிந்திருந்த சமயம். இன்று நீங்கள் என்னுடையவர்கள். இனி என்னைக் கைவிட்டாலும், என்னுயிருள்ளளவும் என்னுடையவரே. அதனால் தான்......" என்று நிறுத்தினாள்.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, ஹாரன் சப்தம் கேட்டது. "சரி வண்டி வந்துவிட்டது" போவோம் வா! என்று எழுந்திருந்தான்.

"அதில் சுகந்தாவும் வருவாளல்லவா?"

"இல்லை. வந்தால் மூவரும் வருவார்கள். இல்லையேல், வெறும் வண்டிதான் வரும்" என்றான். அச்சமயம் வண்டி அருகில் வரவே இருவரும் அதிலேறிக்கொண்டார்கள்.

காலவிருக்ஷம் மும்முறை சிறகுதிர்த்துவிட்டது. அன்று கிறிஸ்ட்மஸ் விடுமுறை. நுங்கம்பாக்கம் சுகந்த விலாஸத்தில் சுகந்தா தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு எட்டுமாதக் குழந்தையை இடுப்பில் வைத்தவண்ணம் வாசற்பக்கம் வந்து எட்டிப்பார்த்துவிட்டு, ஹாலினுள் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த கோபாலனிடம் சென்று "அவர்கள் எப்பொழுது வருவதாகச் சொன்னார்கள்? இன்னும் காணவில்லையே?" என்று கேட்டாள்.

"சரியாக நாலரை மணிக்கு வந்துவிடுவார்கள். மணி நாலுதானே ஆகிறது. நான் அவளை அன்று பிரிந்துவந்த பின்பு இன்றுதான் பார்க்கப்போகிறேன். எப்படியிருக்கிறாளோ?" என்றான். அவள் முகம் சற்றே கடுத்தது. அதைக் கவனித்த கோபால், "இன்றைக்கென்ன? அபாரமான அலங்காரமாக இருக்கிறதே? ஒரு சைத்திரிகன் கண்டால், உன் தோற்றத்தை அவசியம் சித்திரிக்க மிக விரும்புவான்" என்று அவள் கன்னத்தை இலேசாகக் கிள்ளினான். "நான் வழக்கம்போல்தான் உடுத்தியிருக்கிறேன். உங்கள் மனத்திற்குத்தான் புதியதாகத் தோன்றுகிறதுபோலும். 'அரசன் மெச்சியவள் அரம்பை' உங்களின் சந்தோஷமே என் ஜீவியத்தின் முக்கிய அம்சம். தாங்கள் மாத்திரம் இன்று எப்படியிருக்கிறீர்கள். உங்களைப் பார்த்த மாத்திரத்தில் எந்த ஸ்த்ரீயானாலும் பெருமூச்சுவிடுவாள்" என்று குறும்பாக அவனைப்பார்த்தவண்ணம் புன்சிரிப்புடன் கூறினாள்.

"இதுவரை இவர்களையே மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தை இவர்களுடைய சம்பாஷணை ஒன்றும் தெரியாததால், சட்டெனத் தகப்பனிடம் சாய்ந்து அவன் தலையைப் பிடித்துக் கலைத்துவிட்டான். உடனே குழந்தையை வாங்கிக்கொண்டு. "பேபி! என் தலையைக் கலைத்துவிட்டாயே" என்றான். அது தன் பல் தோன்றாத வாயைத்திறந்து சிரித்தது. சுகந்தா சிப்பினால் கலைந்த தலையை வாரிவிட்டாள். காம்பவுண்டினுள் கார்வந்த சப்தம் கேட்டு, இருவரும் வாசற்பக்கம் வந்து நின்றார்கள். பரிமளா, அவள் புருஷன், மூன்று வயதுக் குழந்தை ராஜு மூவரும் காரிலிருந்து இறங்கினார்கள். "வாருங்கள்" என்று அன்புடன் கைகுலுக்கி அழைத்துவந்து, ஹாலினுள் மேஜையைச் சுற்றியுள்ள சோபாக்களில் நால்வரும் உட்கார்ந்துகொண்டார்கள். உடனே சமையற்காரன் டிபனையும் காப்பியையும் கொண்டுவந்து வைத்தான். அச்சமயம் ரகுவும் வந்தான். யாவரும், தங்கள் உத்யோகம், மேல் அதிகாரி, ஹிட்லர், சர்ச்சில், யுத்தம் இவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டே டிபன் சாப்பிட்டார்கள். டிபன் முடிந்ததும், பரிமளாவின் புருஷன், ஆர். எஸ். துரை, "நீங்க

ளெல்லாரும், சற்று வார்த்தையாடிக்கொண் டிருங்கள். நான் ஒரு மீட்டிங்கிற்குச் சென்று விட்டு, ஒரு மணி சாவகாசத்தில் வந்துவிடுகி றேன்'' என்ருர்.

''அப்படியானுல் நம் புரோகிராம்படி சினிமா வுக்கு எப்படிச்செல்வது?'' என்ருன் கோபால்.

'' சாப்பாட்டிற்குப்பின் இரண்டாம் ஆட்ட த்திற்குச்செல்வோம்'' என்ருன் ரகு.

'' சரி. அப்படியே செய்வோம்'' என்ருர் துரை.

அம்மாவும் அப்பாவும், இரண்டாம் ஆட்ட த்திற்குச் செல்லச் சம்மதிக்கமாட்டார்கள். நல்லவேளையாகத் தற்சமயம் அவர்கள் இல்லை. நாம் தடையின்றிச் செல்லலாம்'' என்ருள் சுகந்தா

'' சரி! வருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே வாசற்பக்கம் சென்ற துரை, ''கோபால்! இங்கே பார்! வருங்காலக் காதலர் கள்'' என்ருர், பேபியும், ராஜுவும், விளை யாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து. கூட ஒரு வேலைக்காரியும் இருந்தாள்.

''நான் இப்படிச் சொல்லுவதற்காக மன் னிக்கவேண்டும். எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி நம்மிடத்தில் இல்லையென்று தெரிந்தும் இப்படி அனுவசியமாக விளையாட்டுப் பேச்சுப் பேசுவது நம்மவர்களின் கெட்ட பழக்கவழக்க மாக இருக்கிறது. இதனுல் பிற்காலத்தில் எவ் வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன? இளமன தில் ஊன்றின எண்ணத்தை மாற்றுவது கடின மாகி விடுகின்றது. விதியினுற் சுழலும் யந்தி ரம் இயற்கையின் போக்கில் சுற்றி நிற்கட்டும். இவ்விஷயத்தில் நாமாவது கவனமாக இருப் போம்'' என்ருள் சுகந்தா.

''ஆம். நீங்கள் சொல்லுவது வாஸ்தவமே. நாம் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக நடப் போம்'' என்று சொல்லிவிட்டு வண்டியிலேறி ஞர். மறுபடியும் நால்வரும் நாற்காலியிலமர்ந் தார்கள்.

''அத்தான், இப்பொழுது நம்முடைய வாழ்க் கையின் சக்கரம் எவ்வளவு இன்பகரமாய் ஓடு கின்றது?'' என்று கேட்டாள் பரிமளா.

''ஏன் இக்கேள்வி?'' என்ருன் கோபால்.

''அன்று நீங்கள் சொன்னபடி இருவரும் கம்பிநீட்டியிருந்தால் தாங்கள் அக்கௌண்ட் ஜனரல் ஆபீஸராகவும் நான் ஐ. ஸி. எஸ், மனைவியாகவும், ராஜராஜேச்வரி போன்ற குழந்தை சுகந்தாவின் கையிலும் இருக்கமுடி யுமா?'' என்ருள் பரிமளா.

''அப்பொழுது காலங்கள் வேறு மாதிரி யாகச் செல்லுமேயல்லாமல் இன்பகரமான வாழ்க்கை இல்லாமல் போகாது.''

''அப்படியில்லை. உங்கள்படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டியிருக்கும் நாம் தரித்திர நாராயணரின் குழந்தைகளாக வாழவேண்டி வரும். சுகந்தா கண்ணீர்விட்டுக் காலம் கழிக்கவோ உயிரை விடவோ நேர்ந்திருக்கும். நமது காதல் கத்திரிக்காய்தான்'' என்ருள் பரிமளா.

''அவையெல்லாம் சரிதான். அன்று நீ என் னிடம் சொன்னவையெல்லாம், உன் ஹ்ருதய பூர்வமாக வந்தவையல்லவே. வேணுமென்று உன் மனதைக் கஷ்டப்படுத்திக்கொண்டு தானே சொன்னுய்? இப்பொழுது நாம் அவ் விஷயங்களைப்பற்றி மனம்விட்டுப் பேசுவதில் யாதொரு மாறுதலும் ஏற்பட நியாயமில்லை. உன் சொல்லம்புகளால் ஏற்பட்ட புண்ணைச் சுகந்தா தன் சொல்லமிர்தத்தினுல் ஆற்றிவிட் டாள். அதனுல் உன் உண்மையான அபிப்பி ராயத்தைச் சொல்லவேண்டும்.''

''அதைத் தெரிந்துகொண்டு ஆகவேண்டிய காரியம் என்ன?''

''துரை வரும்வரை பொழுதுபோக்க இந்தப் பேச்சு சுவாரஸ்யமாக இருக்கும்'' என்ருன் ரகு.

''ஆம்'' என்று ஆமோதித்தாள் சுகந்தா.

''நான் முதலில் ஜாதகம், ஷஷ்டாஷ்டகம், இவைகளை நம்பவே இல்லை, உங்கள் அப்பா வந்து சண்டைபோட்டதிலிருந்து, அவை உண் மை என்று என்மனதில் பட்டது. ஏனென் ருல், 'ஷஷ்டாஷ்டகம்' என்பதனுல் முதலில் இவர்களே இப்படிச் சண்டையிடுகிருர்கள். பிற்பாடு நமக்குள்ளும் சண்டையுண்டாகு மோ என்ற பிரச்னை ஏற்படலாயிற்று. எவ் வளவு இடத்தில் காதற்கல்யாணம் செய்து கொண்டவர்கள், சண்டைபோடுகிருர்கள்? என்ற உண்மைகளையும் இன்னும் எதிர்காலத் தில் நேரக்கூடியவைகளைப் பற்றியும் அம்மா எடுத்துச்சொன்னுள். சரியென ஒத்துக்கொண் டேன். ஆனுலும் மனத்தைவிட்டு மறப்பது என்பது கடினமாகத் தோன்றிற்று. என்ன செய்வது? என்று திகைக்கும்பொழுது, இவர் பார்க்கவந்தார். இவரும் உங்களைப்போல் ஏதேதோ சொல்லவே எல்லோரும் இப்படித் தான்போலும் பழக்கந்தான் காரணம் என்ற முடிவிற்கு வந்தேன். ஆனுலும் 'மதிள்மேல் பூனை' யென என் மனம் ஊசலாடிற்று. அந் தச்சமயம் பள்ளிக்கூடத்தில் வருஷாந்தரக் கொண்டாட்டம் நடந்தது, நான் சென்றிருந் தேன். அவ்விடத்தில் என் சிநேகிதி ஒருத்தி யைத் தேடிக்கொண்டு பிரேயர் ஹாலுக்குச் சென்றேன். ஒருவருமில்லை. ஆனுல் யாரோ இரு வர் மெதுவாகப் பேசும் சப்தம் கேட்டது, ஜன் னல் வழியாக எட்டிப்பார்த்தேன். வாணியின் அலையருகில் சுகந்தாவும் லக்ஷ்மியும் பேசிக் கொண்டிருந்தார்கள். சுகந்தாவின் கண்களில் நீர் நிரம்பி இருந்தது. அதனுல் விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று ஆவல் ஏற்பட்டது.

"[illegible] கலியாணமே செய்துகொள்ளாம லிருக்க முடியுமா?" என்றாள் லக்ஷ்மி.

"ஏன் முடியாது? என் இஷ்ட விரோதமாக நடக்குமானால், மரணம்தான் முடிவு. அவர் என் முன்னாகவே, என்னை விரும்பவில்லை யென்றும், பரிமளா தான் தனக்குரியவள் என்று சொல்லியும், என்மனம் கொஞ்சம்கூட அவரை வெறுக்கவில்லையே. நான் எப்படி இன்னொருவர் கையைப் பிடிக்கமுடியும்?

"அது சரி. ஆனாலும் பெற்றோருக்கு ஒரே குழந்தை. உன் எதிர்காலத்தை அவர்கள் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்? அதனால் நீ கடமையைக் கருத வேண்டும். 'கிட்டாதாயின் வெட்டென மற' என்பதுபோல், நீ அவனை அறவே மறந்துவிட வேண்டும். கொஞ்சநாளைக்குக் கஷ்டமாக இருக்கும். யாரையாவது உனக்குகந்தவனாகப் பார்த்து மணம் செய்துகொண்டாயானால் எல்லாம் சரியாகப் போய்விடும்" என்றாள் லக்ஷ்மி.

"லக்ஷ்மீ, நீ என்னவேண்டுமானாலும் சொல்லு. என் மனம் ஒருகாலும் ஒருவரையும் விரும்பாது. எனக்கு நினைவு தெரிந்தநாள்முதலாகப் பெரியவர்களின் சொல்லினால் அவரே என் கணவர் என்ற விதை இயற்கையின் சக்தியினால் ஊன்றப்பட்டு விட்டது. இப்பொழுது மரத்தில் கனி பழுக்கும் தறுவாயில், வேருடன் பிடுங்கு என்றால் எப்படி முடியும்? என்னுடைய முடிவான தீர்மானம் இதுதான். இந்த வாணியின் பாதத்தில் ஆணையாக—மணந்தால், அவரையே மணப்பேன்; இல்லையேல், ஆயுள் முழுதும் கன்னிகையாகவே காலம் கழிப்பேன்; அவர் அவளை உண்மையாக விரும்பினால் நான் அதைத் தடுக்கவோ பொறாமைப்படவோ மாட்டேன். அவர் இன்புறும் வாழ்க்கையே என் வாழ்க்கையின் நோக்கம். என் இஷ்ட விரோதமாக நடக்கும்படி கட்டாயப்படுத்தாமலிருக்கும்படி இத்தேவி அருள் செய்யவேண்டும்" என்றாள். விளக்கிலிருந்து சுடர் தெறித்தது. சிலையின் மேலிருந்த புஷ்பங்கள் விழுந்தன.

"சுகந்தா! உன் எண்ணம் நிறைவேறும். தேவியருள்புரிவாள்" என்றாள் லக்ஷ்மி.

அச்சமயம் அவள் தோற்றமும் சொல்லும் என் மனத்தை என்னவோ வேதனை செய்தன. நமக்கு இவ்வளவு வைராக்கியம் வரவில்லையே என்று எண்ணினேன். இவள் வாழ்க்கையின் ஜோதி நம் கையில் இருக்கிறது. அதை மங்க வைப்பதும், பிரகாசிக்கச்செய்வதும், நம் மனம்தான் என்ற முடிவு தெரிந்தது. என் விஷயம் வந்ததிலிருந்து அவரையே என் மனம் விரும்புவதாகத் தோன்றினபடியால், உங்களிடம் வெறுப்பாகப் பேசுவதென்று அத்தேவியைச் சாக்ஷிவைத்து உறுதி செய்து கொண்டேன். சுகந்தாவின் சந்தோஷத்தையும் எதிர் பார்த்தேன். ஆனாலும் என் மனம் சஞ்சலமாகவே இருந்துவந்தது.. அன்று உங்களிடம் பேசும்பொழுது என்மனம் பட்ட நரகவேதனையை ஈசன்தான் அறியவேண்டும். ஆனால், கல்யணமாகிச்சென்று வாழ்க்கை தொடங்கியதும் இன்பகரமாகவே தோன்றியது. அவர் என்மீதில் அளவற்ற அன்புடையவர். நான் எப்படி அவரை வஞ்சிக்கமுடியும்? எல்லாம் இவ்வளவு இன்பகரமாக முடிவதைத் தவிர்த்து, துன்பத்தில் சிக்க யார் விரும்புவார்கள்?"

"உங்கள் த்யாகமும், முன் யோசனையும் மெச்சத் தகுந்தனவே. எவ்வளவு நாட்கள் இரவு தானும் தூங்காமல், என்னையும் தூங்க விடாமல் அலட்டியிருப்பான் தெரியுமா? உன் கல்யாணம் முடிந்தபிறகுதான் நிம்மதியான படிப்பும், தூக்கமும் ஏற்பட்டன" என்றான் ரகு.

"பரிமளா, இருவர் வாழ்க்கையும் நல்ல பாதையில் செல்ல, மனத்தைக் கட்டுப்படுத்திய உன்னை எவ்விதம் புகழ்வதென்று தெரியவில்லை" என்று அவளை அளவுகடந்த அன்போடு அணைத்துக்கொண்டான். "சுகந்தா," இவ்வானந்தத்தையடைவதற்குக் காரணகர்த்தரானவர்களுள் முதல் ஸ்தானம் பெறத் தக்கவர் யார்?" என்றான் கோபால்.

நமது பெற்றோர்கள் சண்டையிட்டது எதனால்? ஷஷ்டாஷ்டகம்தானே காரணம் சொன்னார்கள். அதனால் முதல்ஸ்தானம் பெறுந் தகுதி ஷஷ்டாஷ்டகத்திற்கே" என்றாள் பரிமளா.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

காற்று வாத்தியங்கள்

அனந்தவைத்தியநாதன்.

இசைக் கருவிகளில் கம்பி வாத்தியங்களுக்கு அடுத்த படியாக எல்லாத் தேசத்தினர்களாலும் கொண்டாடப்படுவது காற்றுவாத்தியங்களே ஆகும். இவை கம்பி வாத்தியங்களைக் காட்டிலும்மிகவும் பழமையானவை என்றுகருதப்படுகின்றன. நம்மைக்காட்டிலும் மேனாட்டார்கள் இவற்றில் அனேகவகை வாத்தியங்களைக் கையாண்டுவருகிறார்கள். அவர்கள் சங்கீதத்தில் முக்கிய ஸ்தானத்தை வகித்து வரும் பாண்டுவாத்திய கோஷ்டியிலிருந்து இதை அறியலாம். புல்லாங்குழல், நாகசுரம் என்ற இரண்டு வாத்தியங்களை மட்டுமே நாம் அதிகமாகக் கையாண்டு வருகின்றோம். கிருஷ்ணபரமாத்மா புல்லாங்குழலினால் பசுக்களையும், கோபியர்களையும் மெய்மறந்திருக்கும்படி செய்தார் என்று நம்மிடையே வழங்கிவரும் புராணக்கதையிலிருந்து புல்லாங்குழல் வாத்தியத்தை நாம் எவ்வளவு காலமாகக் கையாண்டு வருகின்றோம் என்பதை அறியலாம். மேலும் நம் முன்னோர்கள் இசைக்கருவிகள் எல்லாவற்றைக் காட்டிலும் மிகுந்த பக்தியுடன் போற்றி வந்தது இவ்வாத்தியமே ஆகும். கோவில்களிலும், கல்யாணங்களிலும் நாம் கேட்டு ஆனந்தித்து வரும் நாகசுர வாத்தியத்தையும் புல்லாங்குழலைப் போல் போற்றி வந்திருக்கிறார்கள். இதைப் பாமர ஜனங்களிடையே சங்கீத அறிவைப் பரப்புவதற்கென்று விடுத்திருந்தபோதிலும், கர்நாடக சங்கீதத்தின் நுட்பங்கள் பலவற்றை நாம் விடாமல் கேட்டுக் கொண்டு வருவதற்கு, இவ்வாத்தியமே காரணமாயிருக்கிறது என்று சிலர் எண்ணுகிறார்கள். காற்று வாத்தியங்களில் எவ்வாறு ஒலி உண்டாகிப் பெருக்கப்படுகிறது என்பதை அறியுமுன் காற்று நிரைகளின் துடிப்பைப்பற்றி, சிறிது விசாரிப்போம்.

ஸைகிள் வண்டிகளின் சக்கர விளிம்புகளிலேயுள்ள ரப்பர் குழாய்களுக்குக் காற்று அடிப்பதற்காகக் கையாளப்படும் நிறைவியை எல்லோரும் பார்த்திருக்கலாம். இந்நிறைவியின் அடியிலுள்ள துவாரத்தை மூடிக்கொண்டு, இதிலுள்ள பீச்சானை மேலிருந்து கீழே அழுத்தினால், அப்பொழுது பீச்சான் கீழே செல்ல முடியாமல் துள்ளி மேலெழும்புவதைக் கவனிக்கலாம். நிறைவியிலுள்ள காற்று விற்சுருளைப்போல் நெகிழ்ச்சிவன்மை பெற்றிருப்பதை இச்சோதனையிலிருந்து அறியலாம். எனவே நெகிழ்ச்சி வன்மையினால் ஒரு கம்பி துடித்து ஒலியை எழுப்புவதுபோல், காற்று நிரையும் துடித்து ஒலியை எழுப்பவேண்டுமென்று உணரலாம். இதற்கு ஓர் உதாரணத்தைக் கூறுவோம். சற்று நீண்ட கண்ணாடிக் குழாய் ஒன்றை எடுத்து, அதன் ஒரு முனையை நம் கீழ் உதட்டுடன் சேர்ந்திருக்குமாறு வைத்துக்கொண்டு, அதன் விளிம்பை நோக்கி ஊதினால், குழாயிலிருந்து ஒரு ஒலி கிளம்புவதைக் கவனிக்கலாம். இவ்வொலி குழாயினுள்ளிருக்கும் காற்று நிரையின் துடிப்புக்களினால் ஏற்பட்டதே ஆகும். மேலும் இதன் சுருதி காற்று நிரையின் நீளத்திற்குகந்தவாறு அமைந்திருக்கும். சற்று நீளம் குறைந்த மற்றொரு குழாயை ஊதி இதை அறிந்துகொள்ளலாம். இம்மாதிரி பல குழாய்களைக்கொண்டு சோதனை செய்து குழாயின் நீளம் அதிகமாகும்போது சுருதி குறைவதையும், குழாயின் நீளம் குறையும்பொழுது சுருதி உயர்வதையும் அறியலாம். மேலும் குழாயின் வாய் அகன்றோ அல்லது குறுகியோ இருப்பதினால் குழாயினுள் இருக்கும் காற்று நிரையின் சுருதி பாதிக்கப்படாமலிருப்பதைக் காணலாம். நிற்க, கம்பியைப் போலக் காற்று நிரையும் பல கண்டங்களாகத் துடிப்பதை உணர்ந்தார்கள். எனவே, காற்று நிரை துடிக்கும்பொழுது குழாயின் நீளத்திற்குண்டான பிரதான துடிப்புடன்/Fundamental Vibration/பல்வேறு பரிவாரத் துடிப்புக்களும் சேர்ந்தே காணப்படும் என்று அறியலாம். இதனால் காற்று நிரையிலிருந்து வெளிப்பட்ட ஒலியில் ஒரு பிரதான சுருதியோடு பல்வேறு பரிவார சுருதிகளும் கலந்தே வரும் என்று தெரிந்துகொள்ளலாம். குழாய்களில் ஒருபுறம் திறந்த குழாய்களென்றும்/Closed pipes/இருபுறமும் திறந்த குழாய்களென்றும்/Open pipes/இருவகை உண்டு. ஒருபுறம் திறந்த குழாயிலிருந்து வெளிவரும் ஒலியில் பிரதான சுருதியுடன் ஒற்றைப்படையான பரிவார சுருதிகளே/Odd harmonic/தோன்றுவதையும், இருபுறமும் திறந்த குழாயிலிருந்து வெளிவரும் ஒலியில் பிரதான சுருதியுடன் எல்லாப் பரிவார சுருதிகள் தோன்றுவதையும் சோதனையினால் அறிந்தார்கள். ஒலியின் பண்பு இப்பரிவார சுருதிகள் சூழ்ந்திருப்பதைக்கொண்டே நிர்ணயிக்கப்படுவதால் இரண்டுவகைக்குழாய்களுக்கு உண்டான ஒலிப்பண்பு வேற்றுமை உணரலாம். நிற்க, இக்குழாய்கள் ஒலியின் முழக்கத்தை அதிகரிக்கும் சாதனங்களாகவும் /Resonators/உபயோகப்படுகின்றன. இதை விளக்க ஒரு சோதனையைப் பார்ப்போம். இருபுறமும் திறந்து அகன்றதொரு கண்ணாடிக் குழாயின் ஒரு முனையைத் தண்ணீரிலே முழுக்கவும். குழாயின் வாயினருகே ஒரு இசைக் கவட்டை/Tuning fork/த்தட்டிப் பிடித்துக் கொண்டு நீரினுள் முழுகி நிற்கும் ஆழத்தைத்

தக்கவாறு மாற்றினால், ஒரு நிலையில் குழாயிலுள்ள காற்று நிரையின் துடிப்புஎண்ணும் இசைக்கவட்டின் துடிப்புஎண்ணும் ஒன்றாகி, குழாயிலிருந்து பெருமுழக்கத்துடன் ஒலி கிளம்புவதைக் கவனிக்கலாம்.

இனி, காற்றுவாத்தியங்களை எடுத்துக்கொள்வோம். அவற்றுள் தலைசிறந்து விளங்கும் புல்லாங்குழல் வாத்தியத்தை முதலில் எடுத்துக்கொண்டு அதன் அமைப்பு, ஒலியின் பண்பு முதலிய விவரங்களைப்பற்றிச் சிறிது விசாரிப்போம். இது நம் நாட்டில் பெரும்பாலும் திரண்ட வடிவமுள்ள மூங்கில் குழாயினாலேயே செய்யப்படும். மேனாட்டார்கள் இதை வெள்ளி, பொன் முதலிய உலோகங்களிலும், கருப்பு மரத்திலும் /Ebonite/ செய்கின்றார்கள். இதன் குழாயின் ஒரு புறம் மட்டும் திறந்திருப்பதைக்கவனிக்கலாம். மூடிய முனைக்கருகே ஊதுவதற்கென்று இதில் அமைந்திருக்கும் துவாரத்தைக் கவனிக்கவும். இதை ஆங்கிலத்தில் /Mouth hole/ என்று கூறுவார்கள். இதைத்தாண்டி, திறந்த முனைவரை தொடர்ந்து இதில், வேறு துவாரங்களும் இருப்பதைக் கவனிக்கவும். இவற்றை விரல் துவாரங்கள் /Finger hole/ என்று சொல்லுவார்கள். மேனாட்டார் கையாளும் வாத்தியங்களில் ஊதும் துவாரமும், மற்றத்துவாரங்களும் ஒரேஅளவாக இருக்கும். ஆனால் நம் நாட்டில் வழங்கி வரும் வாத்தியங்களில் ஊதும் துவாரம்விரல்துவாரங்களைக்காட்டிலும் சற்றுப் பெரிதாகவே இருக்கும். விரல் துவாரங்களின் எண்ணிக்கை வாத்தியத்திற்கு வாத்தியம் வேறுபடுகின்றது. தென்னிந்தியாவில் எட்டு விரல் துவாரங்கள் கொண்ட வாத்தியத்தையே பெரும்பாலும் உபயோகித்து வருகின்றார்கள். பல்லடம் சஞ்சீவி ராவ் அவர்கள் உபயோகிக்கும் வாத்தியத்தில் ஒன்பது விரல் துவாரங்கள் இருக்கின்றன. வாசிப்பதற்குக்குறைந்தது ஆறு துவாரங்கள் இருந்தால் போதுமானது. எனினும் நன்றாக வாசிப்பதற்குப் பின்னும் துவாரங்கள் வேண்டியிருப்பதை உணர்ந்தார்கள். வாசிக்கும் பொழுது விரல்களினால் துவாரங்களை மூடித்திறக்க வசதி இருக்குமாறு வாத்தியத்தைமட்டமாகப் பிடித்துக்கொண்டும், மூடிய முனைக்கருகிலுள்ள துவாரத்தின் விளிம்பைக்கீழ் உதட்டுடன் சேர்ந்திருக்குமாறு வைத்துக்கொண்டும் எதிர் விளிம்பில் படுமாறு வாயிலிருந்து காற்றை ஊதுவார்கள். வாயிலிருந்து வெளிப்படும் காற்று பீறலும், குழாயினுள்ளிருக்கும் காற்று நிரையும் சேர்ந்து துடித்து இவ் வாத்தியத்தில் பெரு முழக்கத்துடன் ஒலியை எழுப்புகின்றன. எல்லாத் துவாரங்களையும் மூடிவிட்டால் துடிக்கும் காற்று நிரையின் நீளமும் குழாயின் நீளமும் ஏறக்குறைய ஒன்றாகிவிடும். ஊதும் துவாரத்திற்கும் குழாயின் திறந்த முனைக்கும் உள்ள தூரமே இப்பொழுது துடிக்கும் காற்று நிரையின் நீளமாகும். இருபுறமும் திறந்த குழாய்க்குண்டான துடிப்பையே எப்பொழுதும் காற்றுநிரை மேற்கொள்ளும். மேலும் இப்பொழுது வெளிப்படும் ஒலியின் சுருதியே வாத்தியத்தின் ஆதார சுருதி ஆகும். விரல் துவாரங்களை மூடித் திறப்பதினால் மேள கர்த்தாக்களுக்குண்டான ஸ்வரங்களைப் பிடிக்க முடிகிறது. எவ்வாறு இவ்வாத்தியத்தில் ஒலி எழும்புகிறது என்பதைப்பற்றி இப்பொழுது சற்று விவரமாக ஆராய்வோம். வெகுநாள்வரை "ஹெல்ம்ஹோல்ஷ்" (Helmholtz) என்ற விஞ்ஞானி கூறிய சித்தாந்தத்தையே மேற்கொண்டிருந்தார்கள். இவர், விளிம்பை நோக்கி ஊதப்படும் காற்று பீறலை ரீடுக்கு (Read) ஒப்பிட்டு, அது குழாயினுள்ளிருக்கும் காற்று நிரையின் துடிப்பு எண்ணுக்குத்தக்கவாறு துடிப்பதாகக் கூறினார். எனவே காற்று நிரையில் உடனியக்கம் ஏற்பட்டு, பெரு முழக்கத்துடன் ஒலி கிளம்புவதாகக் கருதினார். தற்காலம் இவரது சித்தாந்தம் தவறு என்று கைவிடப்பட்டு வேறு சித்தாந்தம் விஞ்ஞானிகளிடையே வழங்கிவருகின்றது. அதை இப்பொழுது விளக்குவோம். ஓடும் வாய்க்காலில் ஒரு குச்சியைச் செங்குத்தாக நீரினுள் முழுக்கிக்கொண்டிருந்தால் குச்சியின் பக்கத்தில் இருபுறங்களிலும் நீர்ச்சுழிகள் ஏற்படுவதையும் சற்றுநேரத்தில் அவை கலைந்து நீருடன் போவதையும் கவனிக்கலாம். கலைந்து செல்லும்போது இச்சுழிகள் குச்சியை மாறிமாறி அசைத்து ஆட்டிச்செல்லும். இதைப்போலவே காற்றிலும் ஏற்படுகிறது. இரண்டு தந்திமரங்களினிடையேயுள்ள கம்பியைத் தாண்டி, காற்றுச் செல்லும்போது, கம்பிக்கு அருகிலுள்ள காற்றில் சுழிகள் ஏற்பட்டு அவை கம்பியை அசைக்கின்றன. இதனால் கம்பி உடனியங்கித் துடித்து ஒலியை எழுப்புகிறது. இவ்வொலியைத்தான் நாம் தந்திமரங்களினடியில் கேட்கிறோம். இதே நிகழ்ச்சிதான் புல்லாங்குழலிலும் ஏற்படுகிறது. ஊதும் துவாரத்தின் விளிம்பில் காற்றுப் பீறல் மோதுவதால் காற்றில் சுழிகள் ஏற்பட்டுக் கலைகின்றன. இவற்றின் பொழுதும் (Period of eddies) குழாயினுள்ளிருக்கும் காற்று நிரையின் துடிப்புப் பொழுதும் ஒன்றுபட்டு வாத்தியத்திலிருந்து முழக்கத்துடன் ஒலி உண்டாகிறது. மேலும் நாம் ஊதும் காற்றின் வலிமையை அதிகரிப்பதினால் குழாயிலுள்ள காற்றுநிரையின் பிரதான துடிப்பை இரண்டு மடங்காகவோ அல்லது மூன்று மடங்காகவோ செய்யலாம். வாத்தியக்காரர்கள் ஏன் கீழ்ஸ்தாயியில் வாசிக்கும்போது காற்றுக்கு வலிமை குறைவாகவும், மேல் ஸ்தாயியில் வாசிக்கும்போது வலிமை அதிகமாகவும் கொடுக்கிறார்கள் என்பதை இப்பொழுது அறியலாம். மேனாட்டார்கள் வாசிக்கும் வாத்தியங்களில் விரல் துவாரங்களை மூடித்திறப்பதற்கு ஒரு சாதனத்தைக் கையாளுகிறார்கள். ஹார்மோனியம், பியானோ, வாத்தியங்களைப் போல் கமகம் இல்லாமல் ஸ்வரங்களைப் பிடிப்

பதற்காகவே இச்சாதனத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் வாத்தியக்காரர்கள் விரல்களின் உதவியால் மட்டும் துவாரங்களை மூடித் திறப்பதால் கமகங்களுடன் ஸ்வரங்களை வாசிக்க முடிகின்றது, இனி இவ்வாத்தியத்தின் ஒலிக்குண்டான பண்பைச் சிறிது கவனிப்போம். இதன் ஒலிக்குண்டான துடிப்பை விஞ்ஞானிகள் படம் பிடித்து, சோதனைகள் நடத்தி, இதன் ஒலியில் மிகக் குறைவான பரிவார சுருதிகளே இருப்பதைக் கண்டார்கள். மேலும் இப்பரிவார சுருதிகள் வாத்தியம் செய்யப்பட்ட பொருள்மீதும் குழாயின் சுற்றளவின் மீதும் சார்ந்திருப்பதைக்கண்டார்கள். சுற்றளவு சிறியதாய் இருக்கும்பொழுது, ஒலியில் இன்னும் சில பரிவார சுருதிகள் தோன்றுவதைக்கண்டார்கள். தோன்றினாலும் அவை வன்மையற்று இருப்பதை உணர்ந்தார்கள். புல்லாங்குழல் நாதத்தில் பரிவார சுருதிகள் மிகக்குறைந்த எண்ணிக்கையுடனும், வன்மையற்றும் இருப்பதினாலேயே எல்லா வாத்தியங்களைக் காட்டிலும் இதன் ஒலி மிருதுவாக அமைந்திருக்கிறது என்று கருதுகின்றார்கள். பெரும்பாலும் இவ்வாத்தியத்தின் ஒலியில் ஒன்று அல்லது இரண்டு பரிவார சுருதிகளே இருக்கின்றன. இதன் நாதத்திற்குத் தேனைப்போல் ஒரு கவர்ச்சி உண்டு. இவ்வாத்தியத்தில் மத்தியமகால, திரிகால சங்கதிகள் வாசித்துக்கேட்க உத்ஸாகமாயிருக்கும். பல்லடம் சஞ்சீவிராவ் ராகம் வாசிக்கும்பொழுது கீழ்ஸ்தாயி மேல்ஸ்தாயி இரண்டிலும் அடுத்தடுத்து வாசித்துக் கொண்டுவந்து இரண்டையும் ஒன்று சேர்ப்பதைக்கேட்டு ஆனந்திக்காதவர்கள் இருக்க மாட்டார்கள். காலஞ்சென்ற சரபசாஸ்திரிகள் வாசித்ததைக்கேட்டுப் பரவசமாகாதவர்கள் கிடையாது என்றுகூடச் சொல்லுவார்கள். எனவே பக்தி சங்கீதத்திற்கும் சோகரஸத்திற்கும் இவ்வாத்தியத்தின் நாதம் தனி உரிமை பெற்றிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

காற்று வாத்தியங்களில் மற்றொரு வகையான ரீடு வாத்தியங்களை இப்பொழுது எடுத்துக்கொள்வோம். குழாய்களுடன் ரீடைச் சேர்த்து இவ்வகை வாத்தியங்கள் வாசிக்கப்படும். ஒலி உண்டாகும் விஷயத்தில் புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களுக்கும் இவற்றுக்கும் வித்தியாசம் உண்டு. இவற்றில் காற்று பீறலும் காற்று நிரையும் சேர்ந்து துடிப்பதற்குப்பதிலாக, ரீடும் காற்றுநிரையும் சேர்ந்து துடிக்கின்றன. ரீடு வாத்தியங்களில் ஒற்றை ரீடு வாத்தியங்கள் என்றும், இரட்டை ரீடு வாத்தியங்கள் என்றும் இருவகை உண்டு. நிற்க, புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களுக்கும் இவற்றுக்கும் உள்ள மற்றொரு வித்தியாசத்தைக் காணலாம். பெரும்பாலும் இவ்வாத்தியங்களின் குழாய்கள் கூர் உருளை வடிவமாக இருக்கும். ஆனால் மேனாட்டார்களின் கிளாரினெட் வாத்தியத்தின் குழாய் திரண்ட வடிவமாயிருப்பதைக் கவனிக்கலாம். இதில் ஒற்றை ரீடே உபயோகப்படுகிறது. அவர்களால் மிகவும் கொண்டாடப்படும் ரீடு வாத்தியம் இதுவே ஆகும். இவ்வாத்தியங்களுக்குக் குழாய்களை மரத்திலோ அல்லது உலோகத்திலோ செய்வார்கள். அவர்கள் நாகசுரத்தைப்போல் இரட்டை ரீடு வாத்தியங்களையும் உபயோகிக்கிறார்கள். அவற்றில் ஓபோ என்ற வாத்தியத்தை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். இப்பொழுது ரீடு வாத்தியங்கள் எல்லாவற்றிற்கும் உதாரணமாக நம்முடைய நாகசுர வாத்தியத்தை எடுத்துக்கொண்டு அதன் அமைப்பு, அதன் ஒலியின் பண்பு முதலியவற்றின் விவரங்களைக் கவனிப்போம்.

இவ்வாத்தியம் தென்னிந்தியாவிலேயே அதிக பிரபலமாய் இருப்பதைக் கவனிக்கலாம். இதில் குழாய் கூர் உருளைவடிவங்கொண்டிருப்பதையும், கூரிய முனையில் ரீடு சேர்க்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். இது பெரும்பாலும் ஆச்சாமரம் என்பதிலேயே செய்வது வழக்கம். வெள்ளி, தங்கம் இவற்றில் செய்த வாத்தியங்களைக்காட்டிலும் மர நாகசுரத்தையே அதிகமாகக் கையாளுவார்கள். இதன் அடியில் வாய் அகன்ற மற்றொரு குழாய் சேர்க்கப்படும். இதை வேண்டுமென்றபோது கழற்றிவிடலாம். வாத்தியத்தின் நீளம் ஆதார சுருதிக்குத் தக்கவாறு அமைந்திருக்கும். குழாய்களிலுள்ள காற்று நிரைகளின் துடிப்புகளைப் பார்க்கும்பொழுது நீளமான குழாய்கள் குறைந்த சுருதியையும் குட்டையான குழாய்கள் மிகுந்த சுருதியையும் பெற்றிருக்கும் என்று பார்த்தோம். எனவே சுருதி அதிகமாயுள்ள நாகசுர வாத்தியங்கள் குட்டையாயும் சுருதி குறைவாய் உள்ள வாத்தியங்கள் நீளமாயும் இருப்பதை உணரலாம். குட்டை நாகசுரங்களைத் திமிறி நாகசுரங்கள் என்று கூறுவார்கள். திமிறி நாகசுரங்களை வாசிப்பது கஷ்டம். காலஞ்சென்ற செம்மனார் கோவில் ராமசாமி பிள்ளை, 6, 6-$\frac{1}{2}$ கட்டை சுருதியுள்ள திமிறி நாகசுரத்தைத்தான் வாசிப்பது வழக்கம். தற்காலம் பிரபலமாய் இருக்கும் திருவெண்காடு சுப்பிரமணியன் 2 கட்டை சுருதிகொண்ட நாகசுரத்தையே கையாளுவதைக் கவனிக்கலாம். புல்லாங்குழலைப்போல இவ்வாத்தியங்களில் மேளகர்த்தாக்களின்படி ஸ்வரங்களைப் பிடிக்க விரல் துவாரங்கள் இருப்பதைப் பார்க்கலாம். இதில் ஒரே வரிசையில் எட்டு துவாரங்களும் சற்று விலகி குழாய் அடியின் இருபுறத்திலும் இரண்டு இரண்டாக நான்கு துவாரங்களும் ஆக மொத்தம் 12 துவாரங்கள் இருப்பதைக் கவனிக்கலாம். சுருதிக்காக இத்துடன் சேர்ந்து வாசிக்கப்படும் ஒத்துவாத்தியமும் இதைப்போலவே அமைந்திருப்பதையும் அதில் விரல் துவாரங்கள் இல்லாமலிருப்பதையும் பார்க்கலாம். மேலும் ஒத்து வாத்தியத்தின் அடிப்பாகத்தின் வாய்

அகலம் நாகசுரத்தைவிடக் குறைவாக இருப்பதைக் காணலாம். இனி இவ்வாத்தியங்களில் சேர்க்கப்படும் ரீடைப்பற்றி விசாரிப்போம். இது ஒருவகைப் பிரம்பில் செய்யப்பட்ட சிறியதொரு நறுக்கு. முதலில் இதை உருண்டை வடிவமாய் எடுத்துக்கொண்டு, பின்பு சப்பட்டையாகச் செய்து, இதன் அடியில் நரம்பை இறுகக் கட்டிவிடுவார்கள். நறுக்கின் நெடுகச் சிறு சந்து தோன்றும். சப்பட்டையான பாகத்தை மேல் உதடு கீழ் உதடுகளினால் கவ்விக்கொண்டு ஊதினால், நறுக்கிலுள்ள சந்தின் வழியாக அக்காற்று வெளிவர, நறுக்கின் பக்கங்கள் துடித்து ஒலியை எழுப்புகின்றன. சந்து சிறியதானால் குறைந்த அளவுக்குக் காற்றை அனுப்பினால் போதும். சந்து பெரியதானால் காற்றை அதிகமாக அனுப்பவேண்டியது. நறுக்கு நன்றாகத் துவளும் தன்மையைப் பெற்றிருந்தால் வாசிப்பதற்குச் சௌகரியமாயிருக்கும். இதற்காகப் பல நறுக்குகளை நூலில் சேர்த்து வாத்தியத்தில் கட்டித் தொங்குவதைக் கவனிக்கலாம். நறுக்கின் சந்தை அவ்வப்போது சரிப்படுத்திக்கொள்ள கூரானதொரு தந்த ஊசியையும் சேர்த்துக் கட்டிக்கொள்வார்கள். இப்பொழுது இதில் ஒலி உண்டாகும் விதத்தைக் கவனிப்போம். ரீடைச் சொருகி அதை உதடுகளினால் கவ்விக்கொண்டு கைவிரல்கள் துவாரங்களை மூடித் திறக்க வசதியாய் இருக்குமாறு பிடித்துக்கொண்டு, காற்றை லேசாக அனுப்புவார்கள். இதனால் நறுக்கின் பக்கங்கள் துடிக்கும். அதன்பொருட்டு நறுக்கிலுள்ள சந்து மூடித் திறக்கப்படுகிறது. நறுக்கு இவ்வாறு துடிக்கும்பொழுது குழாயிலுள்ள காற்றுநிரையின் சுருதியை மேற்கொள்ளுகிறது. எனவே பெருமுழக்கத்துடன் ஒலி எழும்புகிறது. இதில் குழாய் கூர் உருளை வடிவங் கொண்டிருந்தபோதிலும் அதன் காற்றுநிரையின் துடிப்பில் எல்லாப் பரிவார சுருதிகள் கலந்து வருகின்றன. மரநாகசுரத்தின் ஒலியில் இருப்பதைக்காட்டிலும் வெள்ளி, தங்கம் இவற்றில் செய்த நாகசுரங்களின் நாதத்தில் அதிக பரிவார சுருதிகள் அமைந்திருக்கும். இதுபோன்ற வாத்தியங்களின் ஒலியைச் சோதித்துப் பார்த்ததில் பரிவார சுருதிகள் அதிக வன்மையுடன் வெளிவருவதைக்கண்டார்கள். இதனால்தான் இவ்வாத்தியத்தின் நாதம் விறுவிறுப்பாக இருக்கிறது. வெகு தூரத்திலும் இவ்வாத்தியத்தைக் கேட்பதிலிருந்து இதன் நாதத்தின் பெரு முழக்கத்தை உணரலாம். இதன் நாதம் மிருதுவாய் இராமல் விறுவிறுப்பாகவும் முழக்கத்துடனும் இருப்பதினால் சிலர் இவ்வாத்தியத்தை விரும்பமாட்டார்கள். இதன் பொருட்டு இவ்வாத்தியத்தில் பிடிக்கும் பிடிப்புக்களை வாய்ப்பாட்டு வித்வான்கள் பாடும்போது நாகசுர வழி என்று இழிவாய்க்கூறுவதும் உண்டு. வாசிக்கும்பொழுது உதடுகளினால் ரீடைக் கவ்வும் மாதிரியையும், வாய் வைத்துக்கொள்ளும் விதத்தையும் நன்றாகப் பயின்று நம் சங்கீதத்திற்கு வேண்டிய கமகங்களையும், கார்வைகளையும் பிரயோகிக்கக் கற்று, மணிக்கணக்காக இராகங்களை வாசிப்பார்கள். மேனாட்டார்கள் கையாளும் ஓபோ வாத்தியத்தில் விரல் துவாரங்களை மூடித் திறக்க ஒரு சாதனத்தை இயற்றியிருக்கிறார்கள். அவர்கள் சங்கீதத்திற்கு ஸ்வரங்களை அசைவில்லாமல் பிடிக்கவேண்டியிருப்பதால் இச்சாதனத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். நாகசுரத்தின் ஒலிப்பண்பைப்போல் இதன் ஒலிப்பண்பும் அமைந்திருக்கிறது.

கடைசியாகக் காற்று வாத்தியங்களில் மற்றொரு வகையான பித்தளை /Brass/வாத்தியங்களைச் சிறிது கவனிப்போம். அவர்களது ஆர்செஸ்ட்ரா/Orchestra/வாத்திய கோஷ்டிகளில் சிறிதும் பெரிதுமாக இவ்வகையைச் சேர்ந்த அநேக வாத்தியங்கள் இருப்பதைக்காணலாம். பல ஸ்தாயிகளில் வாசிப்பதற்கென்று வாத்தியங்களை இயற்றியிருக்கிறார்கள். இவற்றில் நாகசுரம், ஓபோ போன்ற வாத்தியங்களில் உள்ள ரீடுகளுக்குப் பதிலாக மேல் உதடு கீழ் உதடு இரண்டையும் ரீடுபோல வைத்துக்கொண்டு ஒலியை எழுப்புகின்றார்கள். இவ்வாத்தியங்கள் எல்லாவற்றிலும் குழாய்களை மடக்கி வளைந்து செல்லுமாறு அமைத்திருப்பதைக் காணலாம். வாத்தியத்திலுள்ள குழாயின் நீளத்தை மாற்றுவதற்கு பிச்சான்களைக் கொண்டுள்ள சாதனம் ஒன்றை இயற்றியிருக்கின்றார்கள். இவ்வாத்தியங்களின் ஒலியிலும் அநேக பரிவார சுருதிகள் அதிக முழக்கத்துடன் வெளிப்படுவதையும் விஞ்ஞானிகள் கண்டார்கள். மேலும் ஒலியின் குழாயின் கனத்தையும், அதன் வாய் அகலத்தையும் பொருத்திருப்பதைக்கண்டார்கள். இவ்வாறு சோதனைகள் நடத்தி எல்லா வகைக் காற்று வாத்தியங்களின் ஒலிக்குண்டான பண்பை அறிந்திருக்கின்றார்கள்.

[திருச்சி அகில இந்திய ரேடியோ நிலயத்தில் ஒலிபரப்பப்பட்ட பேச்சின் சாரம்.]

இந்தியச் சிறு கதைகள் (ஹிந்தி—1)

பிராயச்சித்தம்

(ஸ்ரீ பகவதி சரண் வர்மா எழுதியது)

எம். எல். சபரிராஜன் மொழிபெயர்த்தது.

●

அந்தப் பூனைக்கு யார் மேலாவது அன்பு உண்டு என்றால், ராமுவின் மனைவி மேல்தான். ராமுவின் மனைவிக்கு யார்மேலாவது வெறுப்பு உண்டுஎன்றால், அந்தப் பூனை மேல்தான்.

அவள், மாமியார் வீட்டிற்கு வந்து இரண்டு மாதமேயாகிறது. கணவனுக்கும் மாமிக்கும் இதமாக நடந்துவந்தாள். வயது பதினாறு. வீட்டுச் சாவி அவளிடமிருந்தது. சொன்னதைச் செய்ய வேலைக்காரர்கள். அவள் இட்டது சட்டம். மாமியார் பூஜை புனஸ்காரத்தில் ஆழ்ந்திருந்தாள்.

என்ன இருந்தாலும் பதினாறு வயதுப் பெண்தானே! ஞாபக மறதியாகப் பண்டகசாலைக் கதவைத் திறந்துபோட்டுவிட்டு, உட்கார்ந்தவாறு தூங்கி விழுந்துகொண்டிருப்பாள். பூனைக்கு நல்ல சமயம். நெய்யையும் பாலையும் ஒரு கை பார்க்கும். அவள் பாலை இறக்கி வைத்துவிட்டு, சமையற்காரியிடம் காயகற கொடுக்கப் போவாள். பால் திடீரென்று மறையும். பானைக்குள் வெண்ணெய் வைத்துவிட்டுப் போனால், அது இருந்த இடம் தடம் தெரியாமல் போகும். பூனையின் தொந்தரவால் அவள் காலந்தள்ளுவதே கஷ்டமான நிலைமைக்கு வந்து சேர்ந்தது. அவள், கணவனுக்காகவென்று மிகவும் சிரமப்பட்டுத் திரட்டுப்பால் செய்து, அதைக் கிண்ணத்தில் வைத்துவிட்டுப் போவாள். கணவன் வந்து பார்த்தால், கிண்ணம் காலியாகவிருக்கும். கடையிலிருந்து பலகாரம் வரும். அவள் வெற்றிலை போட்டுக்கொண்டிருப்பாள். பூனை பலகாரத்தைத் தின்றுவிட்டு ஓடிப்போகும்.

அவள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். கடைசியில், 'ஒன்று இந்தப் பூனை வீட்டிலிருக்க வேண்டும், அல்லது நான் இருக்கவேண்டும்' என்ற முடிவிற்கு வந்தாள். இரு பக்கத்திலும் யுத்த முஸ்தீப்புக்கள் ஆரம்பமாயின. பூனை பிடிக்கும் கூண்டு வந்தது. அதில் பால், வெண்ணெய், எலிகள்-பூனைக்குப் பிடித்தமான இதர பொருள்கள் எல்லாம் இருந்தன. ஆனால், பூனை அதைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பூனையின் பேராசை அதிகமாகவாக, அவளுடைய நிலைமை மோசமாயிற்று. மாமியாரிடமிருந்து நாள்தோறும் வசவு; கணவனுக்கு ருசியற்ற உணவு.

ஒரு நாள் அவள் பாயசம் செய்து, அதைப் பூனைக்கு எட்டாத உயரத்தில் வைத்துவிட்டு, வெளியே போய் வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தாள். பூனை வந்தது. மேலே பார்த்தது. வாசனை மூக்கைத் துளைத்தது. உயரம் எவ்வளவு இருக்கிறது, தாவமுடியுமா? என்று யோசனை செய்தது. அவள் மாமியாருக்கு வெற்றிலை கொடுக்கப் போனாள். பூனை தாவிப் பாய்ந்தது. அதனுடைய கால் பாயசம் வைத்திருந்த பாத்திரத்தின்மேல் பட்டதால், பாத்திரம் கீழே விழுந்தது.

சத்தம் கேட்டதும், வெற்றிலையை மாமியருகே போட்டுவிட்டு அவசர அவசரமாக ஓடி வந்தாள் அவள். பாத்திரம் சின்னாபின்னமாக உடைந்துகிடக்கிறது. பாயசம் முழுவதும் தரையில் கொட்டிக்கிடக்கிறது.

அவளுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. எப்படியாவது பூனையைக் கொன்றுவிடுவது என்று முடிவுசெய்தாள். அன்றிரவு முழுவதும் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. யோசனை செய்துகொண்டே இருந்தாள். பொழுது புலர்ந்தது. பூனை வாசலருகே உட்கார்ந்தவாறு, அவளை வெகு அன்பாகப் பார்த்தது.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. எழுந்தாள். அவள் எழுந்ததும், பூனை மெதுவாக நழுவியது. அவள் ஒரு கிண்ணத்தில் பால் வார்த்து, கிண்ணத்தைக் கதவு நிலைமேல் வைத்துவிட்டு, அப்பாற்போய், கையில் ஒரு பலகையை எடுத்து வைத்துக்கொண்டு, திரும்பிப் பார்த்தாள். பூனை கிண்ணத்தைக் காலிசெய்வதில் முனைந்திருந்தது. நல்ல தருணம். அவள் பூனைமீது பலகையை வீசியெறிந்தாள். பேச்சு மூச்சில்லை. சுருண்டு கீழே விழுந்தது பூனை.

ஓசையைக் கேட்டதும். சமையல்காரியும் வேலைக்காரியும் ஓடிவந்தார்கள். மாமியார் பூஜையை நிறுத்திவிட்டு வந்தாள், நாட்டுப்பெண் குற்றவாளியைப்போலத் தலைகுனிந்திருக்கிறாள்.

"அட ராமா, பூனை செத்துப்போச்சு! அம்மா, பூனையைக் கொன்ற பாவம் பெரும் பாவம் அல்லவா?" என்றாள் வேலைக்காரி.

"பூனையைக் கொல்லுவதும் மனிதனைக் கொல்லுவதும் ஒன்றுதான். பூனையைக்

... பாவம் தீரும் வரை நான் சமையல் செய்யமாட்டேன் அம்மா" என்றாள் சமையல் காரி.

"நீங்கள் சொல்லுவது சரி. பூனையைக் கொன்ற பாவம் தீரும்வரை தண்ணீர்கூடக் குடிக்கக்கூடாது. (மருமகளை நோக்கி) ஏண்டி பெண்ணே, உனக்கு ஏன் புத்தி இப்படிப் போச்சு?" என்றாள் மாமியார்.

"அதெல்லாம் இப்போது சொல்லி என்னம்மா பலன்? நடக்கிறதைப் பார்க்கவேண்டும். சாஸ்திரியாரை அழைத்துக்கொண்டு வரட்டுமா?" என்றாள் வேலைக்காரி.

மாமியாருக்கு உயிர் வந்ததுபோல இருந்தது.

"சரி, ஓடு. போய் அழைத்துக்கொண்டுவா" என்றாள்.

அண்டை வீட்டுக்காரர்களுக்கு விஷயம் தெரிந்தது. ஏதோ ஒரு பெரிய கோரம் நிகழ்ந்துவிட்டதாக எல்லோரும் வருந்தினார்கள். நாட்டுப்பெண் தலைகுனிந்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

சாஸ்திரியார் பூஜை செய்துகொண்டிருந்தார். வேலைக்காரி போய் விஷயத்தைச் சொன்னதும், அவர் எழுந்து மனைவியருகே போய், சிரித்துக்கொண்டே "சரி, இன்று சமையல் பண்ண வேண்டாம். லாலா காசிராம் வீட்டிற்கு வந்திருக்கும் புது நாட்டுப்பெண் பூனையைக் கொன்றுவிட்டாள். பிராயச்சித்தம் செய்வதற்காக போகிறேன். பக்குவ அன்னத்தை ஒரு கை பார்க்கலாம்" என்றார்.

நன்கு பழுத்த உருளைக்கிழங்கைப் போன்ற உருவம், சாஸ்திரியாருக்கு. தொந்தியின் அகலம், உயரத்தில் பாதியிருக்கும்.

முன்னொரு சமயம், மதுராபுரியிலே, ஐந்து சேர் உணவு சாப்பிடக்கூடியவர்கள் யார் என்று தேடிப் பார்த்தபோது சாஸ்திரியாருக்கே முதல் பரிசு கிடைத்ததாகச் சொல்லுகிறார்கள்.

சாஸ்திரியார் வந்தார். சபை கூடியது. மாமியார், வேலைக்காரி, கிருஷ்ணன் தாயார், ராமுவின் தமக்கை, சாஸ்திரியார் அங்கத்தினர்கள்.

"பூனையைக் கொன்றவர்களுக்கு என்ன நரகம் கிடைக்கும், சாஸ்திரியாரே?" என்று கேட்டாள் கிருஷ்ணன் தாயார்.

சாஸ்திரியார் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தவாறு, "நேரம், காலம் தெரியவேண்டாமா? அது தெரியாமல் எப்படிச் சொல்லுவது?" என்றார்.

"காலை ஏழு மணி இருக்கும்" என்றாள் வேலைக்காரி.

சாஸ்திரியார் ஒவ்வொரு பக்கமாக புரட்டிப் பார்த்தார், வரிகள் மேலும் எழுத்துக்கள் மேலும் விரலை வைத்து கவனமாகப் பார்த்தார். தலையில் கையை வைத்துக்கொண்டு சற்று நேரம் யோசனை செய்தார். முகத்திலே கவலைக்குறி படர்ந்தது. "ராம், ராம், காலையிலே, பிரம்ம முகூர்த்தத்திலே, பூனைக்கொலை! ஐயோ இதற்குக் கும்பீபாக நரகம் அல்லவா விதித்திருக்கிறது!" என்றார்.

மாமியின் கண்ணில் ஜலம் வந்தது. அவள் மெல்லிய குரலில், "சாஸ்திரியாரே, என்ன செய்யலாம்? சொல்லுங்கள்" என்றாள்.

சாஸ்திரியார் சிரித்துக்கொண்டே, "அம்மா, கவலை வேண்டாம். நாங்கள் புரோகிதர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு எதற்காக இருக்கிறோம்? பிராயச்சித்தம் செய்தால், பாவம் தொலைகிறது" என்றார்.

"அதற்காகத்தானே உங்களை அழைத்து வரச்சொன்னது. என்ன செய்யலாம்? சொல்லுங்கள்" என்றாள் மாமி.

"என்ன செய்யலாம் என்று கேட்கிறீர்கள்? தங்கத்தாலே பூனை செய்து தானம் பண்ண வேண்டும். தானம் பண்ணுகிறவரை, பாவம் நீங்காது. பிறகு, இருபத்தோரு நாள்வரை பூஜை செய்யவேண்டும்"

"சாஸ்திரியார் சொல்லுவது சரி" என்றாள் கிருஷ்ணின் தாயார்.

"அப்படியானால், எத்தனை தோலா எடையில் பூனை செய்வது? என்று வினவினாள் மாமி.

சாஸ்திரியார் தொந்தியைத் தடவிக்கொண்டே சொன்னார்; "அம்மா செத்துப்போன பூனையை நிறுத்துப்பார்த்து, அது எவ்வளவு நிறையிருக்கிறதோ அதே நிறையில் தங்கத்தாலே பூனை செய்து தானம் பண்ணவேண்டும் என்று சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறது. ஆனால், இப்போது நடப்பது கலிகாலம் அல்லவா?...... அதற்குத் தகுந்தபடி நாம் மாற்றிக்கொள்ளலாம். குறைந்த பட்சம் இருபத்தொரு தோலா எடையிலாவது இருக்கவேண்டும். இது என் அபிப்பிராயம். அப்புறம் உங்கள் யோசனை என்னவோ?"

மாமி திகைத்துப்போனாள். அவள் வியப்பினால் கண்களை அகல விரித்து, "அட ராமா இருபத்தொரு தோலா எடையிலா? ஒரு தோலா எடையில் செய்தால் போதாதா?" என்றாள்.

சாஸ்திரியார் விழுந்து விழுந்து சிரித்தார். "ஒரு தோலா எடையிலா! நன்றாயிருக்கிறது. பேஷ்! கருமித்தனம் அதிகமாயிருக்கிறது. நாட்டுப்பெண்மேல் இருக்கிற பாவம் நீங்க வேண்டுமானால் பணத்தைப்பற்றி யோசியாதீர்கள்."

வாத விவாதம் ஆரம்பமாயிற்று. கடைசியில் விஷயம் பதினொரு தோலாவில் முடிந்தது.

பின்னர், பூஜாராதனை விஷயம்.

"அம்மா, இதில் என்ன கஷ்டம்! புரோகிதர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு நாங்கள் எதற்காகத்தான் இருக்கிறோம்? நானே பூஜையை நடத்திவிடுகிறேன். பூஜைக்கு வேண்டிய சாமான்களைமாத்திரம் என் வீட்டிற்கு அனுப்பிவிடுங்கள்" என்றார் சாஸ்திரியார்.

"சாமான் விவரம் சொல்லுங்கள்" என்றாள் மாமி.

"அப்படி ஒன்றும் அதிகமாக வேண்டியதில்லை. பத்து மணு கோதுமை, ஒரு மணு அரிசி, ஒரு மணு பருப்பு, நாலு மணு கடலை, இருபது மணு நெய், ஒரு மணு உப்பு, அவ்வளவுதான் காரியம் முடிந்தது."

"அம்மாடியோ, இவ்வளவு சாமானா? ஏராளமான ரூபாயாகும் போலிருக்கிறதே!" என்றாள் மாமி.

"இதற்கும் குறைந்த செலவில் பூஜை நடத்த என்றால் முடியாதம்மா. பூனையைக்கொன்ற பாவம் எவ்வளவு பெரிய பாவம், தெரியுமா? செலவைப் பார்க்கிறீர்களேயொழிய அவள் தலையில் விழுந்திருக்கும் பாபத்தைப் பார்க்கவில்லையே! இது பிராயச்சித்தம், விளையாட்டல்ல. பாவம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு செலவும் ஆகத்தான் செய்யும். நீங்கள் ஒன்றுமில்லாதவர்களா, என்ன? கொஞ்ச ரூபாய் செலவானால் குடியா முழுகிப் போகும்?"

கூடியிருந்தவர்கள் எல்லோரும் சாஸ்திரியார் பேச்சை ஆமோதித்தனர்.

வேறு வழி இல்லாமற்போகவே, மாமி கவலை தோய்ந்த குரலில் "ஹூம்......இனி நீங்கள் சொல்லுகிறபடி ஆடவேண்டியதுதானே!" என்றாள்.

"அப்படியானால், நான் போகிறேன். உங்களுக்கு இஷ்டமில்லாதபோது நான் சொல்லி என்ன புண்ணியம்?" என்று சொல்லிக்கொண்டே சாஸ்திரியார் எழுந்தார். எல்லோரும் அவரைக் கெஞ்சவே, மறுபடி உட்கார்ந்தார்.

மாமியார் அவரைப்பார்த்து "சொன்ன சாமான் எல்லாம் அனுப்பிவைக்கிறேன். அப்புறம் என்னவேண்டும்?" என்று கேட்டாள்.

"இருபத்தோரு நாள் பூஜை நடத்துவதற்கு இருபத்தொரு ரூபாய் கொடுத்துவிடவேண்டும். பூஜை முடிகிறவரை தினந்தோறும் இரண்டு வேளையும் ஐந்தைந்து பிராம்மணர்களுக்குச் சாப்பாடு போடவேண்டும். இதில் ஒன்றும் கஷ்டமில்லை. நான் ஒருவனே இர... ...ள சாப்பிட்டால் போதும், ஐந்து பிராமணர்கள் சாப்பிட்ட பலன் கிடைக்கும். கவலை வேண்டாம்" என்றார்.

சமையல்காரி சிரித்துக்கொண்டே "சாஸ்திரியார் சொல்லுவது சரி. அவருடைய தொந்தியைப் பாருங்கள்" என்றாள்.

"சரி, நேரமாகிறது. பிராயச்சித்தத்திற்கு வேண்டிய சாமானெல்லாம் வாங்குங்கள். எங்கே, பதினொரு தோலா தங்கம் கொடுங்கள். நான் போய் பூனை செய்துகொண்டு வருகிறேன். அதற்குள் பூஜை வேலை நடக்கட்டும். பூஜைக்காக.........

சாஸ்திரியார் பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் வேலைக்காரி ஓட்டமாக ஓடிவந்தாள். எல்லோரும் திடுக்கிட்டனர். மாமியார் திகிலடைந்து "என்னடி என்ன?" என்று வினவினாள்.

வேலைக்காரி சிரித்துக்கொண்டே, "அம்மா, பூனை ஓடிப்போய் விட்டது!" என்றாள்.

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

முத்திமார்க்கம்

எஸ். கிருஷ்ணன்.

●

இரவு பத்துமணியிருக்கும். நான் பால் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போய் மேஜைமேல் வைத்தேன். என் கணவர் ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருந்ததால் நான் அங்கே வந்ததைக்கூடத் தெரிந்துகொள்ளவில்லை. நான் அவர் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டுச் சொன்னேன்—வாசித்தது போரும், பால் குடித்துவிட்டுப் படுத்துக்கொள்ளுங்கோ.

என்னை ஒரு முறை பார்த்தார். அவருடைய முகத்திற்கியற்கையான புன்னகை மலர்ந்தது உதடுகளில். அது அவருடைய "டிரேட் மார்க்." அதனால்தான் அவருக்குக் காலேஜ் மாணவர்கள் 'புரொபஸர் ஸ்மைலிங் மணி' என்றுபெயர் வைத்திருந்தார்கள். கண்களைக் கசக்கிக்கொண்டே கேட்டார். யார்? டாக்டர் ஐயாவா?

நான் குறும்பாக "ஏது? கண்ணுக்கும் கோளாறு போலிருக்கு?" என்றேன்.

"இருந்தால்தான் என்ன? டாக்டரம்மா புருஷனுக்கு வியாதிவந்தால் கவலையென்ன?" என்றார். பிறகு பாலைச் சாப்பிட்டுவிட்டு டம்ளரைக் கீழே வைத்த வண்ணம் சொன்னார்—"நான் நாளுக்கு நாள் பால் சாப்பிட்டுப் பெருத்துக்கொண்டே போகிறேன். நீ என்னடா என்னு நாளுக்குநாள் இளைத்துத் துரும்பாய்ப் போகிறாய். குண்டூரிலே இருந்ததைவிட மோசமாயிருக்கிறது உன் உடம்பு. என்னைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுப் பூரித்து ஊதிவிடுவாயோ என்று பயந்ததுபோக, ஆடிக்காற்றிலே பறந்துபோய்விடுவாயோ என்று பயமாயிருக்கிறது."

"பயப்படாதேயுங்கோ, நானும் கூடிய சீக்கிரம் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு வீட்டிலே உட்காரப்போகிறேன். என்னாலே ஊர்ஊராய் அலையவே முடியவில்லை. உங்களையும் நன்றாகக் கவனிக்கமுடியவில்லை" என்றேன். உண்மையில் என் வீட்டு டெலபோனுக்கு இரவும் பகலும் ஓய்வே கிடையாது. அதிலும் புருஷனோடே இருக்க ஆசைப்பட்டுச் சென்னைக்கு மாற்றிவந்தபிறகு ஓய்வே இல்லை. என் கணவரும் முந்நூறு ரூபாய் சம்பாதித்தார். சொத்துவேறே இருக்கிறது. வேலையை விடலாம் என்றே எண்ணினேன்.

அதுவரையில் சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த என் கணவர், எழுந்து என் அருகே வந்து, என் தோள்மேல் ஒரு கையை வைத்துக்கொண்டு, மற்றொரு கையால் என் முகத்தை வெளிச்சத்தின் பக்கம் திருப்பிக்கொண்டு சொன்னார்-"நீ வேடிக்கையாய்ப் பேசுகிறாயா? நிஜமாகவா ஐயா? உன் தொழில் எவ்வளவு உத்தமமான தொழில் தெரியுமா ஐயா? எத்தனை உயிர்களைக் காப்பாற்றுகிறாய்? எவ்வளவுபெயர் முகத்திலிருந்து கண்ணீரைத் துடைத்துச் சிரிப்பு வரவழைக்கிறாய்? அதைப் பார்த்தால் உனக்கு ஏற்படும் ஆனந்தத்தில் உன் சிரமமே தெரியாதே ஐயா, நீ ராஜிநாமா ஒன்றும் பண்ணிவைக்காதே."

இதற்குள் அடுத்த அறையில் டெலிபோன் மணி அடிக்கவே நான்போய் ரிஸீவரைக்கையில் எடுத்தேன்.

ஒரு அவசரமான கேசுக்காக என்னை ஆஸ்பத்திரிக்குவரச் சொல்கிறாளாம் சீப் ஸர்ஜன். வாசலில் படுத்திருந்த டிரைவரை எழுப்பிவிட்டு என் கணவர் சொன்னார்—"போய்விட்டு வா. நீ வருகிற வரையிலும் நானும் வாசித்துக்கொண்டிருப்பேன் அனேகமாய்."

"இல்லை நீங்கள் படுத்துக்கொள்ளுங்கோ. நான் சீக்கிரமாய் வந்துவிடுகிறேன். கதவு திறந்தே இருக்கட்டும்" என்று கூறிக்கொண்டு நான் ஆஸ்பத்திரிக்குச்சென்றேன்.

அங்கே சீப் ஸர்ஜன் சொன்னாள்—"உங்களை டிஸ்டர்பு பண்ணவேண்டாம் என்று நானே வருவதாகச்சொன்னேன் இவரிடம். ஆனால் இவர் பிடிவாதமாய் டாக்டர் ஐயாதான் வர வேண்டும் என்று நோயாளி சொன்னதாகச் சொல்லி உங்களைக் கூப்பிடச்சொன்னார்" என்று வராண்டாவில் நின்றிருந்த ஒருவரைக் காட்டினாள். அவர் சுமார் அறுபது வயதுடையவர் மாதிரி தெரிந்தது. என்னைப் பார்த்ததும் "வாங்கோ அம்மா! காரிலே ஏறுங்கோ. உங்கள் காரை வீட்டுக்கு அனுப்பிவிடுங்கோ. என் காரிலேயே உங்களைத் திரும்ப, பங்களாவுக்குக் கொண்டுபோய்விடுகிறேன்." என்றார்.

நான் அவர் காரில் ஏறிக்கொண்டு என் காரை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்.

கார் மாம்பலத்துக்குச் சென்று நின்றது. நான் காரிலிருந்து கீழே இறங்கினேன். அங்

தக் கிழவர் டிரைவரிடம் காரை அங்கேயே நிறுத்தச் சொல்லிவிட்டு என்னை அழைத்துக் கொண்டு பங்களாவிற்குள் சென்றார்.

ஒரு காற்றோட்டமான அறையில் நோயாளி படுத்திருந்தாள். அவள் கண்களை மூடிக் கொண்டு நாங்கள் அறைக்குள் வந்ததுகூடத் தெரியாமல் படுத்திருந்தாள். கிழவர் அவள் அருகே போய்—"மீனு, டாக்டர் வந்திருக்கிறார்" என்றார். என்னைப் பார்த்துச் சொன்னார்—"ஒரு வருஷமாய் இதேமாதிரி படுத்த படுக்கைதான். போன வருஷம் சிங்கப்பூரிலேயிருந்து கப்பலிலே வருகிறபோது ஒரு நாள் ஏதோ குளிர்காய்ச்சல் மாதிரி வந்தது. உடம்பு அப்புறம் சீராகவேயில்லை. திருநெல்வேலியிலே உள்ள டாக்டர்கள் அத்தனை பெயர்களும் பார்த்து என்ன வியாதியென்றேசொல்ல முடியாமல் தவித்தார்கள், ஈசுவர கிருபையிருந்தால் உங்களாலாவது குணமடைய வேண்டும். பணத்தைப்பற்றிக் கவலையே வேண்டாம். எனக்கு இவள் ஒரே பெண். அமோகமான சொத்திருக்கிறது. உங்களுக்கு எவ்வளவு பணம் வேணுமானாலும் தருகிறேன். எப்படியாவதுஎன்மீனு பிழைத்தால்போதும்."

அவருடைய கண்களில் நீர் நிறைந்திருந்தது. நான் அவரிடம், "கொஞ்சம் வெளியே போங்கோ. நோயாளியைப் பரிசோதனை செய்ய வேண்டும்" என்றேன்.

நோயாளியின் அருகே போய் நான் உடம்பைப் பரிசோதனை செய்தேன். இருபத்தைந்து வயதுதான் இருக்கும் நோயாளிக்கு. உடம்பில் எலும்புகள் யாவும் தோலைப் பிய்த்துக் கொண்டு வெளிக்கிளம்பத் தயாரானவைகள் போல் நின்றன. இருமல் இல்லை. கோழை துப்புவதில்லை. ஆனால் இடைவிடாத காங்கை. நாடியோ மிகப் பலஹீனமாயிருக்கிறது. இனி அதிக நாள்,—ஏன் இருபத்துநான்குமணி நேரத்துக்குமேல்—தாங்காது என்று தோன்றிற்று. நான் செய்யக்கூடியது ஒன்றுதான். அவளுக்குக் கடைசிக் காலத்து வேதனையைக் குறைக்க ஏதாவது மருந்து கொடுக்கலாம், இப்படியே யோசித்துக்கொண்டு பெட்டியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ஏதோ மருந்து எழுதினேன். அதைக் கவனித்த மீனுவின் உதடுகளில் புன்னகை மலர்ந்தது. சொன்னாள்—"அம்மா, எனக்கு மருந்தே தேவையில்லை. என் வருத்தத்தைச் சொல்லலாம் என்றுதான் உங்களைக் கூப்பிட்டேன். நீங்களும் ஒரு பெண்மணி. இருதய உணர்ச்சி என்பதை அறிய உங்களால் முடியும். என் வியாதி உடலைப்பற்றியதன்று. மனத்தைப்பற்றியது. இனிமேல் நான் பிழைக்கவேமாட்டேன்."

சுவரிலிருந்த மணி பதினொருமுறை அடித்துவிட்டு மௌனத்தை மேற்கொண்டது. பிறகு "என்கதையைச் சற்றுப் பொறுமையாய்க்கேட்கிறீர்களா டாக்டர்?" என்று என்னையே பார்த்தாள்.

அவளுடைய வேதனை நிறைந்த சொற்கள் என் உள்ளத்தின் ஆழத்தைத் தொட்டுவிட்டன. நான் அவள் அருகே போய்க் கட்டிலில் தலைப்பக்கமாய் உட்கார்ந்து கொண்டு அவளுடைய பறந்துகொண்டிருந்த தலைமயிரைப் பின்னால் ஒதுக்கினேன். சற்று விசிராந்தி ஆனதும் அவள் சொல்லலானாள்—"டாக்டர், உங்கள் கைபட்டதும் வெகுகாலத்துக்குமுன் ஏழு வயதில் என் தாயார் என்று ஒருத்தி இருந்தது நினைவுக்கு வருகிறது. நாடகத்தில் வரும் பாத்திரங்கள்போல் என் வாழ்க்கை நாடகத்தில் தோன்றி மறைந்த முதற் பாத்திரம் என் தாய். பத்து வயதிலேயே அவளைத் தின்றுவிட்டேன். பிறகு எனக்குத் தாய்க்குத் தாயாய் இருந்தவர்—இதோ வெளியே இருக்கிறாரே என் தகப்பனார்—இவர் தான். சிறுவயசிலேயே சிங்கப்பூரில் நல்ல ரப்பர் எஸ்டேட்டில் மானேஜராயிருந்தார். நிறையப் பணம் சம்பாதித்தார். நான் பிறந்ததும் வேலையைவிட்டு ஊரோடேவந்துவிட்டார். என் தாயார் போனபின் அவர் என்னை விட்டுப் பிரியவேமாட்டார். மறு விவாகமும் செய்து கொள்ளவில்லை. நான் அருமையாய் வளர்ந்தேன். திருநெல்வேலியில் வீட்டில் ஒரு பாட்டி சமைத்துப் போட்டுக்கொண்டிருந்தாள். தந்தையார், நான், கிழவி மூன்று ஜீவர்கள் அந்த வீட்டில்.'

"எவ்வளவு இன்பமான நாட்கள்! ஒருகால் எதிர்காலத்தின் துயரம் இன்னும் பயங்கரமாய்த் தோன்றவேண்டுமென்றுதானோ என்னவோ அந்த நாட்கள் அவ்வளவு இன்பமயமாய் இருந்தன?'

"என் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான சம்பவம் நடந்தது என் பதினொன்றாவது வயதில் தான். நான் நான்காம்பாரத்தில் படித்து வந்தேன்.'

"ஒரு நாள் காலை என் தகப்பனார்—இன்றைக்குப் பள்ளிக்கூடம் போகவேண்டாம். உன்னைப் பார்க்கப் பிள்ளை வீட்டுக்காரா வருவா ஒன்பதுமணி ரயிலுக்கு. குளிச்சுட்டு நல்ல புடவையாய்க் கட்டிக்கொள். அழகாய்த் தலையைவாரிப் பின்னிக்கொள். நெற்றியிலே குங்குமம் இட்டுக்கொள். இதெல்லாம் உன் தாயார் கவனிக்கவேண்டியதுபோக அவள் விட்டுவிட்டுப் போய்விட்டாள். அதுக்காக நீ தாயில்லாப் பிள்ளைமாதிரி இராதே என்னம்மா! என்றார். அவர் கண்கள் முத்து முத்தாய்க் கண்ணீர்த் துளிகளை உகுத்தன.'

"இரண்டுமாதங்களாகவே என் கலியாணத்துக்காகப் பல ஜாதகங்களும் கடிதங்களும் வீட்டுக்கு வந்தது எனக்குத்தெரியும். அதனால் ஆச்சரியம் ஏற்படவில்லை எனக்கு.'

''ஆகட்டும் அப்பா' என்று கூறிவிட்டு நான் குளிக்கச் சென்றேன்.'

''நான் குளித்துவிட்டு வந்து ஊதாப்புடவை யொன்றை உடுத்தி நீல ரவிக்கையையும் போட்டுக்கொண்டு தகப்பனார் முன் போனேன். கேட்டேன்-'அப்பா, நன்னாயிருக்கா?' என்று. 'தகப்பனார் சிரித்துக்கொண்டு சொன்னார்-எனக்கென்ன தெரியும் மீனா? வருகிறவன் அல்லவா அதைச்சொல்லணும்.' ஒன்பதரை மணிக்கு என் தகப்பனார் பிள்ளையையும் அவருடன்வந்த மாமனையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார். தகப்பனார் சமையல் அறையில் நின்றிருந்த என்னைக்கூப்பிட்டுக் கூடத்துக்குப்போய் நமஸ்காரம் செய்யச் சொன்னார். நான் கூடத்துக்கு வருகிற போதே மாப்பிள்ளையாய் வரப்போகிறவரை ஒருமுறை பார்த்தேன். அந்த ஒரு நிமிஷத்தில் அவர் உருவம் எப்படி அவ்வளவு ஆழமாய்ப் பதிந்துவிட்டது? இன்னும் யோசிக்கிறேன். எத்தனையோ பெயர்களை இந்த வாழ்க்கைப் பிரயாணத்தில் பார்த்தாயிற்று. ஆனால் அவர் கணவராக வரப்போகிறார் என்ற எண்ணத்தினால்தானோ என்னவோ அந்த உருவம் அவ்வளவு ஆழமாய்ப்பதிந்துவிட்டது.அவரும்என்னை நிமிர்ந்து பார்த்தார். ஒரு நிமிஷம் எங்கள் இருவர் கண்களும் கலந்தன. நான் வெட்கித் தலை குனிந்துவிட்டேன். போய் நமஸ்காரம் செய்துவிட்டு வருவதற்குள் உடம்பு ஒரு முறை வியர்த்து விட்டது. தகப்பனார் சொன்னார்—'போய்க்காப்பி எடுத்துக்கொண்டுவா.' என்று.

''நான் உள்ளே போனதும் அடுத்தவீட்டு மாமி கேட்டாள்—'உனக்கு மாப்பிள்ளை பிடித்திருக்கிறதாடி?' என்று. நான்என்ன பதில் சொல்ல? வெட்கம் என் நாக்கை அடைத்து விட்டது. அதே நிமிஷம் வெளியே அவர் சொல்லிக்கொண்டிருந்தார்—என் அபிப்பிராயம் மட்டும் போதுமா மாமா? பெண்ணுடைய அபிப்பிராயம் என்னவோ?'

''என் தகப்பனார் என் அருகே வந்து காப்பி டம்ளர் இரண்டைத் தம் கையில் எடுத்துக் கொண்டு கேட்டார்—'இவனுக்கு வாழ்க்கைப் பட உனக்கு இஷ்டம்தானா மீனா? உன் அம்மா கிட்டச்சொல்வதுபோல் சங்கோசப்படாமல் சொல்லு. எனக்காகச் சொல்லாதே. அவள் இருந்து கேட்கவேண்டியது. நாளைக்கு நீ எவ்விதத்திலும் மனக்குறைகொள்ளக்கூடாது. உன் மனத்தைவிட்டுச்சொல்லு.'

''நான் அவருடைய நீர் நிறைந்த கண்களைப் பார்த்தேன். ஒரு நிமிஷம் என் தாய் என்முன் நிற்பதுபோலவே தோன்றிவிட்டது. சொன்னேன்—'எனக்குப் பிரியம்தான் அப்பா.' அந்த நிமிஷம் கண்ணீருக்கிடையே என் தந்தையின் முகத்தில் தோன்றிய மலர்ச்சிபோல் அதற்கு முன்னும் பின்னும் கண்டதில்லை.'

''எனக்கு அன்றே விவாகம் நிச்சயமாகிவிட்டது. என் தகப்பனார் சொல்லிக்கொண்டார்-'உன்னை அவன்கிட்ட ஒப்படைத்துவிட்டு நிச்சிந்தையாய்ப்போய்க் காசியிலோ ராமேசுவரத்திலோ காலத்தைத் தள்ளணும்,என்றார். ஆனால் இன்னும் அவரைவிட்டுச் சிந்தை நீங்கவில்லை. நாளைக்கு நான் போய்விட்டால் ஏற்படும் வருத்தத்தை எப்படித் தாங்கப்போகிறாரோ?''

நோயாளி மௌனமானாள். அவள் கன்னங்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. நான் அவளையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். சில நிமிஷங்கள் வரையில் அறையில் மௌனம் நிலவியது. அதை மீனாதான் குலைத்தாள். அவள் தன் சரிதையைத் தொடர்ந்தாள்—''என் விவாகம் மிக விமரிசையாக நடந்தது. ஆனால் ஐந்தாம்நாள் ஒருவாக்குவாதம் என் மாமனாருக்கும் என் தகப்பனாருக்கும் இடையே மூண்டது. இருவரும் முன்கோபிகள். தகப்பனார் எடுத்த பட்டைப்பற்றி மாமனார் சொன்னார்—'இதைவிட ஒரு புடவையையே எடுத்துப் பட்டென்று கொடுத்திருக்கலாம்.' என் தகப்பனார் உயர்ந்த பனாரஸ் பட்டுத்தான் வாங்கியிருந்தார். அதைப் பற்றி இவ்வளவு கேவலமான வார்த்தைகள் அவரால் பொறுக்கமுடியவில்லை. 'சரிதான் உங்களுக்குத் தனியாய்த் தறிபோடணுமோ? பட்டுக்கும் புடவைக்கும் வித்தியாசம் தெரியவில்லையாக்கும்?'

''என் மாமனார் ஆத்திரத்துடன் சொன்னார்-இனிமேல் உம்மகிட்ட இருந்துதான் கற்றுக் கொள்ளணும். உம்மோடே சம்பந்தம் வைத்துக்கொள்ளவந்த என் புத்தியைத்தான் செருப்பால் அடிக்கணும்.'

''ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு. என் தகப்பனார் ஆத்திரத்துடன் சொன்னார்—'இன்னும் தவறிவிடவில்லை. உம்ம இஷ்டம்போலப் பட்டு எடுத்துத்தரும் மனிதர்களோடே சம்பந்தம் வைத்துக்கொள்ளும். உம்ம மாதிரி மனுஷாகிட்ட என்பெண் எப்படித்தான் குடித்தனம் நடத்தப்போகிறாளோ? அற்பமான பட்டிலேயே இவ்வளவு கோபம் வந்தால் அப்புறம் பெரிய விஷயங்களிலெல்லாம் எப்படி நடந்துகொள்ளமாட்டீர்?''

''சரி, பட்ட அவமானம் போதும் போய் வருகிறோம்'' என்று கூறிக்கொண்டு என் மாமனார் இறங்கியிருந்த விடுதிக்குச் சென்று விட்டார்.

''நான் தகப்பனாரிடம் சொன்னேன்—'அவர்கள் கோபித்துக்கொள்வது ஸகஜம், ஆனால் பெண்ணைப்பெற்ற நீங்கள் பொறுத்துத்தானே ஆகணும்.'

''பெண்ணைப்பெற்றால் என்ன? உனக்கு என்ன குறைவிருக்கிறது? நீ கவலைப்படாதே. மறுபடியும் படி, உனக்கு விவரம் தெரிந்த பிறகு இஷ்டம்போற்செய். இவ்வளவு அற்

பர்களிடம் மட்டும் போகாதே, தெரிகிறதா? என்றார் தகப்பனார் ஆத்திரத்துடன். அவர் முன் என்னால் ஒன்றுமே சொல்லமுடியவில்லை. ஒருவரிடம் பாசம் ஏற்பட்டுவிட்டால் அதை மறக்கமுடியுமா என்று கேட்க நா எழவில்லை. ஆனால் மனம் மட்டும் என் மாமனார் காலில் போய் விழலாமா என்று தூண்டியது.'

"கடைசியில் என் தகப்பனாரிடமே அவர்களைச் சமாதானப்படுத்தச் சொன்னேன். 'அப்பா' எப்படியாவது போய்ச்சொல்லுங்கோ. என்று கெஞ்சினேன். அவர் புறப்படுவதற்குள் என் மாமனார் வந்தவர்கள் எல்லோருடனும் வண்டியில் புறப்பட்டுச்சென்றார். என் கணவர் ஆயினும் என்னிடம் சொல்லிக்கொள்ள வருவார் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அவரால் தகப்பனார் சொல்லைத்தட்டமுடியவில்லையோ என்னவோ போய் விட்டார்'

"ஒருமாதமாகிவிட்டது. ஆடிப்பண்டிகைக்கு என் தந்தையிடம் சொல்லிப்பணம் அனுப்பச் செய்தேன். ஆனால் பணம் திரும்பி வந்துவிட்டது. அவர்கள் ஊரிலேயே இல்லையாம். எங்கே போனார்கள் என்று யாருக்கும் தெரியாதாம்'

"என் தகப்பனார் என்னை அழைத்துக்கொண்டு சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கே என் சிறிய தகப்பனார் இருந்தார். என்னை, 'கான்வென்டி'ல் சேர்த்தார். எனக்கு மனத்தில் சந்தோஷமேயில்லை. என் துயரத்தை மறப்பதற்காகத்தான் படித்தேன். புத்தகத்தைக் கையில் எடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவருடைய அழகிய முகம்தான் கண்முன் தோன்றும். கண்களில் நீர் நிறைந்துவிடும்.'

"சிலசமயம் வீட்டில் இப்படிப் புத்தகத்தின் முன் கண்ணீருடன் இருக்கும் என்னைப் பார்த்துத் தகப்பனார் கேட்பார்—என்ன அம்மா?'

"'அவ்வளவு வருத்தமான கட்டம் புத்தகத்தில்' என்பேன் நான். நாளுக்குநாள் மனத்தில் அமைதியற்றுக்கொண்டே வந்தது.'

"பத்து வருஷங்கள் இப்படியே சென்றன. நான், பீ. ஏ. பரீக்ஷையில் தேறியிருந்தேன்.'

"ஜப்பான் அச்சு நாடுகளுடன் சேர்ந்ததும் என் தகப்பனார் தன் வீட்டை விற்றுப் பணமாக்கிவிட்டு என்னை அழைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டார்.'

"அன்று கப்பலில் ஏறுகையில் எங்கிருந்தோ ஒரு புதுநம்பிக்கை ஏற்பட்டது மனத்தில். கணவரை எப்படியாவது அடையலாம் என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். நம்பிக்கைதானே மனிதனுக்கு ஒரு ஆதாரம். மூழ்குகிறவன் துரும்பைப் பிடிக்கிறான். ஆனால் அது அவனைக் காப்பாற்றுகிறதா?'

பேச்சை நிறுத்திவிட்டு என்னையே கவனித்தாள் மீனா. மூச்சு வேகமாய் வந்துகொண்டிருந்தது. நான் சொன்னேன்—"அதிகமாய்ப் பேசவேண்டாம். இன்னொருநாள் சொல்லிக்கொண்டால் போகிறது."

"அந்த இன்னொரு நாள் கிடையவே கிடையாது ஐயா. இனிமேல்தான் சுவாரசியமான கட்டம். அதோ அந்தப் பெட்டியிருக்கிறதே, அதில் என்ன இருக்கிறதென்று என் தகப்பனாருக்குக்கூடத் தெரியாது. இதோ இந்தச்சாவியைக் கொண்டுபோய் நீ பெட்டியைத் திற" என்று சொல்லிக்கொண்டு அவள் தலையணைக்கடியிலிருந்து ஒரு சாவியை எடுத்து என் கையில் கொடுத்தாள். நான் போய்ப் பெட்டியைத் திறந்தேன். மேலாக ஒரு போட்டோ இருந்தது, ஆம், என் விவாகத்தின் போது எடுத்த. போட்டோவின் பத்திரிகைப் பிரதி. ஆச்சரியத்துடன் அதை எடுத்து மீனாவின் அருகே கொண்டுபோனேன். என்ன சொல்வதென்றே தெரியவில்லை திகைப்பினால்.

மீனா அந்தப் படத்தை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு சொன்னாள்—"ஐயா, நீ என் சக்களத்தி. இந்தப் போட்டோவைக் கப்பலில் ஒரு காகிதப் பொட்டலமாகக் கட்டியிருந்தார்கள் யாரோ, அதைக் கேட்டு வாங்கினேன். இதெல்லாம் என் தகப்பனாருக்குத் தெரியவே தெரியாது. அன்று முதல் நான் படுத்துவிட்டேன். என் நம்பிக்கைப் படகு உடைந்துவிட்டது. இந்த ஒருவருஷகாலமாய் என் மனத்தில் நிரந்தரமான போர். உன் சுகத்தில் குறுக்கிடலாமா வேண்டாமா உங்கள் மன அமைதியைக் குலைக்கலாமா என்ற கேள்வி. ஆனால் நாளுக்குநாள் நான் மோசமாகி வருவதை உணர்ந்தேன். இன்று காலையில் எழுந்தபோது யாரோ மனத்தில் சொல்வது போலிருந்தது—"இனிமேல் தயங்காதே, அப்புறம் உன்னால் பார்க்கவே முடியாது," என்று. பகல் முழுதும் யோசித்தேன். தற்காலத்துக்கு என்னைப் பார்ப்பதால் உங்கள் அமைதி குலையலாம். ஆனால் நாளடைவில்-சுவர்ணமயமான எதிர்காலத்தில்-இந்த என் சோகநாடகத்தை மறந்துவிடுவீர்கள். நான் உங்கள் நினைவுப் படலத்திலிருந்து விலகிக் கனவாகிவிடுவேன் நாளடைவில். அப்பொழுது நான் இன்று உங்களுக்குக் கொடுக்கும் மனக் கஷ்டத்தை மறந்திருப்பீர்கள். இருள் சூழ்ந்துகொண்டிருக்கும் ஒரு வாழ்க்கையில் ஒரு கணம் ஒளியைக்காட்டிய பெருமை உங்களைச்சாரும். இப்படி முடிவுகட்டித்தான் உன்னை அழைத்தேன். நீ யார் என்று என் தகப்பனாருக்குத் தெரியாது. வேறு டாக்டரை அழைக்கலாகாது, உன்னைத்தான் அழைக்கவேண்டுமென்று நான் பிடிவாதமாய்ச் சொன்னேன். அவள் வந்தால் ஒருகால் நான் பிழைத்தாலும் பிழைத்துவிடுவேன் என்று சொல்லி அப்பாவை அனுப்பினேன். அவர் 'எதைத்தின்றால் பித்தம் தீரும்'

என்று ஏங்கிக்கிடக்கிறார். நான் ஒரே பெண். உயிரையே என்மேல்வைத்திருக்கிறார் இத்தனை நாளாய். நாளைக்கு நான் போனபின் அவருக்கு யார் ஆறுதல் கூறுவார்களோ? அதிருக்கட்டும்; நான் முக்கியமாய்ச் சொல்லவந்த விஷயம் வேறு, அன்று கலியாணத்தின்போது பார்த்தது என்புருஷரை. நன்றாகக்கூட பார்க்கவில்லை. இரண்டுவார்த்தை பேசினதில்லை. அவரை ஒரு முறை பார்த்து நான் ஏதாவது தவறு செய்திருந்ததாக அவர் எண்ணுகிறாரானால் அதை மாற்றவேண்டும். அவரிடம் விடை பெற்றுக்கொண்டு போனால்தான் போகிற இடத்தில் அமைதி கிடைக்கும். நீ எனக்காக அவரை ஒருமுறை அழைத்துவாயேன்! போய் எவ்வளவு சீக்கிரமாக முடியுமானாலும் அழைத்துவா'' என்று கெஞ்சினாள்.

ஆகட்டும் என்றேன் நான். வெளியே வந்து அவள் தந்தையிடம் சொன்னேன்—''நான் பங்களாவுக்குப் போய் மருந்து ஒன்று எடுத்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் மீனாவின் பக்கம் போங்கள்.''

கார் சென்றது. என் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின. கற்பனைச் சித்திரங்கள். மீனாவுக்கு என்ன குறைவு? ஒரு காலத்தில் அவளும் அழகுள்ளவளாய்த்தான் இருந்திருக்கிறாள். என் கணவரே சொல்லியிருக்கிறார். அவர் வாழ்க்கையில் ஒரு பெண் ஒரு மின்னல் போல் தோன்றி மறைந்தாளாம். பின்பு அவளைக் காணவேயில்லையாம். அன்று தகப்பனார் சொல்லைத் தட்டமுடியாமல் தவித்தாராம். கடைசியில் தந்தை போனபின் அவளைத் தேடினாராம். ஆறு வருஷங்கள் எதிர்பார்த்தாராம். நம்பிக்கையற்றபின்தான் ஒரு நாள், என் தகப்பனார் என்னை மணந்துகொள்ளும்படி கேட்டதற்கு ஒப்புக்கொண்டாராம். என் ஸ்தானத்தில் இருக்கவேண்டியவள் மீனா. என்னைப்போல் இல்லாமல் கணவருண்டு வீடுண்டு என்றிருந்திருப்பாள். என் கணவர் அவள் பணிவிடையிலும் அன்பிலும் மெய்ம்மறந்து வாழ்ந்திருப்பார். அவருடன் வாழக்கொடுத்து வைக்கவேண்டும். அவருடைய கபடற்ற குணம், சிரித்த முகம் இவைகளெல்லாம் எனக்குக் கொடுக்கும் இன்பம் மீனாவைச் சேரவேண்டியவை. என்னால் முடியுமானால் இன்று விலகி விடுவேன். உயிரைக் கொடுத்தாகிலும் மீனாவைக் காப்பாற்றுவேன்;

''இறும் உயிர்க்கும்,

ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால், அல்லன போல்

ஆவனவும் உண்டு சில.''

ஆனால் காலம் தவறிவிட்டது. விளக்கு, எண்ணெய் வற்றி அணையும்தறுவாயிலிருக்கிறது. இனி என்னால் முடிகிறதொன்றுதான், கடைசிக் காலத்தில் சொற்பச் சந்தோஷத்தைத் தான் கொடுக்கமுடியும். அதற்காவது சந்தர்ப்பம் வாய்த்ததே, அதுவே பெரிது.

நான் வீட்டை அடைந்து புருஷரை எழுப்பினேன். அவரிடம் சொன்னேன்—''மாம்பலம் வரைக்கும் போய் வருவோம் வாங்கோ. ஒரு முக்கியமான விஷயம். போகிறபோதே வழியில் சொல்லுகிறேன்.''

இருவரும் மாம்பலத்துக்குச் சென்றோம். அவரிடம் வழியில் எல்லா விஷயத்தையும் சொல்லிவிட்டுக் கடைசியில் சொன்னேன்—அவளிடம் நீங்கள் கொஞ்சங்கூட மனக் கசப்போ வருத்தமோ காட்டலாகாது. சுகமே அறியாத அவள் கடைசிக்காலத்திலாவது உங்கள் நிலவில் இன்பமாய்ச் செல்லவேண்டும்

''ஆகட்டும்'' என்றார் அவர். நான் எங்கோ படித்திருந்த பாட்டின் அடிகள்-''ஒருவருடைய துன்பத்தின் சமாதியில்தான் இன்னொருவருடைய இன்பம் உற்பத்தியாகிறது'' என்ற சொற்கள் என்மனத்தில் எழுந்தன.

மீனாவின் தந்தையிடம் மீனா விஷயத்தையெல்லாம் சொல்லியிருக்கவேண்டும். நாங்கள் இருவரும் காரிலிருந்து இறங்கினதும் அவர் என் கணவரிடம் சொன்னார்—''எல்லாவற்றையும் மறந்துவிடு மணி. என் பெண்ணுக்கு நான் செய்த துரோகத்துக்காகக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீயும் என்னை மன்னித்துவிடு'' அவருடைய கன்னங்களில் பெரிய பெரிய கண்ணீர் முத்துக்கள் உருண்டுகொண்டிருந்தன.

நாங்கள் யாவரும் மீனாவின் அறைக்குள் சென்றோம்.

என் புருஷரைக்கண்டதும் மீனா இரு கரங்களையும் தூக்கி அவரை நமஸ்கரித்துக்கொண்டு சொன்னாள்—''எழுந்து காலில் விழுந்து நமஸ்கரிக்க முடியவில்லை. அதற்குக்கொடுத்து வைக்கவில்லை.'' அவள் தொண்டை இடறியது. உதடுகளில் புன்முறுவல் மலர்ந்தது. என் கணவர் அவள் அருகே போய் உட்கார்ந்தார். நான் அறைக்கு வெளியே வந்து நின்றேன்.

தோட்டத்தில் பால்போன்ற நிலவு காய்ந்து கொண்டிருந்தது. செடிகளில் பூக்கள் இளந் தென்றலில் அசைந்தாடின.

''நாளைக்கு இந்தப்பூக்கள் வாடிவிடும். இன்றிருக்கும் சம்பவம் ஓய்ந்துபோகும். ஆனால் புதுப்பூக்கள் தோன்றும். இது உலக இயல்பு. உதிர்ந்த பூக்கள் உரமதாகும்......புது மலர்கள் பூத்திடும். அதேபோல் மீனா உதிர்ந்த பின்?.........''

என் யோசனையைக்குலைத்தது மீனாவின் தந்தையின் குரல். அவர் முதன் முதலாய்-''ஐயா

வா அம்மா, உன்னை மீனா கூப்பிடுகிறாள்'' என்று ஏகவசனத்தில் அழைத்தார்.

நான் உள்ளே சென்றேன்.

என் கணவர் மௌனமாய் மீனாவின் தலைப் பக்கம் நின்றிருந்தார். என்னைப்பார்த்ததும் மீனா சொன்னாள்—''வா, ஐயா; ஒரு முக்யமான விஷயம். இனிமேல் நான் போகிற வழி முக்தி தரும். ஆசையோடே போனால் மறுபிறப்பு உண்டாம் என்று நம் சாஸ்திரம் சொல்கிறது. இன்று என் ஆசை நிறைவேறிவிட்டது. எனக்குச் சாந்தி கிடைத்துவிட்டது'

''ஆனால் ஒரே ஒரு விஷயம். என் தகப்பனாருக்கு ஒரே ஆதாரமாயிருக்கும் நான் போனதும் அவருக்கு நீதான் ஆறுதல் சொல்லணும். அவரை ஒரு பாரமாக எண்ணலாகாது. அவரை உன் தந்தைபோல் எண்ணவேண்டும்'' என்று என் முகத்தையே பார்த்தாள். நான் சொன்னேன்—''ஆகட்டும் அக்கா, நீ ஒரு சிறிதும் கவலை படாதே.''

மீனா தன் தந்தையிடம் சொன்னாள்-''அப்பா, கடைசிக்காலத்தில் எனக்கு ஒரு தங்கை கிடைத்தாள். உங்களுக்கு ஒரு பெண் கிடைத்தாள். இவ்வளவு சுகமாய் நான் போகமுடியும் என்று கனவிலும் கருதியதில்லை. நீங்களும் வருத்தப்படதேயுங்கோ. மாப்பிள்ளையிடம் கோபம் வைத்துக்கொள்ளவேண்டாம். அவர் ஒரு பாவமும் அறியாதவர். உங்களுக்கு ஒரு குறைவுமில்லை. பெண், மாப்பிள்ளை, சொத்து எல்லாம் இருக்கின்றன. இன்று நான் அடையும் ஆனந்தம்போல் என்றுமே அடைந்ததில்லை. 'ஈசுவரா' என்று கூறிக்கொண்டு மீனா கண்களை மூடினாள். அவள் உதடுகள் கடைசி முறையாய் மலர்ந்தன.

ஃ ஃ ஃ

காலசக்கரம் சுழல்கிறது. நான் வேலையை ராஜினாமாச்செய்துவிட்டேன். மீனாவின் தகப்பனார் என் குழந்தை மீனாவை மடியில் வைத்துக்கொண்டு விளையாடுகிறார். அவர் பெண்ணைப்போலவே இருக்கிறாளாம் இவளும்.

எப்படியாவது அவர் மனம் சமாதானமாயிருந்தால் சரி.

போன்: 66 தந்தி: 'FLOWER'

கமர்ஷியல் எம்போரியம்

பட்டு, சுதேசி ஜவுளி வியாபாரம்,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

நவநாகரிகம் பொருந்திய பட்டு & நூல் புதுரகச்சேலை தாவணி ரகங்களும், எங்கள் சொந்தக் கைத்தறிகளிலேயே தயாரிக்கப்படுவதால் மிக உறுதியாகவும் நீடித்த உழைப்பிற்கு ஏற்றதாகவும் கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதமுள்ளதாகவும் கிடைக்கும்.

தவிர பீஸ்குட்ஸ் ரகங்களும், வாயில், ஷர்ட்டிங், கோட்டிங், காடா பீஸ் முதலியவைகளும் சுதேசி ஜவுளி வகைகளும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பார்க்கக் கோருகிறோம்.

South India Corporation [Madras] Limited,
Chakrapaniswami Koil South Gate,
KUMBAKONAM.

ங்கள் ஆபீஸ், வியாபாரம், குடும்பம்

இவைகளுக்கு

சிறந்த அச்சுக்கூடம்

★

காவேரி கலர் பிரஸ்

★

விதவிதமான எழுத்துக்கள்!

கவர்ச்சியான வேலைப்பாடு!!

எல்லாவித ஜாப் வேலைகளும் குறித்த காலத்தில்
குறைந்த சார்ஜில் நேர்த்தியாக செய்து
கொடுக்கப்படும்.

★

பெஸண்ட் ரோடு, :: கும்பகோணம்.

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.